To the older Seychellois, Mr Siva continues to manifest that life after retirement can again be gainfully and joyfully lived while contributing to the general positivity of our passage on this planet. The release of the book today does show in concrete terms, that there is much life to be lived after retirement.

Once again my hearty congratulations and all good wishes and blessings for the future to you all.

Sincerely,

Patrick Pillay

MINISTER

Mont Fleuri, P.O. Box 52, Victoria, Seychelles, Telephone: 38 80 14, e-mail: ministermoh.gov.sc Telefax: 226042

British High
Commission
Victoria

Oliaji Trade Centre
P.O. Box 161
Victoria
Seychelles

Tel: 00.248.283666
Fax: 00.248.283657
E-mail: bhcsey@seychelles.net

10 June 2003

Shri Vijaratnam Sivasupramaniam
PO Box 644
Victoria

Dear Mr. Sivasupramaniam,

I was most grateful to you for giving us a copy of your book "Decade of Growth" about the ***Arul Mihu Navasakthi Vinayagar*** Temple. I was most interested to read about the history of the temple and about the festivals. And the photographs fully complement the text. We will be delighted to keep the book in the High Commission library.

Thank you.

Yours sincerely,

Fraser Wilson

Fraser Wilson
High Commissioner

HINDU COUNCIL OF AFRICA

(A CO-ORDINATING AND REPRESENTATIVE BODY OF RELIGIOUS, CULTURAL AND SOCIAL HINDU NATIONAL ORGANISATIONS IN AFRICA.)
HINDU BHAVAN-MURANGA ROAD, NAIROBI
P.O. BOX 44831 NAIROBI, KENYA. TEL: (254- 2)749911 / 760075 FAX: 764423 Email: hck@Form-net.com

CHAIRMAN: MULJIBHAI L. PINDOLIA

SECRETARY: ~~ASHWIN K. RATEK~~ P.D.PATTNI

21st May, 2003

Shri. V. Sivasupramanian
P. O. Box 644,
Seychelles

Dear respected SRI SIVA,

I am glad to read through your book "DECADE OF GROWTH" aimed at HINDU / INDIAN parents and teachers giving a long history of their settlement, culture and religious back ground in Seychelles.

It is paramount to have this written and passed down from generation to generation to keep our culture and religion alive together while keeping the indiginous population of the country informed.

We, as Hindu Council of Africa intend the same together with having unity of our people, no matter which geographical area they come from, which language they speak or which path they follow.

Anekta Me Ekta is our *Mantra*, this with unity and services to humanity together with Hindus will give a better image socially and nationally too. This will also avoid *andhshradha* amongst Hindus.

I sincerely hope that your efforts will not go waste and pray to *Param Krupalu Parmatma* to give you more strength in carrying your ambitions further.

NAMASKAR AND Regards,

MULJIBHAI PINDOLIA
PRESIDENT

INSTITUTE OF ASIAN STUDIES,

Chemmanancheri, Chennai, Tamil Nadu.

Dear Thiru. V. Sivasupramaniam,

I am very much delighted to learn that your book entitled Decade of Growth is going to be released simultaneously in Seychelles, Colombo and Chennai on 24.5.2003. I am happy that this book will be an objective and veritable documentation of the history of the only Hindu temple in your beautiful country with its socio - cultural background.

Our temples are part of the superstructure of our society and they speak volumes about the glory and grandeur of our cultural and art heritage. It is really heartening that our Tamil diaspora wherever they migrate, spread our cultural achievements and establish our identity in addition to transforming their lands of migration into an earthy paradise by their sheer hard work and perseverance. The Tamil diaspora in Seychelles is no exception to this general trend.

I am sure that your country is one of the blessed lands to receive a great culture from India and this will definitely help to enrich the spiritual strength of this land in the midst of its linguistic plurality and cultural diversity.

It is a matter of pride and privilege for me to greet you at this great occasion of the release of your valuable work which is not merely the history of a temple but also the history of the multifarious

achievements of the Tamil diaspora as well as the symbiotic relationship and spiritual harmony that exist among them. Let the Almighty shower on you all blessings and prosperity and bestow you adequate courage and strength to undertake great works of this kind and to render meritorious services for the cause of mankind from this tiny but enchanting island.

With all good wishes.

Yours sincerely,

Dr.G. John Samuel
Founder - Director,
Institute of Asian Studies,
Chairman, ICSMS,
Chennai.

DECADE OF GROWTH - BOOK RELEASE
COLOMBO, SRI LANKA
24-5-2003

Mr. R. Namasivayam President Thiruketheeswaram Temple Restoration Society lights the Lamp with Mr. K. Arunasalam Principal Emeritus, Victoria College, Chulipuram. who presided, beside.

DECADE OF GROWTH - BOOK RELEASE
CHENNAI, TAMIL NADU, INDIA.
24.5.2003

Maravanpulavu K. Sachithananthan, pioneer of the Temple project hands over a copy to Mr. K. Rajaram, a former Minister, Tamil Nadu. Mr. Ravi Thamilvanan a leading Tamil publisher is in the centre.

Mr. G. Sivashanmugam Pillai, leading bussinessman of Seychelles one of the two prime movers of the temple project gets the first copy, while Mrs. Rajashree Gowtham of Chennai who gave the first ever Bharathanatyam recital in Seychelles in 1985, looks on.

DECADE OF GROWTH - BOOK RELEASE AT VICTORIA, Seychelles. on 24-5-2003

1. Dignitaries on the stage; the author welcomes.

2 & 3 Sections of the audience.

1. Ceremonial lighting of the lamp

2. Honouring of the author

3. Mr. R. Ganeshan garlends the Minister
4. Miss KAVINYA KARUNAKARAN - Invocation Dance

1. Guests on the stage.
2. Dr. V. Ramadoss felicitates the author.
3. The Indian High Commissioner felicitates the author.
4. Mrs. Sarojini Sivasupramaniam presents the book.
5. Mr. V. J. Patel receives a copy of the book from the author.

COMMENTS

Hon. DANNY FAURE

Education & Youth Minister

In his felicitation on the occasion of the book release in the National Theatre, the Minister observed, "I still cherish the happy memories that we had when we both started our teaching career together at St. Anne in 1985. From that time your simplicity and humbleness touched my heart. You served our youth well but now your valuable and noble book is serving the adult population also. You have done proud to our country. Remain humble and continue your good work for the people."

Messages received: **Decade of Growth Book Release, 24th May, 2003. Seychelles.**

The book, "Decade of Growth" authored by your goodself portrays well the history of the Tamils in Seychelles since last 200 years, and the birth of the Seychelles Hindu Kovil Sangam in 1984, which has been carrying on the cultural and spiritual revival in that country, with great success.

Swami Athmaghanananda, Ramakrishna Mission, Colombo.

The Managing Committee of the HINDU Council of Seychelles is privileged to felicitate the committed efforts of Mr. V. Sivasupramaniam, in releasing his book, "Decade of Growth." chronicling the saga of the Asian Tamil diaspora in the Seychelles, through Hindu religious activities, this welcome initiative and much needed book release by the author is highly appreciated.

Thank you very much for your book on the Hindu Temple. I will read it with great pleasure and I am sure it represents a great contribution to the history of our Islands.

Sir James R. Mancham, KBE.
Former President - Republic of Seychelles.

It was a pleasure to participate in the book release ceremony. I never knew that you have contributed so much to our religion and culture staying in a totally foreign land. Marvellous contribution.

D. Eassuwaren.
Honorary Counsel for Mauritius is Sri Lanka.

My Sincere appreciation goes out to everyone who have taken up this endeavour for promoting the culture of the land of India in Seychelles and I wish the very best in all your future endeavours.

Dr. V. GANAPATHI STHAPATI
Tamil Nadu.

Your book is a historical record. Each one of us should be proud of the way you have contributed to the progress and development of the Tamil Saiva community in particular and the Seychelles nation in general. Very minute details have gone into its making. You have been sober, cultured and moderate in your presentation.

Maravanpulavu K. Sachithananthan
Pioneer of the Temple Project,
Kaanthalakam, Chennai.

Congratulations on your meritorious deed in bringing out the book. Both of you are ambassadors of our great religion which is as old as the universe.

A. Karunakaran,
Retired Deputy Principal,
Jaffna Hindu College.

What a service! We believe that Navasakthi Vinayagar' s grace and inspiration had lead to the production of yet another worthy work that covers the decade of progress of Seychelles Hindu Kovil (Navasakthi Vinayagar Temple). Surely, it was for the reason that you will make the world known of the glories of Lord Vinayagar of Seychelles, that Navasakthi Vinayagar keeps your dwelling there. Very few are privileged like this. Your family is blessed since long. Contribution of this sort cannot be made, though aspired, but for the Blessings of God.

P. M. Sridharan and Aruna, Vancouver, Canada.

Happy to note that a book on our beloved temple is being accomplished specially by those who have been associated with the temple from the very beginning.

M. Satya, Sydney, Australia.

Kindly accept my hearty congratulations and greetings for the fine and painstaking work on creating such a historical record of the famous Vinayagar temple. The get up, the colour photographs, the contents and all are excellent and worth keeping.

V. Sabanayagam, M.A., B.Sc., M.Ed.,
Retired Professor (Teacher Edn.)
Vriddhachalam, Tamil Nadu.

I received your devoted publication, "Decade of Growth". Congratulations on the excellent work done by you and your family members in bringing about this noble edition.

You have covered the entire history, culture and heritage of the country as well the rich contribution made by the Tamils in the development of the economy and culture. It is astonishing to find that you have recorded and preserved the details of every single event that happened in dreaming, designing, dedication and developing the concept of building a Hindu temple in Seychelles.

The services rendered by every Hindu / Tamil in this direction has been remembered and acknowledged. Collection of photographs and their display is superb. We recollect with pleasure the nostalgic memories of those days when we were fortunate enough to be in Seychelles.

R. Janakiraman.
Bank of Baroda, Ernakulam, Kerala.

Congratulations on your hard work in promoting tradition, religion and culture in Seychelles. The booklet that you have written is an excellent piece of work. It is very interesting to read and for someone who has not visited the place it gives us a clear picture of how a multicultural society is living in harmony - 'unity in diversity', indeed.

Dr. (Mrs) Yoga Nanthakumar and family.
Aberdeen, Scotland.

My congratulations and my appreciation about your work which according to my philosophy amounts to service to humanity in the name of Almighty which man has brought into existence to explain what he could not explain thus far.

E. V. Chelvaratnam,
Toronto, Canada.

I would take this opportunity to comment on the exemplary work undertaken by you in the release of the noble book "Decade of Growth". This small booklet will for sure serve as a souvenir as commented by the personalities on the day of the book release. This venture set out by you will bring an insight for more minds to work on varied fields in an organised manner.

R. Jothinathan & Family,
Seychelles.

" You have don a wonderful job. A yeoman service to Saiva religion. - "DECADE OF GROWTH" is a worthy document and will remain a historical record on the spread and growth of Hinduism in the world. Jaffna Hindu is very proud of you."

K. Sivaramalingam,
Former Deputy Principal
- Jaffna Hindu College.

ஒரே நேரத்தில் மூன்று நாடுகளில் வெளியீட்டு விழா என்பது மிகவும் சிறப்பு.

- ரவி தமிழ்வாணன்.
மணிமேகலைப் பதிப்பகம், தியாகராய நகர், சென்னை.

நீங்கள் ஐயனார் கோவிலடியில் வசிக்கும் போது விசுவேச விநாயகர் ஆலய பரிபாலன சபையில் அங்கத்தவராக இருந்து அவ் வாலய வளர்ச்சிக்கு உறுதுணையாகப் பணியாற்றினீர்கள். புலம் பெயர்ந்து சீசெல்சு நாட்டில் கடந்த பல ஆண்டுகளாக வசித்த போதும் தாயகத்தில் விநாயகர் மேல் கொண்டுள்ள ஆழ்ந்த பக்தி காரணமாக விநாயகரின் திருவருள் உங்களை சிசெல்சிலும் விநாயகர் ஆலயத்துடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தியிருப்பது இறைவனின் திருவருளேயன்றி வேறில்லை.

- ஜெ. விசுவநாதன்
மேல் நீதிமன்ற நீதிபதி, வவுனியா.

Decade of Growth புத்தகம் மூலம் பகிர்ந்து கொள்ள விழையும் உங்களது இந்த இயல்பான ஆர்வம், உங்களைப் பூரணமானதொரு குருஸ்தானத்துக்கு இந்நாட்டிலே உயர்த்தி வைத்துள்ளது. பல சுவை யான செய்திகள், சம்பவங்கள், அதற்கான ஆதாரங்கள் இருப்பதை உங்கள் புத்தகம் ஊர்ஜிதம் செய்கின்றது. இந்தப் புத்தகம் ஒவ்வொரு வரும் உணர்ந்து படித்துப் - புரிந்து கொண்டு பாதுகாக்க வேண்டிய பொக்கிஷம் என்பதில் ஐயமேயில்லை!

நடப்புகளையே பதிவு செய்துகொண்டு நெறிப்படுத்திக் கொள்ளும் வாய்ப்பேதுமில்லாச் சூழலிலே, பொதுவான ஒரு குறிக் கோளை நோக்கி 10 வருஷங்களுக்கும் முன்னால் பல நல்ல உள்ளங்கள் முயன்றதை இத்தனை அழகாக நீங்கள் தொகுத்த அந்த செயற்கரிய செயலுக்கு எங்கள் உள்ளார்ந்த வணக்கங்களை நெகிழ்வுடன் சமர்ப்பிக் கின்றேன்.

இப்புத்தகத்தின் தமிழ்வடிவம் கூடிய விரைவிலே மிக நல்ல முறையிலே நீங்கள் வெளியிட இறையருள் - வேண்டிப் பிரார்த்திக் கின்றோம். இங்கே நம்முடன் சிசெல்சில் வாழும் தமிழ் அன்பர்கள் அனைவருக்கும் இப்புத்தகத்தின் சாரம் தமிழ் மூலம் மிகத்துல்லிய மாய்ச் சென்றடைய அம்முயற்சி பெருந்துணை புரியும்.

காலப்பெட்டகமாய் மட்டுமல்லாமல், ஆழ்ந்து அலசி ஆராயப் பட்ட கருத்துப் பெட்டகமாகவும் உங்களது நூல் திகழ்ந்து, படிப்பவர் களின் மனோபாவத்தினை இருக்கின்ற உயர்நிலையிலிருந்து இன்னமும் உச்சநிலைக்கு இட்டுச்செல்வதாய் அமையும் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது.

- ஸ்ரீ கலா, ஸ்ரீநிவாஸன்.
விக்ரோறியா, சிசெல்ஸ்.

Book Review

DECADE OF GROWTH

Authored by V. Sivasupramaniam,

Seycelles

I consider it a rare privilege to review a noble and historic booklet ***DECADE OF GROWTH****. The author is well experienced in the educational field in Sri Lanka, Nigeria and Seychelles. Although it is intended to trace the origins and the growth of the first and only Hindu temple in the paradise island of Seychelles – the Arulmihu Navasakthi Vinayagar temple – the author has made it a useful handbook for the global tourists who visit this enchanting islands and also for the historian in tracing the early Tamil settlements and the geo-eco system of the floating island pearls of the Indian Ocean.. Apart from the text of about eighty-three pages, the colourful thirty-two page pictorial album portrays at a glance all the efforts and activities that have gone into the making of this holy shrine.*

The nine chapters are well arranged, chronicled and the data that is provided is a mine of information for the discerning reader. Siva's practice of maintaining personal diaries systematically has gone a long way in meticulously presenting all minute details about the temple surpassing professional statisticians. Chapter four and five on Lands and Buildings and on Finance make emotional reading to understand the dedication and the suffering the society underwent to have this beautiful temple in place which is worth millions today. The author has faithfully acknowledged the special discount of SR 100,000 made by Vijay Construction who undertook the construction when the finances of the project were low. Due credit is given to the support given by the President and the Government of Seychelles to the first common venture of the Hindu community which clearly portrays the religious tolerance that is there in this multi-ethnic peaceful country.

The Indian High Commissioner, His Excellency Malay Mishra while releasing the book in a packed hall observed "I find in the author a dedicated, unassuming person who has given all his time and energy, a significant part of his own life to the cause of the community. This book is nothing but a result of his life-long dedication in the service of the community. Siva has brought us right inside the sanctum sanctorum to see what actually happened to put the temple in place."

It is worthy of note that the author is very particular not only to provide the historical events of the temple and the country to the community but makes it a point to reach the generations to come, thus in the concluding chapter nine

"The younger generation should be more interested, should get more involved and not only shoulder more responsibilities but also should act with a high sense of responsibility to pass on the mantle to the succeeding generations. The attitude of sharing the pains and pleasures of community activities and welfare should be carried forward in the correct and acceptable way. The Hindu temple in Seychelles is a well-prepared base set up by the sincere and the selfless efforts and sacrifice of many dedicated individuals of our community. Hence it is a challenge for our community to ensure that the first temple put in this beautiful island becomes a model for others to follow."

Finally, credit goes to Kanthalagam of Chennai for having brought out this noble document in a presentable way.

S.Rajasunderam, *Attorney-at-Law, Seycelles*

பிள்ளையார் உருவம் உணர்த்தும் பாடம் என்ன?

■ இன்டர்நெட்டிலிருந்து எடுத்து அனுப்பியவர் செந்தில் குமார்.

தினமலர் வாரமலர்

பெரிய தலை:
சிந்தனை பெரியதாக இருக்கட்டும்.

பெரிய காதுகள்:
நல்ல விஷயங்களை நிறைய கேளுங்களேன்...

சிறிய கண்கள்:
எதையும் உன்னிப்பாக கவனிக்கவும்.

கோடலி ஆயுதம்:
பாச பிணைப்புகளிலிருந்து விடுபட உதவும்.

சங்கு:
உயர்ந்த லட்சியத்தை அடைய உறுதுணையாக இருக்கும்.

சின்ன வாய்:
குறைவாக பேசவும்.

தந்தம்:
நல்லதை வைத்துக் கொண்டு, கெட்டதை தூரத்தி விடு.

அருளாசி:
ஆசிகள் வழங்கி, ஆன்மிக பாதையில் சென்று, கடவுளை அடைய வழிகாட்டும்.

நம்பிக்கை:
இறைமையையும், ஒத்துப் போகும் குணத்தையும் உண்டாக்கும்.

மோதகம் (அ) கொழுக்கட்டை:
உழைப்புக்கேற்ற ஊதியம் கிடைக்க செய்யும்.

பெரிய வயிறு:
வாழ்க்கையில் ஏற்படும் நல்லது, கெட்டதுகளை ஜீரணிக்க உதவும்.

எலி:
ஆசைகள் அதிகமாக அதிகமாக பெரு நஷ்டம் ஏற்படும். ஆசைகளை அடக்கி, கூட்டுப்பாட்டுக்குள் வைத்து, அதன் மீது சவாரி செய்யுங்கள்; ஆசைகள், உங்கள் மீது சவாரி செய்ய அனுமதிக்காதீர்.

பிரசாதம்:
யார் யாருக்கு என்னென்ன தேவையோ அது விநாயகர் அருளால் நிச்சயம் கிடைக்கும்!

New book on Hindu temple gives historical, religious significance of Coco de mer



Front cover of the book, that will be launched tomorrow

A new book by writer Vijayanam Sivasupramaniam, that will be officially launched in a VIP-studded ceremony tomorrow at National Theatre talks about the religious significance the wonder Coco de mer nut had long before Seychelles was discovered.

Talking to *Nation* yesterday, the author, better known as Siva, said that although the book, entitled "Decade of growth" was basically about the Seychelles Arul Mihu Navasakthi Vinayagar Temple, he intended to tell as much about these islands as possible through the literary piece of work.

Saying he chose to write the book in English to reach tourists and non-Tamil-speaking Hindus, Mr Sivasupramaniam explained that it was therefore in view of his intended wide audience and objectives that he had a coloured picture of the dome of the temple on the front cover, and one of Coco de mer nuts on a tree on the back cover.

"Centuries ago, nuts of the Coco de mer palm were transported by marine currents to the periphery of the Indian Ocean. They finally ended up bobbing up on the shores of India, Ceylon (now Sri Lanka), Maldives and Indonesia," Siva has written in the book, saying that the origins of the nut were at the time not known.

"They were thought to be fruits of a giant underwater tree, thus the new legend was born along with the name, 'Coco de mer' or nut of the sea," he said.

He further told *Nation* that shells of the nut used to be the only possession that devotee Hindu's would take with them in times of total self-denial.

"They would collect water and food in the Coco de mer nut shells," he said.

The 90-page book devotes a number of pages to giving background information about Seychelles, its environment and the people.

It then traces the beginning of organised Hindu religious gatherings here to 1984 when the Seychelles Hindu Kovil Sangham was formed and how it built the first and still only public Hindu temple in Se[illegible]les, this achievement having been made in 1992.

Among those who will take part in tomorrow's launching of the book is the Minister for Education and Youth, Mr Danny Faure, Indian High Commissioner H.E. Malay Mishra and leading businessman, Mr R. Pareandoven among scholars and Hindu clerics.

A medical physician, an accountant and a lawyer, all from diverse age groups, and none coming from the Hindu community for impartiality, will give a review of the book at tomorrow's ceremony.

Siva came to Seychelles as a teacher in 1985 and rose to the position of "Head of History" at the former National Youth Service before retiring and becoming a prolific writer who contributes analytical articles on various subjects in national and other local media.

Authorities tracking, getting rid of stray dogs

(Continued from page 1)

Anse and Beollere areas. The pig genetic centre at Grand Anse which belongs to the Ministry of Agriculture and Marine Resources lost two dozen piglets.

Postmortem conducted on the animals showed canine bite wounds which, according to the evidence, were inflicted by medium-size dogs.

"It has been established that packs of dogs are responsible for the attacks on the farms," said an official of the Veterinary Division.

Wild dogs normally operate in this manner by going out in groups at night, usually during the full moon, and harm other animals either for fun or for food. They may become more aggressive by the agitated actions of the other animals responding to their pre[illegible]

[illegible]eterinary official said com[illegible] attacks by dogs on farm[illegible]ere not new cases that this time around these happened in quick succession resulting in heavy losses to livestock.

Government, through MAMR and in collaboration with the Ministry of Environment, is taking additional steps to curb the stray dog populations on the main islands. This is to reassure farmers and the population in general that measures are being taken to protect their livestock from the stray-dog menace. The Veterinary official said any dog, including a licensed one, that left the owner's compound and roamed about on other properties was also qualified a stray animal.

It appears that some reports in the media only served to fuel speculation that the attacks on livestock were of paranormal nature. Unfortunately, such reports did little to convince the superstitious minds that these attacks were indeed the work of stray dogs, [illegible] the Veterinary official.

Pfis ki en demi milyon roupi pour en proze delo dan leo Copolia

(Kontinyasyon pay 1)

distrik An Cap, nimi ti fer resorti kĕ so proze, ki cakil lestatasyon lapong ek hasen, pe gannyfinalize.

Latan i ti pe reponn kestyon delo trese dan banz landrwat Anse Royale ki ziska prezan pa pe gannyen.

Eum fwa ki so proze i kmplete PUC pou kouzantre lo double kapasite stasyon trefnan Mont

New book on temple meant to preserve facts

Author Vijaratnam Sivasupramaniam of the new the book entitled *Decade of Growth* said that it would not be sold for profit and its main purpose was to preserve facts about the Hindu temple it was about.

Mr Sivasupramaniam, better known as Siva, said that the publication, which was officially launched at the National Theatre last Saturday, he wrote it as objectively as possible, "to put records clearly for future generation."

Speaking at the ceremony, Siva explained that the book traced the history of the

Seychelles Arul Mihu Navasakthi Vinayagar Temple from the time the Seychelles Hindu Kovil Sangham that later built it was formed, and how the construction was carried out and completed in 1992.

After receiving the very first copy, Indian High Commissioner H.E. Malay Mishra, whom Siva described as an accomplished author, called it a factual handbook that had information not only about the temple, but Seychelles in general.



High Commissioner Malay Mishra releases the book by presenting a copy to Dr. Ramadoss

H.E. Mishra "released the book" by handing over the first copy to leading businessman Dr. V. Ramadoss who said he sponsored its publication because as with other projects he had supported, it served the community as a whole.

Talking at the ceremony where he was one of the key guests, Education and Youth Minister Danny Faure said he had known the author for a long time, noting that Siva had dedicated his earlier years to helping nourish the minds of young people, but now he was doing it with adults.



Mr Sivasupramaniam (right) presents a copy to Mr Pillay

The minister said that the book, which depicted Seychelles as a peaceful and safe place, was a boost to the country's tourism industry.

During the ceremony, a number of key personalities associated in one way or another with the author or the temple received copies of the book from Mr Sivasupramaniam.

Among them was Mr K. D. Pillay, the very first chairman of the Seychelles Hindu Kovil Sangham, who served the association in that capacity for 14 years.

Singers of Charity in fundraising

1

சீசெல்சு

இந்து சமுத்திரத்தில் சிதறிய முத்துக்கள் போன்றமைந்த 116 தீவுக்கூட்டத்தையே சீசெல்சு குறிக்கும். இவை 1.3 மில்லியன் சதுர கிலோ மீற்றர் பரப்பிலான கடற் பிராந்தியத்தில் அமைந்துள்ளன. 30 தீவுகள் மாத்திரமே மனித சஞ்சாரமுள்ளவை. மொத்த நிலப்பரப்பு 455.3 சதுர கிலோ மீற்றராகும். 49% நிலப்பரப்பு தேசிய பூங்கா அல்லது பாதுகாப்பான பிரதேசமாகும். இவற்றில் கணக்கிலடங்கா உயிரினங்களும் தாவர வகைகளும் காணப்படுகின்றன.

இத்தீவுக் கூட்டத்திற்கு ஏறக்குறைய ஆயிரம் மைல் தொலைவில் வட கிழக்கே இந்தியாவும் இலங்கையும், மேற்கே ஆபிரிக்காவும் தெற்கே மடகஸ்கார் மற்றும் மொரிசியசும் உள்ளன.

இவற்றுள் 27 கி.மீ நீளமும் 11 கி.மீ அகலமும் கொண்ட மாகே பெரிய தீவாகும். மொத்தச் சனத் தொகை 81,000. இதில் 72,200 பேர் மாகேயில் உள்ளனர். விக்ரோறியா 25,000 மக்களைக் கொண்ட தலைநகரமும் துறைமுகமுமாகும்.

இந்நாடு முதலில் பிரெஞ்சுக் கட்டுப்பாட்டிலும் பின்பு ஆங்கிலேயர் கட்டுப்பாட்டிலுமிருந்தது. ஒரு சில காலம் மொரிசியசுடன் இணைந்த ஆட்சியிலிருந்து 1903இல் ஆங்கிலேயரின் நேரடி ஆட்சியின் கீழ் வந்தது.

1976-ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்று 1977இல் நடைபெற்ற புரட்சியைத் தொடர்ந்து தனிக்கட்சி ஆட்சி நாடாகியது. 1993இல்

பல கட்சி நாடாகமாறி, மக்கள் கருத்துக் கணிப்பின்படி புதிய அரசியல் யாப்பு வகுக்கப்பட்டு, பொதுத் தேர்தலின் பின் மீண்டும் மக்களாட்சி அமைவு பெற்றுள்ளது.

எந்த விதமான குழப்பமோ சலசலப்போ இன்றி அரசியல் மாற்றம் ஏற்பட்டது. உலகளாவிய பாராட்டைப் பெற்று எங்கு மில்லாத ஒழுங்கு கட்டுப்பாட்டுடன் அமைதிப் பூங்காவாக இந்நாடு விளங்குவது யாவரும் நோக்க வேண்டியதாகும்.

முக்கண்டங்களாகிய ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்காவி லிருந்து குடியேறினர். இங்கு குடிமக்களுள் பெரும்பாலோர் கத்தோலிக்கர்; கிறிஸ்தவ, இந்து இசுலாமிய மதத்தவர்களும் இங்கு உளர். மக்களின் மொழி கிறியோல். அத்துடன் ஆங்கில, பிரெஞ்சு மொழிகளும் உத்தியோக மொழிகள். பல இன, பல சமய மக்கள் வாழ்வதாலும், கலப்பு மணம் காரணமாகவும் இன மத வேறுபாடின்றி மக்கள் புரிந்துணர்வுடன் சீசெல்சு நாட்டில் வாழ்வது மற்றைய நாடுகட்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

சுற்றுலாத் துறையும் மீன் வளமும் முக்கிய பொருளாதார அடிப்படைகள். எண்பது சதவிகிதமான உல்லாசப் பயணிகள் ஐரோப்பியர்கள். ஆண்டுக்கு 130,000 பயணிகள் வரவுண்டு. நாட்டின் அரசியல் அமைதி, சிறந்த வெள்ளை மணல் கடலோரங்கள், பவளப் பாறைகள், இயற்கை எழில் மற்றும் கொடி, செடி, மீன் வளம், பறவைகள் போன்ற இயற்கை வளங்கள், உல்லாசப் பயணிகளின் சொர்க்கமாகப் பலரையும் ஈர்க்கின்றன. செயற்கைக் கோள் வழித் தொடர்பு வசதிகள் சகல நாடுகளுடனும் சிறப்பாக வுண்டு. சஞ்சீவி மலையை அநுமன் சுமந்து செல்கையில் சிதறி வீழ்ந்த துண்டுகளாலும் துகள்களாலும் ஆக்கப்பட்ட சிதறலான தீவுக் கூட்டங்களானமையால் இப் பிரதேசத்தில் எந்த விதமான

விஷ ஜந்துக்கள் என்றுமே காணப்படுவதில்லையென்ற ஐதிகம் பரவலாகவுண்டு.

புகழ்பெற்ற பிரசித்திபெற்ற உலகப் பாரம்பரிய தளங்களாக ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான கலாச்சார நிறுவனம் (World Heritage sites by UNESCO) இந்நாட்டின் இரு இடங்களை அறிவித்துள்ளது. உயிரியல் விஞ்ஞான ஆராய்ச்சிக்கு உகந்ததான அல்தபராத் தீவு (ALDABRA ATOLL) அவற்றுள் ஒன்று; திரு வோட்டுப் பனைகள் செறிந்த வலி டீ மேய் (VALLEE de Mai) என்ற பிறாளைத் தீவு அவற்றுள் மற்றையது.

அல்த பராத் தீவும் மாகேயிலிருந்து தெற்கே 622 மைல் தொலைவிலுள்ள மனித சஞ்சாரமற்ற 59 சதுர கி.மீ பரப்புடைய பவளப் பாறைத் தீவுப் பிரதேசமாகும். உலகிலே எந்த இடத் திலும் காணமுடியாத வகையிலும் தொகையிலுமான உயிரினங் களும் தாவரங்களும் காணப்படுவதால் விஞ்ஞான ஆராய்ச்சிக்கு உகந்த இடமாகப் பாதுகாக்கப்படுகின்றது. சிறப்பாக ஆயிரக் கணக்கான ஆமை இனங்கள் உள்ளன (Giant Tortoises). 273 வகையான மரம் செடிகளும், இந்த இடத்திற்கே உரித்தான (Endemic) 70 தாவரங்களும் கணக்கிலடங்காப் பறவை இனங்களும் இப்பகுதியின் செல்வப் பொலிவை மேம்படுத்துகின்றன. மேலும் COUSIN, ARIDE ஆகிய இரு தீவுகளும் பறவைகட்காகவே அமைந்துள்ளன. இப் பகுதிக்கு, ஆண்டுதோறும் 2,50,000 சோடிப் பறவைகள் புலம் பெயர்ந்து வந்து போவதாகக் கணக்கிடலாம்.

அடுத்ததாகத் திருவோடு காய்க்கும் பிறாளைத் (PRASLIN) தீவிலுள்ள பிரதேசம் பேணிப் பாதுகாக்கப்படுகின்றது. இத்தீவு மாகேயிலிருந்து 21 மைல் தொலைவிலுள்ள இரண்டாவது பெரிய

தீவாகும். உலகிலே வேறெந்தப் பகுதியிலும் இப் பனைமரம் காணப்படாததால் இதன் பாதுகாப்பு முக்கியத்துவம் பெறு கின்றது. இதன் காயும் இலையும் உலகிலேயே மிகப் பெரிய காயாகவும் மிகப் பெரிய இலையாகவும் கருதப்படுகின்றது. திருவோட்டுக் காய் கனிய 27 ஆண்டுகளாகும். ஒரு காயின் எடை சராசரி 18 கிலோ கிராம் நிறையுண்டு. பெண் பனை 80 அடி உயர வளர்ந்து முதிர்ச்சி பெற 25 ஆண்டுகளாகும். ஆண் பனையோ 100 அடி வளர்ந்து முதிர்ச்சி முற்றுப் பெற 100 ஆண்டுகளாகும். இப்பகுதியில் ஏறக்குறைய 4000 திருவோட்டுப் பனைமரங்கள் உள்ளன. சில நூற்றாண்டுகளுக்கு முன்பு தமிழ் வர்த்தகர்களினால் காய்ந்த திருவோடுகள் மலிவு விலையில் ஏற்றுமதி செய்யப் பட்டது. தற்போது அரச கண்காணிப்பில் ஏற்றுமதித் தடையுள்ள பொருளாகப் பாதுகாக்கப்படுவதோடு அரசு அனுமதியுடன் பெறுவதாயின் திருவோட்டுக் காய் ஒன்று ஏறக்குறைய 100 அமெரிக்க டொலர் விலையாகும்.

இத்தீவுக் கூட்டங்கள் பூமியின் நடுக்கோட்டுக்கு அண்மித் திருப்பன; மிகச் சிறப்பான சுவாத்தியத்தை உடையன; எந்தவித மான சூறாவளிக்காற்று மற்றும் இயற்கை அழிவுகள் இல்லாத சூழலில் அமைந்துள்ளன; மேலும், இந்த நாடு ஆபிரிக்காவின் புவிநீட்டமாக இருந்த போதிலும் அக்கண்டத்தின் சமூகத் தாக்கங்கள் அற்றதாய், கிழக்கிற்கும் மேற்கிற்கும் ஒரு பாலமாக வும் அமைந்துள்ளது.

ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு பணம் கல்வி, சுகாதாரம் போன்ற துறைகட்கே ஒதுக்கப்படு கின்றது. இதனால் மக்களிடையே உடல் நலச் செம்மையும் 88%க்கும் அதிகமான எழுத்தறிவு வளர்ச்சியும் உண்டு.

இந்நாட்டு மக்களோ உலகின் சலசலப்பான வாழ்க்கை முறைகளில் இருந்து ஒதுங்கி, அமைதியான சூழலில் வாழ்கின்றனர். தமக்கே உரித்தான அமைதியும் ஆறுதலும் கூடிய வாழ்க்கை முறையை அமைத்துள்ளனர். அவர்கள் நாளாந்த சூழல் சுற்றாடல் போன்ற தாக்க நெருக்கடிகளிலிருந்து விடுபட்டு வாழ்கின்றனர். அமைதியும் நிம்மதியும் மகிழ்வும் நிறைந்தவர்களாகவே எப்பொழுதும் காணப்படுவர். இஃது இந்நாட்டு மக்களுக்குரிய தனிச் சிறப்பு.

2

சீசெல்சும் தமிழரும்

போர்த்துக்கேயக் கடலாடிகளே முதலில் இத்தீவுக் கூட்டத்தைக் கண்டறிந்தனராம். 1609ல் பிரித்தானியரும் 1742ல் பிரஞ்சுக்காரரும் வந்ததற்கான ஆதாரங்கள் உள. சிலுவெற்று என்ற சிற்ப தீவில் காணப்படும் கல்லறைகள் படி அராபியரும் ஆசிய கண்டத்த வரும் அதற்கு முன்பே வந்ததைக் கூறுகின்றன. இந்திய கேரள மாநிலத்தின் குஞ்சலியும் கடலாடிகளும் இந்து சமுத்திரத்தில் ஐரோப்பியப் படைகளையும் கடற் கொள்ளையரையும் தாக்கிய போது, கடற் கொள்ளையர் இங்கு வந்து தத்தம் விலையுயர்ந்த பொருட்களை புதைத்தமைக்கு அண்மைய அகழ்வுகள் சான்றா கின்றன.

1770இல் பதிவான முதற் குடியேற்றத்தின் போது 15 வெள்ளையர்கள், 7 கறுப்பின அடிமைகள் 5 தமிழர் மாகேதீவுக்கு வந்தனர். அவர்களின் வழித் தோன்றல்களே தற்போதைய சீசெல்சுக் குடிமக்கள் என்பது வரலாறு.

புதுச்சேரியைச் சேர்ந்த இராமலிங்கம் என்பவர் அரச ஆலோசகராக றியூனியன் தீவிலிருந்து வந்தார். அரச அன்பளிப் பாகக் கிடைத்த பெரும்பரப்பளவு காணிகட்கு உரிமையாள ரானார். 1864ல் நாயக்கனும், 1874ல் கந்தசாமிச் செட்டியும் தமிழ் நாட்டிலிருந்து வந்து வியாபாரம் செய்தனர். இப்போதும் பல வியாபார நிலையங்கள் இப்பெயர்களுடன் இயங்குவதைக் காண்கின்றோம்.

முதலில் குடியேறிய பல தமிழர் இங்கு கலப்பு மணம் செய்து மதம் மாறியுமிருந்தனர். 1901ஆம் ஆண்டு குடித்தொகை 19,237; இதில் 332 தமிழ்ச் சைவக்குடும்பங்கள் இருந்தன. குடித் தொகையில் பத்து சதவீதமானோரே தமது தமிழ் மற்றும் சமய கலாசார மரபுகளைப் பேணிப் பாதுகாத்து வருகின்றனர். இங்கு நிலவும் மக்கட் பெயர்களில் பிள்ளை, செட்டி, வேலு, கந்தசாமி, வடிவேலு, கோவிந்தன் ஆகியன கணிசமாக உள. இவை யாவும் தமிழரின் ஆதி குடியேற்றத்திற்கு ஆதாரங்கள். 1944இல் இங்கு பிரதம நீதியரசராகப் பணி புரிந்தவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஹோமர் வன்னியசிங்கம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடல் வணிகத்திலும் படை வலிமையிலும் பெயர் பெற்று விளங்கிய சேரநாட்டுத் தமிழரான குஞ்சலி வீரன் என்பான் தஞ்சை நாயக்க மன்னரின் சேவையிலிருந்ததும், பலம் பொருந் திய மரக்கலக் கூட்டத்தின் துணையுடன் மேற்கத்திய கடலாடிகளி லிருந்து ஆசிய கடலாடிகட்குப் பாதுகாப்பளித்தது வரலாறு. குஞ்சலி வீரன் தனது கடற் பயணங்களின் போது சீசெல்சுக்கு வந்து திருவோடு பெற்றுச் சென்று இலங்கை இந்திய அரச அரண்மனைகட்கு அன்பளிப்பு செய்வதும் வழமையாயிருந்தது.

திருவோடு சைவசமயத்தோடு தொன்று தொட்டுத் தொடர் பான பொருள். முனிவர்களும் சந்நியாசிகளும் திருவோட்டில் பிச்சை ஏந்துவது வழமை. பல நூற்றாண்டுகட்கு முன்பு தமிழ் நாட்டு வணிகர் மரக்கலங்களில் சீசெல்சு வந்து கப்பல் கட்டுதற் குரிய மரங்களையும் திருவோட்டையும் எடுத்து பாண்டிச் சேரியிலுள்ள கப்பல்கட்டும் தளத்தில் மரங்களைச் சேர்த்து, இந்தியா மற்றும் தூர கிழக்கு நாடுகளில் திருவோட்டை வியா பாரம் செய்ததும் வரலாறு.

இப்படியாக ஆசிய நாட்டவர்கள் பலர் தொன்று தொட்டு இத் தீவுக்கூட்டங்களுடன் தொடர்பு கொண்டிருந்த நிகழ்வுகள் யாவும் மேற்கத்திய வரலாற்று ஆசிரியர்களால் விரும்பியோ விரும்பாமலோ மறைக்கப்பட்டுள்ளது ஆச்சரியமான தொன்றாகும்.

தமிழ் நாட்டின் காவேரிப் படுக்கையிலிருந்து தமிழ் வர்த்தகர் கள் இந்நாட்டுக்குத் தேவையான நுகர்பொருட்களை மரக்கலங் களில் கொண்டு வந்து விற்று, இங்கிருந்து கப்பல் கட்டுமானத்திற் கான மரங்களை எடுத்து செல்வது வழக்கம். ஆனால் ஒரு சிலர் இங்கேயே தங்கி, மணம் முடித்து இந்நாட்டிலேயே பெரும் வர்த்தகப் பணியில் ஈடுபடலாயினர். அவர்களின் சில வழித் தோன்றல்கள் தமது மொழி, சமயம் ஆகியவற்றை கைவிட்டு இந்நாட்டு மக்களின் மொழியை ஏற்று, சமயத்தைக் கைக் கொண்டு வாழ்க்கையை நடாத்துவது வழமையாயிற்று.

இங்கு புழக்கத்திலுள்ள கிறியோல் சொற்கள் பல தமிழ்ச் சொற்களாயிருப்பது தமிழர் குடியேற்றத்திற்கும் ஆதராங்களாகும். எடுத்துக்காட்டாக, தமிழ்மொழியின் செல்வாக்குக்கும் ''கறிப்பிலை'' என்பது கறிவேப்பிலையையும்; ''முலுக்கு'' என்பது முறுக்கை யும் குறிக்கும் கிறீயோல் மொழிச் சொற்கள்.

1971இல் பன்னாட்டு விமான நிலையம் செயற்படத் தொடங் கியதிலிருந்து இந்நாட்டுக்குத் தமிழ் மக்களின் வரவும் ஈடுபாடும் அதிகரித்தது. இங்குள்ள தமிழர் பலர், தமிழ் நாட்டில் மணம் புரிவதையும் முன்னையிலும் பார்க்க அதிகமான எண்ணிக்கை யில் தமிழ்ப் பெண்கள் இந்நாட்டில் இப்பொழுது வதிவதையும் காணலாம்.

இங்கு கோயில் சங்கம் நிறுவியமையும், அடிக்கல் காட்டிய பின் ஈ.ராண்டுகளில் இந்நாட்டின் முதல் இந்துக் கோயில்

அமைந்ததும் தமிழர் வாழ்வில், வரலாற்றில் பொதிந்த நிகழ்வு களாகும். தமிழரின் கலை, கலாச்சாரம் சமய நெறி முறைகள் அருகிவிடுமோ என்ற அவாவின் அங்கலாய்ப்பின் விளைவே, தமிழர் அனைவரும் ஒன்று கூடி ஒற்றுமையாகக் கோயில் அமைத்த சாதனையாகும். இக்கோயில் அமைந்ததன் விளை வாகத் தமிழ் மக்களிடையே கலை, கலாச்சார சமய ரீதியாகப் புத்துணர்ச்சியும் மறுமலர்ச்சியும் வெகுவாக ஏற்பட்டுள்ளது. இங்குள்ள பல இனச் சமுகத்தினரிடையே தமிழருக்கு அங்கீகாரத் தையும் தெளிவான நிலைப்பாட்டையும் கொடுத்துள்ளது. உலகத் தமிழர் அனைவரும் இதைப் பாராட்டி வருகின்றனர். இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் உலகெங்கும் 70,000,000 தமிழ் பேசும் மக்கள் வாழ்வதாக ஒரு மதிப்பீடு உண்டு. இந்தியாவில் தமிழ் நாடு, கேரளா, கர்நாடக, ஆந்திர, மராட்டிய, வங்காள, தில்லி மாநிலங்களில் 60,000,000 தமிழ் பேசும் மக்கள் உளர். ஈழத்தில் 5,000,000 தமிழ் மக்களும் உளர். இந்தியா இலங்கைக்கு வெளியே 15,000,000 தமிழர் உளர்.

Seychelles NATION 30.7.91

International support for Hindu temple

THE Hindu temple being constructed at Quincy Street has received financial and moral support from Hindu communities in four foreign countries.

Mr K.D. Pillay, who chairs the Seychelles Hindu Kovil Sangam which oversees the construction works, said the R1.5-million temple had received financial pledges and blessings from the communities in India, Malaysia, Mauritius and the United Kingdom.

However, the amount of the pledges was not disclosed.

The Temple of the Lord Vinayagar, named after the Hindu God of safety and prosperity, is now half-completed and set to be Seychelles' first proper place of worship for the Hindus.

The pillars are up, and already the age-old architecture originating in the Indian subcontinent could be clearly seen.

Promising to be yet another tourist attraction, it is even now attracting the occassional tourist who is intrigued by the "different" style of the building.

The intention was keep the styling and concept of the temple as original as possible, Mr Pillay said.

Thus, four sculptors from India who specialise in religious sculptures would be commissioned to immortalise events in the Hindu mythology on the walls and pillars of the temple, he explained.

Complete with marble flooring, the temple is expected to be ready in time for its opening at the end of the year. The construction work, undertaken by local company Vijay Construction, started in February.



The construction of the Hindu temple, Quincy Street

3

ஆரம்பம்

சீசெல்சு நாட்டில் கடந்த 200 ஆண்டுகளுக்கு மேலாகக் கணிசமான அளவு இந்துக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். சுமார் 200 வருடங்களுக்கு முன்னர் தமிழ் நாட்டில் இருந்து பல தமிழர் இங்கு வந்து குடியேறினர். தற்போது ஏறத்தாழ 4,000 இந்துக்கள் இந்நாட்டில் உள்ளதாக மதிப்பீடு உண்டு. இப்பொழுதுள்ள இந்துக்களுள் பெரும்பான்மையினர் தமிழ் மொழியையும், ஏனையோர் ஹிந்தி, மலையாளம், குஜராத்தி, மராத்தி போன்ற மொழிகளையும் பேசுகின்றனர். இவர்களுள் பெரும்பாலானோர் வியாபாரத்தில் ஈடுபட்டு, இந் நாட்டின் குடிமக்களாகி உள்ளனர். இவர்களைத் தவிர இலங்கை, மலேசியா, மொரிசியசு நாட்டவர்களும் அரசாங்கத்திலும் தனியார் நிறுவனங்களிலும் ஒப்பந்த அடிப்படையில் பணி புரிகின்றனர்.

தென்மேற்கு ஆபிரிக்கப் பகுதியில் அமைந்துள்ள பல நாடுகளில் குடியேறிய தமிழர் தமக்கெனப் பல வழிபாட்டிடங்களையும் கலாச்சார மையங்களையும் நிறுவினர். எனினும் சீசெல்சு வாழ் தமிழ் மக்கள் அத்தகைய அமைப்புக்களை நிறுவுவதில் வெற்றியடையவில்லை. தத்தம் சமய கலாச்சாரத் தேவைகளை நிறைவு செய்வதற்குத் தமிழ் நாட்டையே நாடினர். கோயில் கட்டும் முயற்சிகள் பல முறை தொடங்கப்பட்டும் பற்பல தடைகள் காரணமாக எந்த முன்னேற்றமும் அடைய வில்லையெனப் பல முதியவர்கள் முறையிட்டதைக் கேட்டிருக்கின்றேன். ஒரு சிலர் மாத்திரம் அவ்வப்பொழுது சிறு குழுக்களாகத் தத்தம் வீடுகளில் கூடித் தமது வழிபாடுகளையும் கலாச்சார நிகழ்வுகளையும் நடாத்தினர். தமக்கென வழிபாட்டு மையம்

அவசியம் என்ற உணர்வு நிரம்பப் பெற்றவர்களாகப் பல இந்துக்கள் இருந்தும், அச் சிந்தனையை ஒருமித்துச் செயற் படுத்தும் கால அவகாசம் அவர்களுக்குக் கை கூடவில்லை என்றே கொள்ளலாம்.

இந்நாட்டில் வாழும் தமிழர்கள் ஒன்றுகூடித் தமது பாரம் பரிய கலாச்சார விழுமியங்களைப் பேணிப் பாதுகாத்து வளர்ப் பதற்கு ஒரு பொது அமைப்பு அவசியம் என்ற உச்சநோக்கு துடிப் பான இரு இளைஞர் மனதில் 1980களில் உதயமாகி இருந்தது. எனினும் அதற்கு வடிவம் கொடுத்து முன்னெடுத்துச் செல் வதற்கு வேண்டிய ஆதரவோ உற்சாகமோ இல்லாதிருந்தது. பொதுச் சமூக அமைப்புக்களை உருவாக்குவதற்குத் தமிழர் களிடையே ஒருவித பயமும், பீதியும் சந்தேகமும் நிலவி யிருந்தது.

இந்நாட்டில் முதல் தமிழ் ஒலிநாடா விநியோகத்தை ரமணி - சுபாஷ் ஆரம்பித்து, பின்பு வாடகை நிலையமாக நிறுவி அதைத் திறம்பட நடாத்திய பெருமை சுபாஷ்சந்திரன் பிள்ளையையே சாரும். 1984 மாசித் திங்களில் ஐக்கிய நாடுகள் / உணவு வேளாண்மைத்துறை ஆலோசகராக மறவன்புலவு க. சச்சிதானந்தன் இந்நாட்டில் பதவி ஏற்றார். தமிழ் ஒலிநாடா வாடகை நிறுவனம் இங்கு இயங்குவதை அவர் அறிந்து, அதை ஊக்குவிக்கும் நோக் கில் ஈராண்டுக்கான உறுப்பு உரிமைக்காக ரூபா. 2000 பணத்தைச் செலுத்தினார். சுபாஷ்சந்திரன் பிள்ளைக்கு இது பெரும் ஆச்சரி யத்தையும் ஊக்கத்தையும் ஏற்படுத்தியது. தமிழருக்கான நிறுவனம் ஏற்பட இந்நிகழ்வே வழி கோலியது.

சிவசண்முகம் பிள்ளையும் சுபாஷ்சந்திரன் பிள்ளையும் நெருங்கிய நண்பர்கள். இருவரும் சச்சிதானந்தனை அணுகினர். தமது உச்ச நோக்கை எட்டுவதற்கான வழிமுறைகள் யாவற்றையும்

அவரோடு ஆராய்ந்தனர். இதன் விளைவாகச் சிவா, சுபாஷ், சச்சி, கயிலாஷ், பாலு ஒன்று கூடினர். தம்மைத் தாமே ஒரு முன்னோடிக் குழுவாக அமைத்தனர். விடா முயற்சியுடனும் ஈடுபாட்டுடனும் வீடு வீடாகச் சென்றனர். பல தரப்பட்ட கருத்துக்களுக்கு முகம் கொடுத்தனர். தமது தன்னலமற்ற நோக்கத்தையும் சமூகத்தின் தேவையையும் உணர்த்தினர். ஒற்றுமையின் தளத்தில் மாத்திரமே தமிழருக்கான அமைப்பை ஏற்படுத்தலாமென்ற எண்ணத்திற்கு வலுச் சேர்த்தனர். சங்கம் அமைக்கும் பணியை மக்களின் முழு ஆதரவு துரிதப்படுத்தியது. இதன் விளைவே 1984ல் உதயமான சீசெல்சு இந்துக் கோயில் சங்கமாகும்.

''தலைவர் (தீனு) தனது உணர்ச்சிமிக்க நீண்ட உரையில், கடந்த 150-200 ஆண்டுகளில் தமிழர் தமக்கென ஒரு நிறுவனத்தை நிறுவவில்லை; சமய வளர்ச்சிக்கு யாதும் செய்யவில்லை; தொடங்கும் முயற்சிகள் அதுவும் முற்றுப் பெறவில்லை; 1984இல் சில இலங்கையரின் முயற்சியால் சிறப்பாக மறவன் புலவு க. சச்சிதானந்தனின் முயற்சியால் நாம் இப்போது பெருமையுடன் எமது என்று கூறக்கூடிய ஒரு முழுமையான கோயில் அமைந் துள்ளது. எம்மவர் யாவரும் ஒற்றுமையாக ஒன்று கூடிச் செய லாற்றியதன் விளைவே இச் சாதனை''

(நன்றி: 9.3.1997 ஆண்டுப் பொதுக் கூட்ட அறிக்கை)

1984 வைகாசி மாதம் முதல் நாள் சங்கம் அமைப்பது பற்றிய ஆலோசனைக் கூட்டம் பிறிமியர் கட்டடத்தில் சச்சிதானந்தன் தலைமையில், இடம் பெற்றதும், கூட்டம் பாலசுந்தரத்தின் தேவாரத்துடன் தொடங்கியதும் சிறப்பு நிகழ்ச்சியாகும். இரு பாலருமாக 25 பேர் கலந்து கொண்டனர். (பின்னிணைப்பில் பட்டியல் உண்டு) பலதரப்பட்ட கருத்துக்கள் முன் வைக்கப்பட்டு

ஆராயப்பட்டன. ஈற்றில் வழிபாட்டு நிலையம், சுடுகாடு, மொழி வளர்ச்சி வகுப்புக்கள், சமயக் கல்வி, கலை வளர்ச்சி ஆகியன பற்றிய பொதுக் கருத்துத் தெளிந்தது. இவையே சங்கத்தின் அடிப் படை நோக்கங்களாகச் சங்க விதிமுறைகளில் எழுதப் பெற்றன. இரு நூற்றாண்டுகட்கு முன்பு இடம் பெற்ற தமிழர் குடியேற்றம் முதல் மைல்கல். தமிழருக்கான கோயில் சங்கம் அமைப்பு வளர்ச்சிப்பாதையின் அடுத்த மைல் கல்; இவை இரண்டும் வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சிகள்.

இதைத் தொடர்ந்து ஆனி 10ஆம் நாள் இடம் பெற்ற நிறுவனக் கூட்டத்தில் சங்க அமைப்பு விதிகள் ஆராயப்பட்டு ஆலோசனைகளை உள்ளடக்கிய விடயங்கள் ஏற்கப்பட்டன. அரசுப் பதிவாளரிடம் சங்கம் பதிவு செய்யப்பட்டது. இக் கூட்டத் தில் சங்க அலுவலர்களும், பன்னிருவர் கொண்ட ஆட்சிக் குழுவும் (பின்னிணைப்பில் பட்டியல் உண்டு) போட்டியின்றித் தெரிவு செய்யப் பெற்றனர். கே.டி. பிள்ளை தலைவராகவும், சுபாஷ்சந்திரன் பிள்ளை செயலாளராகவும், வி. இராமகிருஷ்ண நாயக்கன் பொருளாளராகவும் இடம் பெற்றனர். இந்நாட்டின் குடியுரிமை பெற்ற இந்து எவரும் வாக்குரிமையுடைய, அலுவல ராகவும் ஆட்சிக்குழு உறுப்பினராகவும் வரலாம் என அமைப்பு விதிகளில் எழுதப் பெற்றமையும் ஏனைய இந்து எவரும் இந்த உரிமைகளற்ற கூட்டு உறுப்புரிமை பெறலாம் எனவும் அமைப்பு விதிகளை அமைத்தமையும் இக்கூட்டத்தின் முக்கிய தீர்மானங்க ளாகும்.

புதிய உறுப்பினர்களைச் சேர்த்தல், நிலம் வாங்குதல், தற் காலிக வழிபாட்டுக்கான இடம் தேடுதல், கலை வளர்ச்சி மற்றும் சமூக ஒன்றிணைப்பு நிகழ்ச்சிகளே புதிய அமைப்பின் கவனத்தை முதலில் ஈர்த்தது. இப்பெரிய பொறுப்புக்களை புதிய அமைப்பு மிகவும் கவனமாகவும் நிதானத்துடனும் முன் எடுத்துச் சென்றது.

உடனடித் தேவைக்காக, ''குயின்சி சூப்பர்'' நிலையத்தின் மேல் மாடியை வாடகைக்குப் பெற்று, நிர்மாண வேலைகள் செய்யப்பட்டு அழகிய பிரார்த்தனை மண்டபம் அமையப் பெற்றது. தொடக்கத்தில் சிலா வடிவங்கள் இல்லாததினால் சுவாமிப் படங்களே அமையப் பெற்றன; வழிபாடு, இசை மற்றும் கலை நிகழ்வுகள் யாவும் ஒழுங்காக இடம் பெற்றன.

1984-ஆம் ஆண்டு விநாயக சதுர்த்தி விழாவே சங்கத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க முதல் பொது நிகழ்ச்சியாகும். களி மண்ணினால் செய்யப் பெற்ற விநாயகச் சிலா வடிவம் அதற்குரித்தான வழிபாட்டுக்குப் பின், பாரிய தொடர் ஊர்வலமாக ''பெல் ஓர்ம்'' கடலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு பழனி, கைலாஷ் ஆகிய இருவரினாலும் கடலில் கரைக்கப்பட்டது. பெரும் எண்ணிக்கையில் இந்துக்கள் உணர்வு பூர்வமாகப் பக்தி பரவசத்துடன் பங்கு பற்றியது சங்க முன்னேற்றத்திற்குப் பெரும் உந்து சக்தியாக அமைந்தது.

1984 ஆனியில் கோலாட்டம், புரட்டாதியில் நவராத்திரி கலை விழா ஆகியன நாட்டின் தொலைக்காட்சிச் சேவையில் முதல் முறையாக ஒளிபரப்பாகிய கலை நிகழ்ச்சிகள் மிகுந்த ஆர்வத்தையும் ஆதரவையும் சங்க வளர்ச்சிக்குப் பெற்றுத் தந்தன. பவனின் இசைக் கச்சேரிகளும், பிராத்தனையைத் தொடர்ந்து கையிலாய நாதன் நடாத்தி வந்த பண்ணுடன் கூடிய திருமுறை ஓதலும் அடியார்களிடையே பக்திப் பரவசத்தை ஏற்படுத்தின. கயிலாய நாதனின் நெஞ்சை உருக்கும் கதாகாலட்சேபங்கள் உறுப்பினரிடையே ஆன்மீக உணர்வை வளர்த்தன.

1985 ஆனி 24-ம் நாளன்று பஞ்சலோகத்தினாலான விநாயகர், நடராசர் சிலா வடிவங்கள் மண்டபத்தில் அமையப் பெற்றன.

ஞாயிறு தோறும் காலையில் குடமுழுக்கு ஆராதனைகள் ஒழுங்காக நடைபெற்றன. உபயகாரர் வழிபாட்டுக்கு வேண்டிய பிரசாதங்களைத் தத்தம் வீடுகளிலிருந்தே எடுத்து வருவது வழக்கம். முன்னேற்பாட்டுடன் ஒழுங்காக நடைபெற்ற இப்பிரார்த்தனைகளைப் பழனி, இரத்தினசபாபதிப் பிள்ளை ஆகிய இருவரும் முறைப்படி ஏற்று நடாத்தினர். அடியார்களிடையே ஆர்வமும், பக்தியும் ஈடுபாடும் பெருகின.

சிறு பிள்ளைகட்கான தமிழ் வகுப்புக்களை வார இறுதி தோறும் சிவபாதம், ஜெயா பாலசுந்தரம் நடாத்தினார். இளம் வயதினரிடையே இவ்வகுப்புகள் பெரும் ஆர்வத்தை தூண்டின. சங்கம் சம்பந்தமான தொடக்க முயற்சிகள் யாவற்றிலும் ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து முன் மாதிரி காட்டிய கலா, வாசுகி, வசந்தி, சாந்தா நாயர், ரேணு, சித்திரா, ஜெயா ஆகியோரது பங்களிப்புகள் பலருக்கும் எடுத்துக்காட்டாக அமைந்ததை மறக்கமுடியாது.

சங்க நிகழ்வுகள் யாவும் சிறுகப் பிடித்துப் பெருக வளர்வதாக அமைந்தது இந்நாட்டில் வரலாறு பதிப்பதாக அமைந்தது. இந்த வளர்ச்சியின் விளைவாக இந்நாட்டில் வாழும் இந்துக்களுக்கும் தமிழர்களுக்கும் வலுவான கலாச்சார அடித்தளம் ஒன்று அமைந்தது. இந்த அடித்தளம் பலரின் பாராட்டுதலுடன் வளர்வதாயிற்று.

Amongst the Hindu Ladies of Seychelles,
Participants in DEEPAM, GARBA and KOLADDAM Dance performances.

MS Veena K. Varma

Ms. Kusum P. Jivan

Ms Radhika Viswanathan

Ms Jaya Balasundaram

Ms Smitha B. Jivan

Ms Girija Viswanathan

Ms Selvi Karunakaran

Ms. Sukeshi Patel

Ms Revathi Chennabathni

1984

4

நிலமும் கட்டடங்களும்

புதிதாக நிறுவப்பட்ட இந்துக் கோவில் சங்கத்திற்கு ஆலயம் அமைப்பதற்கான ஒரு பொருத்தமான நிலத்தைத் தேடி வாங்குவது பெருஞ் சவாலாக அமைந்தது. இஃது உடனடிச் சாத்தியமாக அமையவில்லை. இரு பெருந்தடைகளைத் தாண்ட வேண்டி இருந்தது. முதலாவதாகக் கோவிலுக்கு அமைவான இடத்தைக் கண்டுபிடிப்பது. இரண்டாவதாக அதற்குத் தேவையான நிதியைத் தேடுவது. சங்கம் புதிதாக நிறுவப்பட்டமையால் எவ்வித நிதியும் கைவசம் இருக்கவில்லை. பல இடங்கள் அடையாளம் காணப்பட்ட போதிலும் அவற்றுள் சில வெகு தூரத்திலும் வேறு சில வெவ்வேறு தேவைகட்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்டும் காணப்பட்டன.

லொட்ஜ் தெருவில் அமைப்பான நிலம் காணப்பட்ட போதிலும் அது கை நழுவிவிட்டது. தற்போதுள்ள நிலம் விற்பனைக்கு வருவதைச் சிவசண்முகம் பிள்ளை அவர்களும் கிருஷ்ணன் நாயர் அவர்களும் கண்டறிந்த உடனேயே சிவா துரித நடவடிக்கையில் இறங்கினார். நிலச் சொந்தக்காரர் அவசரமாக விற்க விரும்பியதால் கடுமையான நிபந்தனைகளை விதித்தனர். அதாவது நிலம் வாங்க விரும்புவோர் இருபதினாயிரம் ரூபா முற்பணம் செலுத்தி ஒரு மாதத்திற்குள் முழுத் தொகையையும் செலுத்தாத பட்சத்தில் முற்பணம் திரும்பக் கொடுக்கப் படமாட்டாது என்பதாகும். 1985-ஆம் ஆண்டு தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று நிலம் வாங்கும் நிதிக்கு ஒவ்வொரு குடும்பத்தினரிடத்திலும்

ஓராயிரம் ரூபா வேண்டி நில நிதி ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அதிகம் பணம் சேர்ந்ததாகவில்லை. முன் ஏற்பட்ட சில கசப்பான அநுபவங்களினாற் போலும் நிதி சேர்ப்பதைச் சந்தேகக் கண்கொண்டே மக்களும் பார்த்தனர்.

யாராவது நிதி வசதியுடையவர்களை முன் வந்து நிதியைக் கொடுக்க உடனடியாக நிலத்தை வாங்கச் செய்வதற்கு பல முனைகளில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதே வேளை முந்நாள் சட்டத்தரணி து. கருணாகரன் அவர்களை சிவாவும் நாமும் அணுகி நிலப்பதிவு பற்றி ஆராய்ந்த போது சம்பந்தப் பட்ட நிலப்பதிவு அப்பழுக்கற்றதென வில்லங்கங்களற்றதென அன்னார் கருத்துக் கூறியதால் இந்த நிலத்தை வாங்குதற்கான முழு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

சங்கத்திற்கு வாய்ப்பாகத் தீனுவும் சிவாவும் தனிப்பட்ட முறையில் வங்கிக் கடன் பெற்று நிலத்திற்கான முற்பணத்தைச் செலுத்தினர். இதே வேளை நில நிதிக்குப் பணம் சேர்க்கும் முயற்சியும் துரிதப்படுத்தப்பட்ட போது முதல் நன்கொடையாக ஓராயிரம் ரூபாவைத் தானாகவே முன் வந்து ஸ்ரீதரன் வழங் கினார். நிதி சேகரிப்பை பலரிடம் பலமுறை பேசி முடுக்கி விட்டது இந்த நிகழ்ச்சி. விளக்கமளித்து முயற்சித்தமையால் வெகுவிரைவில் சங்க நிதியில் 75,000/- வங்கியில் தேறியது. பரோடா வங்கியில் நிலம் கொள்வனவுக்கான கடன் பெறும் முயற்சியும் முன்னேறியது.

இக்கால கட்டத்தில் சங்கக் கூட்டு வழிபாட்டு மண்டபத்தின் உரிமையாளர், மண்டபம் தமது தேவைக்கு வேண்டுமென் றதற் கிணங்க தற்காலிகமாக மிற்செல் குடிமனையின் முதற் தளத்திலுள்ள ஒரு அறைவாடகைக்குப் பெறப்பட்டு 1985

கார்த்திகை 17ஆம் நாள் அங்கு வழிபாட்டு மண்டபம் நிறுவப் பட்டது.

இதன் காரணமாக கோவில் அமைப்பதற்கு முன் எமக்கென வழிபாட்டு மண்டபம் அமைப்பது முன்னுரிமை பெற்றது.

சம்பந்தப்பட்ட நிலம் கொள்வனவு பற்றிய 1985 மார்கழி 13ஆம் நாள் நடந்த ஆட்சிக் குழுக் கூட்டம் வரலாற்று முக்கியத் துவம் பெறுகின்றது. சங்கத்தின் வழிபாட்டு மண்டப அறையில் நடந்த கூட்டம் பலமணி நேரம் நீடித்தது. சாதக பாதகங்கள் விரிவாக ஆராயப்பட்டன; முழு நிலத்திற்கும் தேவையான 3,25,000 ரூபா உரிய நேரத்தில் பெறுவது சங்கத்திற்கு அப்பாற் பட்டதாக அனைவரும் கருதினர்; இறுதியாகக் கட்டிடத்துடன் கூடிய .059 ஹெக்டர் நிலப்பரப்பைச் சங்கம் 225,000 ரூபாவுக்கு வாங்குவதெனவும் வீட்டுடன் கூடிய குறுகிய வடக்குப் பகுதியைத் தீனு 100,000 ரூபாவுக்கு வாங்குவதென்ற ஒருமித்த கருத்துத் தீர்மானம் பெறப்பெற்றது.

சங்கத்திற்கான நிலப்பகுதியை வாங்குவதற்கு வேண்டிய, நிதியைத் திரட்டுவதில் பலரிடையே பலத்த சந்தேகங்கள் தோன்றிய நிலையில் மகாலிங்கம் பிள்ளையின் பங்களிப்பு முக்கியத்துவம் பெறுகின்றது. இத்தொகையைச் சங்கம் உள்ளூரி லேயே திரட்ட முடியுமென்ற உத்தரவாதத்தைத் தருவதாக மகாலிங்கம் பிள்ளை முன் மொழிந்த போது ஒருமித்து அனை வரும் ஏற்றனர். இந்நிலையில் 150,000 ரூபாவுக்கான நாலு ஆண்டுக் கடனைப் பரோடா வங்கி வழங்கியது. யாவும் கை கூடவே நிலமும் கொள்வனவாகி, நிதி திரட்டுதல் முன்னேற்ற மடைந்து சிற்சில தடங்கல்களிருந்தும் வங்கிக் கடன் உரிய

நேரத்தில் மீளப் பெற்றது கூடுதலான கட்டடக்கடனை மீண்டும் வங்கியில் பெற வழி அமைத்தது.

இதைத் தொடர்ந்து நவரத்தினசாமியால் நிலம் அளவிடப் பெற்று நிலப்பதிவு மாற்றத்திற்கான பணிகள் தொடங்கின. நத்தார் விடுமுறைக் காலமான போதிலும் கயிலாயநாதனின் முயற்சியால் 1985 டிசெம்பர் 27ம் திகதி நாள் குறிக்கப்பட்டது. அன்று சிவபாதமும், யானும் முழு நாளும் ஓஷென் கேற் சட்ட நிலையத்தில் தங்கி நிலப்பதிவுப் பணிகள் யாவையும் நிறைவு செய்தோம். சங்க வரலாற்றில் இப்பதிவு முக்கிய முன்னேற்ற மாகும்.

நிலப்பதிவு, மாற்றம் ஆகியனவற்றிற்கான செலவு 48,000 ரூபாவை அக்கால கட்டத்தில் செலுத்த முடியாமல் இருந்தது. இச் செலவினத்திற்கு சலுகை அளிக்கும்படி வேண்டி, நாட்டின் தலைவர் அவர்கட்கு விண்ணப்பித்தோம். எமது கோரிக்கையை அவர் ஏற்றுக் கொண்டார். முழுத் தொகைக்கும் விதி விலக் களித்தார். நாம் ஆச்சரியமடைந்தோம். இப் பேருதவிக்கு நாட்டின் தலைவரவர்கட்குத் தமிழ்ச் சமூகம் என்றும் நன்றியும் கடப்பாடு முடையது.

இவ்வளவு விரைவாகக் காணிப் பதிவு மாற்றம் செய்யப் பட்டதை எம்மவருள் சிலர் ஏற்கவோ நம்பவோ மறுத்தனர். எவ்வளவோ கூறியும் அவர்களின் பிடிவாதத்தை மாற்ற முடிய வில்லை. ஆனால் தாமே பதிவுப் பத்திரங்களை நேரடியாகப் பார்த்தனர், மகிழ்ந்தனர், வியந்தனர். சங்க நிகழ்வுகளில் அத்தகையோர் பின்னர் பெரும் பங்காற்றியமை பற்றி இங்கு சிறப்பாகக் குறிப்பிட வேண்டும்.

சங்கத்திற்கான நிலக் கொள்வனவு நிறைவான நிலையில் பொங்கல் நாளான 1986 தை 14ஆம் நாளன்று வழிபாட்டு மண்டபத்தை வாடகை அறையிலிருந்து சொந்த இடத்திற்கு மாற்றுதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டன. புதிய மண்ட பத்தைச் சுத்தம் செய்து விநாயகர், நடராஜர், முருகன் சிலா வடிவங்கள், புதிய சொந்த மண்டபத்தில் அமைக்கப் பெற்றதும், பல அடியார்கள் பத்திப் பரவசத்துடன் பங்கு பற்றியமை குறிப்பிட வேண்டிய நிகழ்வாகும். கோயில் திருப்பணி 1992இல் நிறைவாகும் வரை இம்மண்டபத்தில் பூசைகள் வழிபாடுகள் தொடர்ந்தன.

அடுத்து கோயில் திருப்பணி நிதி சேகரிப்புத் தொடங்கியது. 1986 மார்கழி 9ஆம் நாள் ஆட்சிக் குழுக் கூட்டத்தில் சிவன் கோவில் ஒன்றை கட்டுவதெனத் தீர்மானமாயிற்று. தமிழ் நாட்டில் இருந்து மானியமாகவோ கடனாகவோ திருப்பணி நிதி பெறு வதற்குப் பல முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. வரைபடங்க ளடங்கிய பல ஆவணங்களும் கொடுக்கப் பெற்றன. பாலசுந்தர மும் சச்சிதானந்தனும் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினரைச் சந்தித்தனர். தீனு தமிழ்நாட்டு முதல் அமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களையும் சந்தித்தார்; சச்சிதானந்தனும் சிவ சண்முகம் பிள்ளையும் அமைச்சர் இராம. வீரப்பன், தமிழ் வளர்ச்சித்துறைச் செயலர் ஔவை நடராஜன் ஆகியோரைச் சந்தித்தனர். யான் தமிழ்நாட்டு இந்து அறநிலையத் துறையினரைச் சந்தித்தேன். வெங்கடாசலபதிக்கான கோயில் அமைக்கக் கடன் கொடுக்கலாம் எனத் திருப்பதி திருமலை தேவஸ்தானத்தில் கூறியதை எம்மால் ஏற்க முடியவில்லை.

இரண்டு மூன்று ஆண்டுகளாகக் கடிதத் தொடர்பு கொண்டும் நேரடித் தொடர்பு கொண்டும் கடன் முயற்சி எதுவும் பயனளிக்க வில்லை.

மேலும் கால தாமதத்தைத் தவிர்க்க ஆட்சிக் குழு கோயில் கட்டுமானப் பணியை தொடங்கத் தீர்மானித்தது. இதற்கான வரைபடங்களைத் தயாரிப்பதற்கு ஸ்தபதியார் பேராசிரியர் கணபதியை இங்கு வரவழைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது. 1987 தை 15ஆம் நாள் திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபைத் தலைவர் நமசிவாயம், மறவன் புலவு க. சச்சிதானந்தன், அவரது தந்தையார் மு. கணபதிப்பிள்ளை ஆகியோருடன் யான் மகாபலி புரம் சென்றேன்; ஸ்தபதியாருடன் கலந்தாலோசித்து இங்கு வரும் ஏற்பாட்டை நிறைவு செய்தோம். சிவன் கோயிலானபடி யால் லிங்கம் செய்வதற்கான கருங்கல்லும் ஸ்தபதியாரால் தெரிவு செய்யப் பெற்றது. எமது நிதிப் பற்றாக் குறையும் ஸ்தபதியாரின் பிறபணி ஈடுபாடும் அவரது வருகையைத் தாமதப்படுத்தியது.

1989 ஐப்பதி 8ஆம் நாள் ஸ்தபதியார் இங்கு வந்து சேர்ந்தார். இரத்தின சபாபதியுடன் மிற்செல் மனையில் தங்கினார். இங்கு பத்து நாட்கள் தங்கி, பலருடனும் ஆலோசித்து, ஆட்சிக் குழுக் கூட்டங்களில் பங்கு பற்றினார். ஆலய அமைப்பிற்கான வரை படங்களைச் சிறப்பாகச் செய்து வழங்கினார். இந்நாட்டுச் சமூக அமைப்புக்குப் பொருத்தமாக விநாயகர் ஆலயம் அமைப்பதே சிறப்பான தென்ற அன்னாரின் ஆலோசனை ஏற்றுக் கொள்ளப் பெற்றது. விநாயகரை மூலமூர்த்தியாகவும், துர்க்கை, முருகன், நடராசர், வைரவர், சண்டேசுரர், பலிபீடம் ஆகியன பரிவாரத்தி லும் நிறுவப்படவும் விக்கிரக படங்களைத் தயாரித்துத் தந்தார். சீனிவாசகப் பெருமாள் கட்டுமானப் பணிகளின் போது சேர்க்கப் பெற்றது.

தொடக்கத்தில் கணபதி ஸ்தபதியவர்களும் அவரின் குழுவினருமே கோயில் கட்டுமான பணியினை மேற்கொள் வதாயிருந்தது. பின்னர் செலவினங்களைச் சீர் பார்த்து அந்த

யோசனை யைக் கைவிட்டோம். இது பற்றி ஆலோசித்த போது, பாரம்பரிய சிற்ப வேலைகள் தவிர்ந்த ஏனைய பணிகளைத் தமது கட்டட நிறுவனம் மேற்கொள்ள முடியுமென விஜேய் பட்டேல் தெரிவித் ததைத் தொடர்ந்து, கட்டடப்பணி அவருக்கு வழங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து பழைய கட்டடத்தின் பின்புறம் இடிக்கும் பணி 1990 மாசி 25ஆம் நாள் ஆரம்பமானது.

1990 சித்திரை 11ஆம் நாள் கூடிய ஆட்சிக் குழு வைகாசி 6ஆம் நாள் உத்திர நட்சத்திரத்துடன் கூடிய நன்னாள் காலையில் அடிக்கல் நாட்டுவதாகவும், அடிக்கல் நாட்டுதற்குப் புகழ்பெற்ற சமய சஞ்சிகையான **ஞானபூமியின்** ஆசிரியரும், சிறந்த பிரயாணக் கட்டுரையாளருமான மணியன் அவர்களை அழைப்பது எனவும் தீர்மானித்தது. சித்திரை 27ஆம் நாள் முதலாகப் பூசையில் வைக்கப்பட்டு, குறித்த நன்னாளன்று ஏராளமான பத்தர்கள் சூழ ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு வைபவரீதியாக மணியன், விஜேய் பட்டேல் இருவரினாலும் அடிக்கல் நாட்டப் பெற்றது. இந்துக்கள் மனதில் ஒரு புதிய உத்வேகத்தை இந்நிகழ்வு ஊட்டியது. அன்று மாலை இடம் பெற்ற கலை விழாவில் உரை யாற்றிய மணியன், கோயில் ஓராண்டுக்குள் கட்டிமுடிக்கப்பட வேண்டுமெனக் கூறினார். அக்கூட்டத்தில் திருப்பணியை அந் நாள் செயலாளர் சந்திரபாபுநாயுடு குறுகிய காலப்பகுதியில் முடிப்போமென கூறிய வாக்குறுதி எவ்வளவுக்கு உண்மையாகி யுள்ளது என்பதை நாம் நினைவு கூர வேண்டும்.

அடிக்கல் நாட்டப்பட்டநாளிலிருந்து நிதி நெருக்கடி காரண மாகச் சில காலம் சோர்வு நிலவியது. எனினும் நிதி சேகரிப்பு முயற்சிகள் தொடர்ந்தன. இந்நிலையில் முற்பண நிபந்தனை எதுவும் இன்றிக் கட்டட வேலையைத் தொடங்க முன் வந்த விஜேய பட்டேலின் ஆலோசனை மாசி 24 கூடிய நிர்வாகக்

குழுவினால் மகிழ்ச்சியுடன் வரவேற்கப்பட்டது. அடுத்த நாளே திருப்பணி தொடங்கும் வழிபாடுகள் நடாத்தப் பெற்று, பங்குனி 3ஆம் நாள் - திருப்பணி வேலைகள், தொடங்கின. கட்டடப் பணிகள் தொடர்வதற்கு வசதியாக, வழிபாட்டு ஒழுங்கு கள் மண்டபத்துக்கு வெளியேயும், பின்பு அயலிலே உள்ள தீனுவின் நிலத்தில் தற்காலிக மண்டபம் அமைக்கப்பெற்றும் திருக் குடமுழுக்கு வரை அந்த இடத்திலேயே வழிபாடும் பூசைகளும் நடைபெற்றன.

கால் கோளிட்ட நாளிலிருந்து இரு ஆண்டுகளில் வேலைகள் நிறைவாகித் திருக் குடமுழுக்கு இடம் பெற்ற போதிலும், கட்டடப் பணிகள் பதினைந்து மாதங்களுள் முடிவுற்றன. மிகுந்த ஈடுபாட்டுடனும் வெகு சிறப்பாகவும் நிர்மாண வேலைகளைச் செய்துதவிய விஜேய்பட்டேலின் சேவையை இவ் வேளையில் நாம் பாராட்டி என்றும் நினைவு கூர வேண்டும். கட்டடப் பணியை நீண்ட காலக் கடன் அடிப்படையில் தக்க நேரத்தில் செய்துதவிய அன்னாரது அரும்பணி என்றும் பாராட்டுக்குரியது.

பாரம்பரிய சிற்ப வேலைகள் யாவும் கே.என். நாராயணசாமி தலைமையிலான குழுவினர் தமிழ்நாட்டிலிருந்து வந்து ஆவணி 1991 முதல் 1992 பங்குனி மாதம் வரை தங்கியிருந்து பணியினைச் செய்து முடித்தனர். இங்கு தங்கிய காலம் முழுவதும் தமது சொந்த வீட்டில் சிற்பாசாரியார்கள் தங்குவதற்கு வசதி செய்த பெருமை வி. இராமகிருஷ்ண நாயக்கனைச் சாரும். கோயில் திருப்பணி அமைப்பு துரித கதியில் வளர வளர, அடியார்களது உற்சாகமும் வானுயர வளர்ந்தது. அக்கறை மேலீட்டினால் நாள்தோறும் பலர் வந்தனர். நாளுக்கு நாள் ஏற்படும் முன்னேற் றத்தைப் பார்த்தனர். உள்ளம் உவந்தனர். கட்டட நிர்மாணக்

கலைஞர் சிவப்பிரகாசம், கணக்காளர் யுவராஜன் போன்ற பலர் தாமும் சிற்பக் கலைஞருடன் சேர்ந்து வர்ணம் தீட்டிக் கோயில் கட்டடத்தை அழகுபடுத்தும் பணியில் ஈடுபட்டனர். தமக்கென உரித்தான கோயில் திருப்பணி நிறைவுற்று வழிபடக் கூடிய நாளை, ஆவலுடன் பலர் எதிர்பார்த்திருந்தனர். காலத்துக்குக் காலம் கோயில் திருப்பணி முன்னேற்றம் சீசெல்சுத் தொலைக் காட்சியில் ஒளிப்பரப்பானது, நம்மவரை மட்டுமின்றிப் பிற இன மக்களையும் கவர்ந்தன.

தை 1998இல் மூன்று லட்சம் ரூபாவுக்கு (60,000 அமெரிக்க வெள்ளி) 900 சதுர மீற்றர் அளவிலான நிலம் லொட்ஜ் - ஹரிசன் தெரு சந்தியில் கொள்வனவு செய்தோம். இந்நிலம் சங்கத்தின் திரட்டு நிதியிலிருந்தே கொள்வனவு செய்யப்பெற்றதும் குறிப் பிடத் தக்கது. சங்கத்தின் அடுத்த வரலாற்று நிகழ்வு இதுவாகும்.

சீவாச்சாரியார், ஓதுவார், இசைக்கலைஞர் தங்குவதற்கான குடிமனையை இந்த நிலத்தில் அமைப்பதே எமது நீண்ட கால நோக்கமாகும். தற்காலிகமாக அங்குள்ள வீடு பழுது பார்க்கப் பட்டுக் கோயில் ஊழியருக்குக் குடிமனையாக உள்ளது. சிவாச் சாரியார் வேறு வாடகை வீட்டில் தங்கியுள்ளார்.

1997-ஆம் ஆண்டு ரிஎம்கேஆர் பிள்ளை உபயமாகச் சங்க மண்டபத்தில் தெய்வ வரலாறுகள் பல அலங்கார வர்ணம் தீட்டப் பெற்றமையும் மண்டபத்தைப் பொலிவுறச் செய்தது.

கோயில் நிலம் பற்றிக் குறிப்பிடும் போது பூந்தோட்டம் முக்கியத்துவம் பெறுகின்றது. கோயிலின் நாளாந்த பூசைக்கு வேண்டிய பூக்கள் பெறுவதற்கான தோட்டம் அமைப்பதற்கு போதிய நிலம் இல்லாத போதிலும் முன்புறம் உள்ள சிறிய

நிலப் பரப்பில் இரத்தினசபாபதிப் பிள்ளையும் சரோஜினி தேவியும் விடா முயற்சி எடுத்ததன் காரணமாகச் சிறு பூந் தோட்டம் உருவாக்கப் பெற்றுத் தற்போதைய தேவைகளை நிறைவு செய்கின்றது.

இது தொடர்பாக நினைவில் இருக்க வேண்டிய பல நிகழ்வுகளைக் கூறுவது பொருத்தமாயிருக்கும். தற்போதைய முகப்பு வாயிலில் செழித்து வளர்ந்து மிகச் சுவையான பழங் களைத் தந்த மாமரம், கட்டட அமைப்புக்குத் தடையாக இருந்த தால் அம்மரத்தை நீக்க வேண்டியதாயிற்று. அம்மரம் பாதுகாக்கப் பட வேண்டுமெனப் பழனி பகீரதப் பிரயத்தனம் செய்தமை குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

கோயில் நிலத்தில் முதன் முதலாக நாட்டப் பெற்ற கமுகமரம் செழித்து வளர்ந்து கோவிலுக்கு வேண்டிய பாக்குப் பெற முடிந்ததும், கட்டடத்திற்காக அழிக்க எண்ணியபோது சரோஜினி தேவியும் சிவசண்முகமும் கருத்து வேறுபட்டு, ஈற்றில் சிவாவின் பெருமுயற்சியால் அக் கமுகு மரம் நிலத்தின் பின்புறத் தில் மீள் நாட்டப் பெற்றது. தற்போது அம்மரம் சிறப்பாக வளர்ச்சி பெற்றுக் கோயிலுக்கு வேண்டிய பாக்கைத் தருகின்றது.

கோயிலின் தல விருட்சமாக பின்புறத்தில் அமைந்துள்ளது வில்வ மரம். 1989ஆம் ஆண்டின் இறுதியில் நாம் யாழ்ப்பாணம் சென்றோம். எமது ஊர் விநாயகர் ஆலயத்துக்கு வழிபடப் போனோம். அயலிலே அமைந்திருக்கும் ஐயனார் கோயிலின் வில்வமரத்தி லிருந்து விழுந்த இரு பழங்களைச் சரோஜினி தேவி இங்கு கொண்டு வந்து நாற்றுப் போட்டு வளர்த்தார். இரு வில்வங் கன்றுகள் முளைவிட்டு வளர்ந்தன. அவற்றுள் ஒன்று அடிக்கல்

நாட்டு விழாவன்று கோயிலுள் வைபவரீதியாக இந்திய துணைத் தூதரால் நாட்டப்பட்டது. கட்டடத் திருப்பணிக் காலச் சூழலைத் தாங்க முடியாத நிலையில் அம்மரம் வளர முடியவில்லை. வீட்டில் அதிஷ்டவசமாக நன்றாக வளர்ந்த மரம் பின்பு அதே இடத்தில் நாட்டப் பெற்று இன்று, செழிப்புற்று வளர்ந்து தல விருட்சமாக அமைந்துள்ளது. (படம் பார்க்க)

கோயில் முன்றிலை அலங்கரித்து விளங்கும் மல்லிகைச் செடி இந்நாட்டிற்கு ஒரு வரப்பிரசாதமாகும். இச் செடியை நாம் கொழும்பில் தங்கியிருந்த இராமகிருஷ்ண விடுதியில் ஒரு மாத காலம் கவனமாகப் பராமரித்து இங்கு கொண்டு வந்து கோயிலில் நாட்டினோம். இன்று செழித்து வளர்ந்து தினமும் நறுமணத் தோடு கூடிய பூக்கள் கோயில் தேவைக்காகப் பெறப்படுகின்றன. (படம் பார்க்க). மேலும் இச் செடியின் விழுதுகள் இங்கு பல இல்லங்களுக்கு எடுத்துச் சென்று நாட்டப்பட்டதால் மல்லிகைப் பூ தொடர்ந்து இந்நாட்டில் பெறப்பெற்று ஆலய தேவைக்கு பயன்படுத்தப்படும் வாய்ப்புண்டு. மல்லிகைச் செடிகள் பல இல்லங்களில் செழித்து வளர்ந்துள்ளன.

கோயில் தேவைகட்கு அத்தியாவசியமான தர்ப்பைப் புல் இங்கு கிடைப்பதில்லை. கும்பாபிஷேகத்தின் பொருள் பட்டி யலில் தவறுதலாக விடுபட்டதால் இந்தியாவில் இருந்தும் பொருட்கள் வரவில்லை. திருக்குடமுழுக்கு நாளன்று தர்ப்பைப் புல் அவசியம் தேவைப்பட்டதால், நாமிருவரும் பழனியும் முதல் நாள் இரவு வேளையில் பல இடங்கள் போய்த் தர்ப்பைப் புல் போன்ற புல் எடுத்து வந்து நிலமையைச் சமாளிக்க வேண்டியதாயிற்று. இந்த நிலையை மனதில் வைத்து

சரோஜினி தேவி எமது சிற்றூரான மறவன்புலவு வள்ளக்குளத்தி லிருந்து தர்ப்பைப் புல் ஒன்றை வேருடன் பாதுகாப்பாகக் கொண்டு வந்து கோயிலில் நாட்டி, தற்போது பின்புறத்தில் என்றும் கோயில் தேவைக்குப் பயன்பட அடர்த்தியாக வளர்ந் துள்ளது. (படம் பார்க்க)

கோயில் ஊழியர்களுக்கான கட்டடப் பணிகள் நிறைவான பின் அந்த நிலப்பரப்பில் ஒரு சிறந்த பூந்தோட்டம் நிறுவுவது கோயில் வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும்.

5

நிதி

இந்துக்களுக்கான புதிய சங்கத்தை மிகுந்த உற்சாகத்துடனும் நிறைந்த தொடக்க காலப் பகுதியில் பரபரப்புடனும் தொடங்கிய போதிலும், அதன் துரித வளர்ச்சிக்குத் நிதி பெருந் தடையாக இருந்தது. தொடர்ந்து இடம் பெற்ற சந்திப்புக்கள், விளக்கங்கள், விண்ணப்பங்கள் பயனளிக்கத் தொடங்கியதனால் வெகு விரைவில் இந்நாட்டின் முதல் கோயில் இடம் பெற்றது வரலாறு பதித்த நிகழ்வாகும்.

பணம் சேகரிப்பதைவிட, தொடக்கத்திலிருந்து இடம்பெற்ற சங்கத்தின் நிதி நிர்வாக முறை மக்களிடையே நிலவிய சந்தேக விபரீதங்களை நீக்கியது; புதிய நம்பிக்கையையும் புரிந்துணர் வையும் ஏற்படுத்தியது. இதன் விளைவாகப் பணம் வசூல் செய்வது எளிதாயிற்று. பெரும்பாலும் இந்நாட்டு நிதி கொண்டு அதி விரைவில் கோயில் திருப்பணி நிறைவு பெற்றதற்கு இந்தப் புதிய நிதி நடைமுறை தகுந்த சான்றாகும்.

நிதி நடைமுறை சிறப்பாக அமைவு பெற தொடக்கத்தில் அறிமுகமான இரு முறைகள் வழிகாட்டியாக அமைந்தன. முதலாவதாக அனைத்து வரவுக்கும் பற்றுச் சீட்டும், கொடுப் பனவுகட்கு சான்றுச்சீட்டு முறையும் மிக நுணுக்கமாகச் செயல் படுத்தப்பட்டது. அத்துடன் அனைத்துக் கொடுப்பனவுகளும் காசோலை மூலம் செய்யப்பட்டது. கையிருப்பாகப் பணம் வைத்திருக்காததால் நிதி நடைமுறை யாவும் வங்கியூடாகவே நடாத்தப்படுவது கட்டாயமாகியது. இப்படியான ஒழுங்கான நிதி

நடைமுறை மக்களிடையே நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெற வைத்த பெருமை ஆரம்பத்திலிருந்து நிதி நடைமுறைக்கு உறுதுணையாயிருந்த சோ. பாலசுந்தரத்தையே சாரும்.

இரண்டாவதாக அமைந்தது திங்கள்தோறும் நிதி அறிக்கை முறை. தொடக்கத்தில் நிதி நிலைமையும் புழக்கமும் குறைவான மையால் கணக்கு எழுதப்பட்டாலும் திங்கள்தோறும் நிதி அறிக்கை முறை நடைமுறைப்படுத்தப் படவில்லை. 1985-1988 நிதி அறிக்கை செப்டம்பர் 1991ல் பதிவாளருக்குச் சமர்ப்பிக்கப் பட்டது. ஆட்சிக்குழுவினர் நிதி நிலையை அறிவதற்கும் மக்களிடையே நம்பிக்கையையும் நம்பகத் தன்மையை வளர்ப்பதற்கும் திங்கள்தோறும் நிதி அறிக்கை வழங்கும் முறை அவசியம் என வற்புறுத்திச் சங்கத்தில் இதை நடைமுறைப் படுத்திய பெருமை பழநியைச் சாரும்.

மேலும் ஒரு நிதி நடைமுறை சங்க விதிகளுடன் சேர்க்கப் பட்டுள்ளது. ஐம்பதினாயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட எந்தச் செலவினமும் ஆட்சிக் குழுவின் ஒருமித்த தீர்மானமாக வேண்டும். ஆட்சிக் குழுவில் கருத்து வேற்றுமை ஏற்படுமாயின் பொதுச் சபையே கூடித் தீர்மானிக்க வேண்டும்.

வெளிநாடுகளிலிருந்து எதிர்பார்த்திருந்த பெருந் தொகையிலான பண உதவியோ அல்லது கடன் உதவியோ கிடைக்காத காரணத்தினால் உள் நாட்டிலேயே கோயில் திருப்பணிக்கான தொகையைத் திரட்டுதற்குப் பல முயற்சிகளும் வழிவகைகளும் முடுக்கிவிடப்பட்டன. 1986-இல் தொடங்கப்பட்ட நில நிதிச் சேர்க்கை மந்தகதியில் செயற்பட்ட போதிலும் திரட்டிய நிதியைக் கொண்டு சங்கம் பெற்ற வங்கிக் கடனை உரிய நேரத்தில் செலுத்த

முடிந்தமை அன்றைய நிலையில் பாராட்டுக்குரிய சாதனையாக அமைந்தது.

1985-ஆம் ஆண்டு, சங்க உறுப்புரிமைக்கு ஆண்டுச் சந்தா முந்நூறு ரூபாவாக இருந்தது. பலர் திங்கள்தோறும் இருபத்தைந்து ரூபா செலுத்தி உறுப்பினராயினர். தொடக்கத்தில் உறுப்பினர் தொகை ஏறக்குறைய நூறாக அமைந்தது. க. சிவபாதத்தின் முன் முயற்சியால் வாழ்நாள் உறுப்புரிமைத் திட்டம் 1987-இல் தொடங்கப் பெற்ற போது வாழ்நாள் உறுப்பினராக இருவரே இருந்தார்கள். தற்போது, வாழ்நாள் உறுப்பினர் கட்டணம் தொடங்கப்பட்டபோது இருந்த படியே இரண்டாயிரத்தி ஐந்நூறாகவே இருக்க வாழ்நாள் உறுப்பினர் தொகை, ஐம்பதுக்கு மேலாகியுள்ளது. சங்கத்தின் சாதாரண உறுப்புரிமை 1999இல் உச்ச நிலையாக முந்நூறை எட்டியது. உறுப்புரிமைப் பணம் முழுத்தொகையும் ஒரே முறையில் தை மாத இறுதிக்குள் செலுத்தப்பட வேண்டுமென்ற விதித் திருத்தம் அண்மையில் செய்யப்பட்டுள்ளதும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

உறுப்புரிமைப் பணம் யாவும் நடைமுறைக் கணக்கில் அல்லாது புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ''மீட்புக் கணக்கில்'' சேர்க்கப்பட்டு, 1998இல் குடியிருப்புக்கான நிலம் வாங்கிய போது இக் கணக்கில் இருந்த பணமே பயன்பட்டது குறிப்பிடப்பட வேண்டியதாகும். நடைமுறைக் கணக்கில் ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேல் சேரும் பணம் யாவும் சங்க வைப்பு நிதிக்கு மாற்றப்படும் சிறந்த முறையும் நடைமுறைப் படுத்தப்பட்டது. இந்நிதியே குடியிருப்புக் கட்டிடத்திற்குப் பயன்பட உள்ளது.

1984இல் சங்கம் அமைப்பதற்கு முன், நடிகர் ஜெயசங்கரைக் சிறப்பிப்பதற்கெனச் சேர்க்கப்பட்ட நிதியில் நாலாயிரம் ரூபா

வரை மிகுதி இருப்பதாக ஆட்சிக் குழு உறுப்பினரான மறைந்த கே. வாசுதேவன் செட்டி அறியத் தந்தார்கள். இப் பணத்தைப் பொதுத் தேவைக்கு எடுப்பதென ஆட்சிக்குழு தீர்மானத்ததிற் கிணங்க, சோ. பாலசுந்தரமும் யானும் இப்பணத்தைக் சேர்க்கும் படி பணிக்கப்பட்டோம். வாரம் தோறும் சனிக்கிழமை நண்பக லில் தேவன் செட்டியைச் சந்திக்கும்போது, அவர் பணத்தை ஒழுங்காகச் செலுத்தி, மேலதிகமாகவும் செலுத்தியது நினைவு கூர வேண்டியதாகும். அப்போது, அது சிறு தொகையாக இருந்தாலும் அக்கால கட்டத்தில் சங்கச் செலவினங்கட்கு அது பெருந் தொகையாகவே கணிக்கப்பட்டது.

1986-இல் சங்க வேண்டுகோளை ஏற்று கோயில் தேவைகட்காக இறக்குமதி யாகும் அனைத்துப் பொருள்களுக்கும் வரிச் சலுகையை சீசெல்சு நாட்டின் நிதி அமைச்சு வழங்கியது. சங்கக் கட்டடப் பொருள்களும் இச்சலுகை மூலம் பெறப்பட்டன. இச் சலுகை இன்றும் தொடர்ந்து நடைமுறையிலிருப்பது சங்கத் திற்குக் கிடைத்த சிறப்பாகும். இதற்காக எமது சமூகம் அரசாங்கத் திற்கு என்றும் கடமைப்பட்டதாகும்.

1987-இல் நவீன கண் காட்சி ஒன்றை நடாத்தலாமென்ற பொது அபிப்பிராயம் வெளியிடப்பட்டது. இதைத் தொடர்ந்து இந்நாட்டில் முதன் முறையாக, தாவர உணவுக் கண் காட்சிகள் சங்கத்தினால் இருமுறை ஒழுங்கு செய்யப்பட்டன. முதற் கண் காட்சி வைகாசி மாதம் 2ஆம் நாளும் இரண்டாவது கண்காட்சி 1988 ஐப்பசி 1ஆம் நாளும் நடாத்தப்பட்டு முறையே ரூபா 8732/10, 10,822/22 ஆகியன தேற்றமாகப் பெறப்பட்டது. நிதி சேகரிப்பை முன்னெடுத்ததோடு மாத்திரம் அல்லாது இந்நாட்டில்

இந்து சமூகத்தினரது கலாச்சார விழுமியங்களை அறிந்து பாராட்ட இக் கண்காட்சிகளே வழி வகுத்தன. இக்கண்காட்சிகள் இரண்டும் வாடகை இன்றித் தந்த அங்கிலிக்கன் தேவாலயத்திற்கு அருகே அமைந்துள்ள மண்டபத்தில் முழு நாள் நிகழ்வாக நடாத்தப்பட்டன. இதற்கான விளம்பரங்களைத் தொடர்ந்து பெருந்திரளான மக்கள் கலந்து ஆதரவளித்தனர். உணவு வகைகள் யாவும் அன்பளிப்பாக வழங்கப்பட்டதுடன் தாவர உணவு வகைகள் பல உடனுக்குடன் சுடச் சுடத் தயாரித்து வழங்கிய பெருமை எமது மகளிரையே சாரும்.

1988 ஒக்டோபரில் சிங்கப்பூரிலிருந்து சர்மா கலைக் குழுவினர் வரவழைக்கப்பட்டுத் தொடராகப் பல கலை நிகழ்ச்சிகள் அரங்கேற்றப்பட்டதால் ரூபா 28,000/- கட்டிட நிதிக்காகக் சேர்க்கப்பட்டமை பெரு வெற்றியாகும். அந்நாளில் நடாத்தப் பட்ட எல்ஏஎஸ் விமானச் சேவை எமக்களித்த நிதிச் சலுகைகள் எம்மது கலைநிகழ்ச்சிகட்குப் பேராதரவாக விளங்கின என்பதும் நினைவு கூரப்பட வேண்டியதாகும்.

நிதி திரட்டுவதற்கு எடுக்கப்பட்ட பல்வேறு முயற்சிகளும் நடவடிக்கைகளும் பயனளித்ததன் விளைவே கோவில் கட்டட நிதி படிப்படியாக வளர வழி வகுத்தது. இச் சந்தர்ப்பத்தில் பிபி பிள்ளை என அழைக்கப்பட்ட பழநிவேலாயுதம் பிள்ளையால் பேச்சுக்காகச் சொல்லப்பட்ட உண்டியல் மூலம் நிதி திரட்டும் முறை வரவேற்கப்பட்டு, பெரு நிதி திரட்ட வழி வகுத்ததைக் குறிப்பிடவேண்டும். இம்முறை பற்றிக் கருத்துக் கூறப்பட்ட அடுத்த நாள் காலையே சிவபாதம் உண்டியலுக்கு வேண்டிய தகரங்களுடன் ஆயத்தமாகி விட்டார். ஆனால் சிவசண்முகம்

பிள்ளையவர்கள் தகரங்கட்குப் பதிலாக சாக்கு முத்திரையிட்ட மர உண்டியல்களைத் தானாகவே செய்து வழங்கினார். ஐம்பதுக்கு மேற்பட்ட உண்டியல்கள் கடைகளிலும் தனி நபர்களிடமும் கட்டட நிதிக்கு பணம் சேர்ப்பதற்காக வைக்கப்பட்டன.

சங்க நிதி வரலாற்றில் இந்த உண்டியல் முறை தளர்வற்ற வெற்றிப் பாதையாக அமைந்தமை பாராட்டப்பட வேண்டிய தாகும்.

இந்த உண்டியல் முறை வசூலைச் சிறப்பித்த பெருமை, விடா முயற்சியோடும் மிகுந்த ஈடுபாட்டுடனும் நாள் தவறாது கால நேரம் பாராது நடந்தோ வாகனத்திலோ ஒவ்வொரு வார இறுதியிலும் சென்று சேகரித்த பெருமை க. இரத்தின சபாபதிப் பிள்ளையையே சாரும்.

அன்னார் அவ்வப்போது உண்டியல் சேகரிப்புக்குத் தனக்கு உதவியாக சுபாஷ், மாணிக்கம், மகாதேவன், நவரத்தினசாமி, சிவா, ரவி, கல்யாண் போன்றோரையும் அவர்களின் வாகனங் களையும் உறுதுணையாக்குவது வழக்கம். இப்பொது உண்டியல் மூலம் 1988 முதல் 1992-இல் திருக்குடமுழுக்கு வரை 1,38,334 ரூபாவும், திருக்குடமுழுக்கு முதல் 1999 வரை 35,701.98 ரூபாவும் - ஒட்டு மொத்தமாக 1,74,035-98 ரூபா கட்டட நிதிக்குச் சேர்க்கப்பட்ட செய்தி வரலாற்றுப் பதிவுடன், பாராட்டுக்குரியது மாகும்.

வழிபாட்டு மண்டபம் தொடங்கிய நாளில் இருந்தே மரத்தினால் செய்யப்பட்ட சங்க உண்டியல் புழக்கத்தில் இருந்தது. கோயில் அமைத்த காலத்திலிருந்து இதற்குப் பதிலாக, மும்பாய் வர்த்தகர் எம். ஜெயராஜ் ஷெட்டியால், அன்பளிப்பாக வழங்கப்

பட்ட பாதுகாப்பான உருக்கிலானான உண்டியல் கோயிலுள் உள்ளது. அடியார்களும் மிகுந்த ஆர்வத்துடன் கோயிலை வழிபடும் உல்லாசப் பயணிகளும் இந்த உண்டியல் மூலம் வழங்கும் காணிக்கைகள், கணிசமான வருமானத்தைக் கோயி லுக்குக் கொடுக்கின்றது. திருக்குடமுழுக்கு நாளிலிருந்து 2001 முடிய 4,69,321,76 ரூபா உண்டியல் வசூல் கிடைத்துள்ளது. சராசரியாக ஆண்டுக்கு 46,932,17 திங்களுக்கு 4000 ரூபா வரையும் கிடைக்கின்றது.

1990 வைகாசித் திங்களில் அடிக்கல் நாட்டிய நாளிலிருந்து கட்டட நிதி சேகரிக்கும் பணி துரித கதியில் ஆரம்பமானது. ஆனி 10ஆம் நாள் கூட்டப்பட்ட சிறப்புப் பொதுக் கூட்டத்திற்கு 30 உறுப்பினர் வந்திருந்தமை பெரும் எண்ணிக்கையாக அன்று கணிக்கப்பட்டது. அன்று கிருஷ்ணமூர்த்திப்பிள்ளை தலைமை யில் நிதிக்குழு அமைக்கப் பெற்று ஆட்சி - நிதிக் குழுக் கூட்டங்கள் கூட்டாக நடைபெற்றன. கட்டட நிதி சம்பந்தமாக அக்கறையும் ஆர்வமும் வளர்ந்தது. புதிய நிதிப் பட்டியல் மூலம் வசூல் முறையை றமணி முன்னெடுத்தார். தவணை முறையில் பணம் சேர்க்கப்பட்டன. வாசுகி, சாந்தா நாயர், சரோஜினி தேவி ஆகிய மூவரும் பெண்கள் அணியாகப் பல இடங்களுக்குப் போய் நிதிப்பட்டியலை வளர்த்தனர்.

உலகெங்கும் நிதி திரட்டுதற்காக, 66 நிதி விண்ணப்பங்களை, அனுப்பி இவை யாவும் ஞானபூமி, ஃபேமினா, பவான் சஞ்சிகை போன்ற உலகளாவிய பத்திரிகைகளில் வெளிவந்தன. முதல் அன்பளிப்பு வெளிநாட்டிலிருந்து பத்து வயது நிரம்பிய சிறுமி யிடமிருந்து தமிழில் கடிதத்துடன் வந்தது. இந்து சமுத்திரத்தின் மத்தியில் விநாயகர் கோயில் நிறுவப்படுவது பற்றிப் பெருமைப் படுவதாகவும் தன்னால் முடிந்த தொகையாக ஓர் அமெரிக்க

வெள்ளி அனுப்புவதில் மன நிறைவடைவதாகவும் குறிப்பிட்டார். ஆனால் கடிதத்தில் தனது பெயர் முகவரி எதுவுமே குறிப்பிடாததால், பற்றுச் சீட்டு அனுப்ப முடியவில்லை. தபால் தலை மூலம் அப்பெண் இலங்கையைச் சேர்ந்தவர் என்பது தெரிய வந்தது. தனி நபர்களிடமிருந்து சிறு தொகைகளாக, மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து, கனடா, அமெரிக்கா, இந்தியா, இலங்கை, மொரிசியசு, புருணை, சுவிற்சலாந்து, தென் ஆபிரிக்கா போன்ற நாடுகளிலிருந்தும் பாபூவா நியூ கினியிலிருந்து ஒரு குழுவினரிடமிருந்து 526 அமெரிக்க வெள்ளிக்கான வங்கி வரவோலையும் கிடைத்தது. அனைத்துலக ஆதரவு பாராட்டப்பட வேண்டியதாகும்.

முன்னாள் அமைச்சர் சி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் சென்னையில் நிதி சேகரிப்புத் துணைகுழு அமைக்கப்பட்ட போதிலும் அதிகம் முன்னெடுக்கப் படவில்லை. ஞானபூமி ஆசிரியர் மணியன் தமது பத்திரிகை வாயிலாக இந்திய ரூபா 5644 சேர்த்து அப்பணம் ஆலய நிதியில் 1998-இல் சேர்க்கப்பட்டது. புகழ்பூத்த திரைப்பட நடிகர் ஜெய்சங்கர் கட்டட நிதிக்காகக் கணிசமான தொகை சேர்த்து அனுப்பியமை குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

1990-91 காலப்பகுதியில் கட்டட நிதி சேகரிப்பு உச்சக்கட்டத்தை எட்டியது. வெவ்வேறு குழுக்கள் மாகேயிலுள்ள அத்தனை இந்துக்களையும் சந்தித்து நிதி சேகரிப்பில் மிகுந்த முனைப்புடன் ஈடுபட்டனர். நிதி சேகரிப்பில் ஈடுபட்ட பலரில் சிவசண்முகம் பிள்ளை, சபாஷ்சந்திரன் பிள்ளை, பாலசுந்தரம், பழநி, சுப்பிரமணியம் பிள்ளை, இரத்தினசபாபதிப் பிள்ளை, மகாதேவன், ஞானகிராமன், நவரத்தினசாமி, மாணிக்கவாசகர், இராஜசுந்தரம், மகாலிங்கம் பிள்ளை, தர்மராஜன் மற்றும் யான் ஆகியோர்

குறிப்பிடப்பட வேண்டியவர்கள். சண்முகமும் யானும் பிறாளே தீவு சென்று ஒருநாள் முழுவதும் நிதி சேகரித்தோம். கட்டட நிதிக்கு வழங்கிய 9,50,051-45 ரூபாவில் திருக்குடமுழுக்கு வரை 8,14,542-45 ரூபா சேர்க்கப்பட்டு இன்னமும் சேர்க்கவேண்டிய நிலுவையாக 1,35,509 ரூபா உள்ளது.

கோயில் திருப்பணிக்கு ஒட்டுமொத்தமாக, 1,314,500 ரூபா செலவாகியுள்ளது. இத்தொகையில் 4,99,957/55 ரூபா பொது உண்டியல், கலை கலாச்சார விழாக்கள், உணவுக் கண்காட்சிகள் மற்றும் சிறு நன்கொடைகள் மூலம் பெறப்பட்டுக் கட்டட நிதியுடன் சேர்க்கப்பட்டதாகும். பரோடா வங்கியில் ஒக்டோபர் 1990 முதல் கட்டட நிதிக் கணக்குத் தொடங்கினோம். கோயில் கட்டட அமைப்பு நிறைவானதும் 1992இல் அக்கணக்கு மூடப் பட்டது.

கோயில் திருப்பணி வேலைகள் துரிதகதியில் முன்னேறிய காலங்களில், கட்டிட நிதிக்குப் பணம் சேரும் போதெல்லாம் தவணைக்கு அவ்வப்போது 50,000 ரூபா என்ற படி விஜேய் கட்டட நிறுவனத்துக்கு நிதி வழங்கப்பட்டது. இறுதியாக, சங்கத்திற்கு கொடுக்கப்பட்ட வங்கிக் கடனைப் பயன்படுத்தி கட்டடக் கணக்கைப் பூர்த்தி செய்ய 20 புரட்டாசி 1992-இல் சென்ற போது, கடன் தொகையைச் சங்கம் முற்றாக தீர்க்கப் போவதை நம்பமுடியாமல் விஜேய் பட்டேல் வியப்புற்றார். சங்கம் கொடுக்க வேண்டிய தொகையிலிருந்து 100,000 ரூபாவை அன்றைய நாள் தள்ளுபடி செய்தது அன்னாரின் தயாள குணத் திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். கோயில் கட்டடப் பணிக் காக விஜேய் கட்டட நிறுவனத்திற்குச் சங்கம் 950,000 ரூபா வழங்கியது.

கோயில் திருப்பணியின் போது அடியார்களது அக்கறையும் ஈடுபாடும் பெருகியமைக்குப் பல நிகழ்வுகள் உண்டு. இவற்றுள் நிதிக் கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் நிலை நாட்டிய, மிகச் சிறிய ஆனால் அன்று பேருதவியாக விளங்கிய, நிகழ்வை நன்றியறிதலுடன் குறிப்பிடுவது பொருத்தமாகும். கோயில் கட்டுமானக் காலத்தில் யான் நிதி நடைமுறைக்கு உதவியாளனாக இருந்தேன். வார இறுதியில் சராசரியாகப் பத்தாயிரம் ரூபா வரை சேரும் பணத்தைத் திங்கள் காலை வங்கியில் சேர்ப்பது தலையாய கடன். நாமெல்லோரும் பணிக்குப் போவதால் இடை யூறு ஏற்பட்டது. மங்களாவும் யானும் போலோனையில் பணி புரிந்த காலம். அன்னார் திங்கட்கிழமை தோறும் நண்பகல் வீடு திரும்பும் வசதியைப் பெற்றிருந்தமையால், எமது உறையுள் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கும் பணத்தை எடுத்து வந்து வங்கியில் உரிய நேரத்தில் சேர்த்தமை அன்று நிலவிய நம்பிக் கைக்கும் ஈடுபாட்டுக்கும் அன்புக்கும் என்றும் மறக்கமுடியாத நிகழ்வாகும். இத்தகைய நிகழ்வுகளும் சூழ்நிலைகளுமே அன்று கோவில் வளர்ச்சிக்கு உறுதுணையாகின.

1989-1992 காலப்பகுதியில் யாவரும் கட்டடப் பணியில் ஈடுபட்டிருந்தபோது, கூட்டங்களிலோ உறுப்புரிமை சேர்ப்ப திலோ அக்கறை கொள்ள வாய்ப்பு வசதிகள் இல்லாததால் உறுப் புரிமைப் பணம் கடனில் சேர்ப்பதில் பின்னடைவு ஏற்பட்டது.

திருக்குடமுழுக்கைத் தொடர்ந்து 1992இன் பிற்பகுதியில் உறுப்புரிமைக் கட்டணம் அளவிடும் பணியை பி.ஆர். நாயுடு வும், எஸ். சொக்கலிங்கமும் முன்னெடுத்து ரூபா. 33,575/- சேர்த் தனர். தொடர்ந்து 1994 ஐப்பசி - தை 1995 காலப்பகுதியில் எம். சத்தியா, ரிஎம்கேஆர். இராமுப் பிள்ளை, சரோஜினிதேவி

ஆகியோரின் முயற்சியால் உறுப்பினர் எண்ணிக்கை அதிகரித்தது. பின்பு 1997இல் திருவாளர்கள் வி. அனந்தபத்மநாபன், சி. பொற் செல்வன், வி. முருகையன் பிள்ளை, ரி. சண்முகம் பிள்ளை, ஜி. தருமலிங்கம் பலமுறை குழுக்களாகக் செயற்பட்டு உறுப் புரிமைக் கட்டண நிலுவைகள் யாவற்றையும் நீக்கி, சிறந்த உறுப்புரிமைப் பட்டியலைச் சங்கத்திற்கு ஆக்கிய பெருமையைப் பெற்றனர். அக்காலத்தில் வாழ்நாள் உறுப்பினர் எண்ணிக்கை 27 ஆயிற்று.

கோயில் அமைப்புத்திட்டம் வரைந்த போது உட்பிரகாரத் திற்குப் பளிங்கு பதிப்பது செலவு கருதிச் சேர்க்கப்படவில்லை. இதுபற்றிப் பலமுறை ஆராயப்பட்ட போது நாட்டில் அமையப் போகும் ஒரே ஒரு ஆலயத்தில் பளிங்கு பதிப்பது அவசியம் எனச் சுபாஷ்சந்திரன் பிள்ளை இறுதிவரை வலியுறுத்தினார். இதை ஏற்ற ஆட்சிக்குழு புரட்டாசி 1991இல் பளிங்கு பதிப்பதெனத் தீர்மானித்தது. இதற்கான செலவு ரூபா. 140,000/- என மதிப் பிடப்பட்டது. இத் தொகையை தீனு பிள்ளையும் பி. கிருஷ்ண மூர்த்தி பிள்ளையும் சம பங்காக ஏற்றுக் கொண்டமை நற்செய்தி யாக அமைந்தது. தரமான பளிங்குக் கற்களை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்து, பளிங்குப் பதிப்பு 1992 பங்குனியில் நிறைவு பெற்றது. இறக்குமதியின் போது ஏற்பட்ட இழப்புக்களுக்கு ஈடாகச் சிவசண்முகம் பிள்ளையின் விடாமுயற்சி காரணமாக 18,950/05 ரூபா காப்புறுதி நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டது.

இந்நிலையில், சங்கத்திற்கு எது விதமான செலவினங்களும் இல்லாது கோயிலுக்கு வேண்டிய சில பொருட்களையும் பல வசதிகளையும் அடியார்கள் பலர் தமது செலவில்

நிறைவேற்றி யதை நன்றியுடன் குறிப்பிட வேண்டும். தமிழ் நாட்டுச் சிற்பக் கலைஞர் குழு இங்கு வந்து போவதற்கான விமானச் சீட்டுச் செலவு மற்றும் இங்கு தங்கிப் பணிபுரிந்ததற் கான சம்பளம் அனைத்தையும் ஜி.எஸ். பிள்ளை ஏற்றார். திருக்குடமுழுக்கிற்கு வந்திருந்த ஐவர் அடங்கிய சிவாச்சாரியார் குழு, மற்றும் நாதஸ் வர - தவில் வித்துவான்கள் குழு ஆகிய அனைவரும் வந்து போவதற்கான விமானச் சீட்டு மற்றும் அதுசார்ந்த செலவினங்கள் யாவற்றையும் தீனு பிள்ளை ஏற்றார். திருக்குடமுழுக்குப் பொருள்கள் மற்றும் பாத்திரங்கள் யாவும் இராகவன் சகோதரர் கள் அன்பளிப்பாகவே தமிழ்நாட்டிலிருந்து வரவழைக்கப் பட்டன. ஆலய முன்கதவு ரூபா. 20,000/- செலவில் அலைட் பில்டோர்சின் அன்பளிப்பாகும்.

போகிலால் வலாப்ஜி அவர்கள் தனது மறைந்த துணைவி யாரின் நினைவாகச் சீசெல்சு புறுவறீசில் உள்ள ஏறக்குறைய 800 பங்குகளைச் சங்கத்திற்கு மாற்றினார். அதிலிருந்து தவணை முறையில் தொடர் வருமானம் என்றும் வந்து கொண்டிருப்பதை நன்றியுடன் நினைவு கூர வேண்டும்.

இதுவரை காலமும் அருச்சனைத் தட்டுப் பணம் இரு அர்ச்சகர்களாலும் பங்கு கொள்ளப்பட்டன. 1999 முதல் உள்ள புதிய திட்டப்படி அருச்சனைத் தட்டுப்பணம் யாவும் பூட்டப் பட்ட இதற்கான சிறப்பு உண்டியலில் சேர்க்கப்படுகின்றன. மாதாந்தம் நிர்வாகத்தினால் திறக்கப்பட்டு உள்ள பணத்தில் அரைப்பங்கு பிரதம அருச்சகருக்கும் மிகுதி அரைப்பங்கில் முப்பது வீதம் உதவி அருச்சகருக்கும், எஞ்சிய 20 வீதம் சரிபாதியாக நாதஸ்வர தவில் வித்துவான்கட்கு வழங்கப்படு கின்றன.

இந்தியாவில் நிகழ்ந்த இரு நிலநடுக்கங்களினால் பாதிக்கப் பட்ட மக்கள் துயர் துடைப்பு நிதி, இருமுறை சங்கத்தினால் சேர்க்கப்பட்டு இந்தியத் தூதரகம் வாயிலாக அனுப்பப்பட்டு சம்பந்தப்பட்டோரின் பாராட்டைப் பெற்றது. முதலில் மகாராஷ்டிர நிதி இருபதியிரம் ரூபா த. மகாலிங்கம் பிள்ளையால் முன் னெடுக்கப்பட்டது. அடுத்து, அண்மையில் குஜராத் நிதியாக இந்திய ரூபா 4,35,259/- அனுப்பி வைக்கப்பட்டது. இவை சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட சிறந்த மனிதாபிமானப் பணி களாகக் குறிப்பிடலாம்.

Seychelles natural beauty captures another victim

The cover of the Garden of Flowers

No it's not another over zealous tourist who ventured too far off the precipice. Neither is it another naive visitor who decide to caress the prickly spikes of a sea urchin. It is a much more serious and profound incident. Mrs Sivasupramaniam's faith has succumbed to the beauty of our islands.

The whole story is described in a collection of 108 songs which the Sri Lankan lady has dedicated to Lord Vinayagar of Seychelles, the presiding deity of the Hindu temple in Quincy Street.

The songs which are all in Tamil, not only praise the deity, but vividly describe the natural beauty of the islands and the unique coco-d-mer which occupies a place of pride in Seychelles as well as Hindu rituals.

Seychelles pristine environment is also poetically depicts as creating a religious fervour that promote goodwill among the various communities.

The book, which is called "Navasakthi Vinayagar Pamalai" (A Garland of Songs for Lord Vinavagar in Seychelles), will be officially launched by Educational Principal Secretary, Mr Patrick Pillay. The ceremony will take place at the Sri Navasakthi Vinayagar temple at Quincy Street tommorrow at 7.pm. Proceeds from the sale will go towards the temple funds.

Courtesy Nation 1/8/1992

6

சமய விழாக்கள்

1984ஆம் ஆண்டு சங்கம் அமையப்பெற்றது இந்நாட்டின் இந்து மதத்தவர் தமக்கேற்ற முறையில் வழிபாடுகள், கூட்டுப் பிரார்த்தனைகள் சமய நிகழ்ச்சிகள் யாவற்றையும் வழிபாட்டு மண்டபத்தில் நடாத்துவதற்கேற்ற அடித்தளமாக அமைந்தது. 1992இல் நவசக்தி விநாயகர் கோயில் அமையப் பெற்ற நாள் முதல் இவை யாவும் ஒழுங்கான பாரம்பரிய முறையில் விரி வாக்கமடைந்தன.

தொடக்க நாள்களில் தெய்வப் படங்களே வழிபாட்டுக்குப் பயன்படுத்தப்பட்டன. கூட்டு வழிபாடு வெள்ளி மாலையில் நடாத்தப்பட்டது. 1985 ஆனி 24ஆம் நாள் - ஆனி உத்திர நன் னாளில் முதல் முதலாக விநாயகர், நடராசர் பஞ்சலோகச் சிலா வடிவங்களுக்கு ஞாயிறு காலையில் ஒழுங்காகக் குடமுழுக்கு ஆராதனை நடைபெறத் தொடங்கின. மருத்துவர் சந்தானம் பூசை, வழிபாடு ஆகியவற்றை நடாத்தினார்கள். 1988 ஐப்பசி 30ஆம் நாளன்று முருகனின் பஞ்சலோக சிலை வடிவமும், 1989 கார்த்திகை 26ஆம் நாளன்று ஜோதி மாணிக்கவாசகத்தின் அன் பளிப்பாக சிவகாமசுந்தரி பஞ்சலோகச் சிலை வடிவமும் வழிபாட்டுக்கு வந்தன. 1992 பங்குனி 8ஆம் நாள் ஆட்சிக் குழுவின் தீர்மானப்படி கணபதி ஸ்தபதியவர்களது விதப்புரை களுக்கு வெளியே ஸ்ரீனிவாசப் பெருமாள் - இலட்சுமி சிலை வடிவங்களும் பிரதிஷ்டை செய்வதென ஏற்பாடாகியது.

முதல் திருவிளக்குப் பூசை 1985 ஆவணி 23ம் திகதியும், நவராத்திரிப் பூசை ஐப்பசி 1985லும் திருவெம்பாவைப் பூசைகள் 1988இல் உதயத்தின் முன் தொடங்கியும் நடாத்தப்பட்டன. விநாயக சஷ்டியுடன் நிறைவெய்தும் விநாயகர் கதைப் படலம் 1990இல் தொடங்கிப் பல அடியார்கள் கதை வாசிப்பதில் பங்கு பெற்றும் நிகழ்ச்சி சிறப்பாகத் தொடர்கின்றது. சிலைவடிவங் கட்கான திருவாசி அலங்காரம் 1986 வைகாசி 16ஆம் நாள் செய்யப் பட்டன. மகா சிவராத்திரி விழாவும் உதயம் வரை கண் விழித் தலும் 1988 முதலாக நடை முறையிலிருந்தாலும், நாலு சாமப் பூசை ஒழுங்குகள் 1993ஆம் ஆண்டிலிருந்து புதிய ஆலயத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டன. 1992 ஆவணி 16-ஆம் நாள் ஜெயராமன் படையாட்சி தொடங்கிய ஆதிபராசக்தி வழிபாடு சில திங்கள் வரை நீடித்தது. சத்தியசாயி பாபா கூட்டு வழிபாடு வாரந்தோறும் கோயில் மண்டபத்தில் நடைபெறுகின்றது. மற்றும் தைப்பொங்கல், ஜன்மாஷ்டமி விழாக்கள் வழமையாக நடைபெறுகின்றன. 1992 ஆவணி 24ஆம் நாள் தொடங்கித் திருமுறை ஓதல், 1995 தை 20ஆம் நாள் தொடங்கி வெள்ளிக்கிழமை மாலைக் கூட்டு வழிபாடு, 1995 ஐப்பசி 25-ஆம் நாள் தொடங்கி கந்தபுராண படனம் யாவும் போதிய ஊக்கமும் ஈடுபாடும் அடியார்களிடம் தோன்றாத காரணத்தினால் தொடர்ந்தும் நடைபெறுவதில்லை.

திருக்குடமுழுக்கு வரையான காலங்களில் ஞாயிறு தோறும் காலை குடமுழுக்கோ, பூசையோ, சிறப்பு விழாக் களோ தனித் தனி அடியார்களது உபயமாக அவரவரே தாராளமாகப் பிரசாத மோ மற்றும் பொருள்களோ கொண்டு வந்து குடமுழுக்கு மற்றும் பூசைகளை நடாத்தும் ஒழுங்கு

நடைமுறையிலிருந்தது. பெரும் பாலும் இப்பணியைப் பழநியும் இரத்தினசபாபதிப் பிள்ளையும் நேர ஒழுங்கு தவறாது முறைப்படி முன்னின்று நடாத்தி வந்தனர்.

எமது சங்க நிகழ்வுகளில் உச்சக்கட்டமாகக் களைகட்டிய விழாவாக 1992 வைகாசி ஆறாம் நாள் இடம்பெற்ற அருள்மிகு நவசக்தி விநாயகர் கோயில் திருக்குடமுழுக்கு விழாவைக் கருதலாம். இந்நாள் இந்நாட்டு இந்து மக்களின் இருநூற்றாண்டுக் கால கனவு நனவாகிய நாளாக, நாட்டின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட நாளாக, உணர்வு பூர்வமான நாளாகக் கருதலாம்.

1992 சித்திரை 27ஆம் நாள் பந்தற்கால் நாட்டலுடன் ஏறக் குறைய இரு திங்கள் நீடித்த இந்த விழா தொடங்கியது. 29ஆம் நாள் சங்கற்பம், சாந்தி ஆகியனவும், வைகாசி, முதலாம் நாள் கோதானம், கணபதி ஹோமம் ஆகியனவும், இரண்டாம் நாள் சிலை வடிவங்களிடம் விழி திறத்தலும், மூன்றாம் நாள் காப்புக் கட்டுதலும், ஐந்தாம் திகதி அஷ்டபந்தன யாகமும், ஆறாம் நாள் சித்திரைத் திங்கள் மிருகசீரிட நட்சத்திரத்தோடு கூடிய நல்லோரை யில் திருக்குடமுழுக்கும் மாலையில் சந்தனக்காப்பும் வெகு சிறப்பாக நடந்தேறியது.

அவ்வாரம் புதிய கோயிலில் நடந்தேறிய சமயச் சடங்கு களுக்கு அந்தணர் குழாம் எழுப்பிய வேத ஒலியும், நாதஸ்வர ஒலியும் மக்களிடையே என்றுமில்லாதளவு புத்துணர்ச்சியையும் சமய ஈடுபாட்டையும் கண் கூடாகக் காணக் கூடியதாகவிருந்தது. நம்மவரில் இளைஞர், முதியவர் என்ற வேறுபாடின்றி யாவரிட மும் ஆலயத்திறப்பு, மகா கும்பாபிஷேகம் ஆகியன நமது சமய

கலாச்சார பண்பாட்டின் மறுமலர்ச்சி இந்நாட்டில் ஏற்பட்டுள்ள தென்ற உள்ளப் பூரிப்பையும் மன நிறைவையும் காண முடிந்தது. திருக்குடமுழுக்கு விழாவே எமது சமய விழாக்களுள் அதி உன்னத விழா ஆனமையினாற் போலும் இந்நாட்டின் மூலை முடுக்குகளில் எல்லாம் இருந்து மக்கள் கோயில் வளாகத்தில் நாள்தோறும் ஒன்று கூடி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.

தனிப்பட்ட முறையில் எனக்கும், என்பாரியாருக்கும் இப் புனித நன்னாளில் சங்கத்தின் சார்பில் சங்கற்பம் செய்து இப் புண்ணிய கைங்கரியத்தில் கலந்து கொள்ளக் கொடுத்த வாய்ப்பைத் தெய்வம் தந்த பேறாகக் கருதுவதோடு, சைவ சமய அடியவர் களாகிய எம்மிருவருக்கும் இந்த அதி உன்னத வாய்ப்பை வழங்கிய எமது சங்கத்திற்கும், எமது சமூகத்திற்கும் நாம் என்றும் கடப்பாடுடையோம்; அருட்பெருங்கடலாகிய விநாயகப் பெரு மானை என்றும் வாழ்த்தி வணங்குவோம்.

திருக்குடமுழுக்குச் சமய நிகழ்ச்சிகள் யாவும், தமிழ் நாட்டிலிருந்து வந்திருந்த இராமநாத சிவாச்சாரியார் தலைமை யிலான நாலு சிவாச்சாரியார்களினால், சிறப்பாக நடந்தேறின. நாள்தோறும் உபயகாரர் ஒருவர் பொறுப்பேற்று நடாத்திய குடமுழுக்கு ஆராதனைகள் ஒரு மண்டலத்திற்குத் (45 நாட்கள்) தொடர்ந்து ஆனி 21ஆம் நாள் சங்காபிஷேகத்தோடு நிறைவடைந் தது. இக்காலத்தில் மூவர் அடங்கிய நாதஸ்வரக் கோஷ்டியினர் தமிழ்நாட்டிலிருந்து வந்து இங்கு தங்கியிருந்தனர்.

திருக்குடமுழுக்கு நிகழ்வுகளைத் தொடர்ந்து சிவாச்சாரியார் குழுவில் ஒருவரான திருவண்ணாமலை செல்வ கணேச சிவாச் சாரியார் கோயில் அர்ச்சகராகப் பதவி பெற்றார்கள். கோயிலில் நாள்தோறும் மூன்று நேரப் பூசையும் மற்றும் குடமுழுக்கு ஆரா

தனைகளும், சிறப்பு நாள்களுக்கான வைபவங்களும் மிகவும் ஒழுங்காக நடைபெற்றன.

திருப்பணியின் போது பல இக்கட்டான சந்தர்ப்பங்களில், இறையருள் நமது பணி நிறைவேறப் பலமுறை கைகொடுத்து உதவியதை நம்மில் பலர் அநுபவித்துள்ளார்கள். இப்படியான ஒரு நிகழ்வை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகும். திருக்குடமுழுக்கு மண்டல நிறைவு விழாவான சங்காபிஷேகம் ஆனி 21ஆம் நாள் எனக் குறித்து விளம்பரப்படுத்தப்பட்டது. ஆனால் சந்தர்ப்ப வசமாக அதற்குரிய 108 சங்கும் வலம்புரிச் சங்கும் வருவதில் ஏதோ தடங்கல் ஏற்பட்டுவிட்டது. நிகழ்ச்சிக்கு நாலைந்து நாள்கள் இடைவெளியே இருந்ததால் மிகவும் இக்கட்டான நிலை ஏற்பட்டது. நாம் பல ஆண்டுகளாக யாழ்ப்பாணத்தோடு தொடர்பற்றிருந்தோம். யாழ்ப்பாணத்தில் எமது ஊர் ஆலயக் குருக்களின் மகன் கோலாலம்பூரில் இருப்பதை அறிந்தோம். தொலைத் தொடர்பு கொண்டோம். எமது நிலையைக் கூறினோம். எம்மால் நம்பமுடியாத பதில் கிடைத்தது. வேண்டிய பொருட்கள் யாவற்றையும் தானே தொடர்பு கொண்டு இராமேசுவரத்திலிருந்து இரு நாள்களில் சிங்கப்பூரில் சேர்ப்பதாகவும் அங்கிருந்து எடுப்பதற்கு ஒழுங்கு செய்யுமாறும் கூறியது எமக்கு பெரும் ஆறுதல் அளித்தது. தக்க நேரத்தில் அந்நாள் சங்கச் செயலாளர் சந்திரபாபு நாயுடு துரிதமாகச் செயற்பட்டு ஏயர் சீசெல்சுப் பணியாளர் மூலம் வேண்டிய நாளுக்கு முதல் நாள் கொண்டு வந்தது சங்காபிஷேகம் முறையாக நடாத்துவதற்குப் பேருதவியாக அமைந்தது. வேண்டிய நேரத்தில் இறையருள் மாத்திரமே கைகொடுத்து உதவியதென்பதற்கு வேறு சான்று வேண்டியதில்லை.

திருக்குடமுழுக்கின் போது, 96 கிலோ எடையுள்ள ஆலய மணியை எஸ். நடராசன் பிள்ளை அன்பளிப்பாக வழங்கினார். அதை மண்டபத்தினருகே பொருத்தினோம். ஐந்தடி உயரமான மூன்று குத்து விளக்குகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. இவற்றுள் இரண்டை இராகவன் சகோதரர்களும் மற்றையவை எம் இல்லம் சார்பானதுமாகும். திருக்குடமுழுக்கு நினைவாக மகா கோபுரம் பொறிக்கப்பட்ட நினைவுத் தகடுகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. விற்பனையும் செய்யப்பட்டன. திருக்குட முழுக்கு நினைவுச் சின்னமாகச் சங்கப்பெயர் இலச்சினை பொறிக்கப்பட்ட மேற் சட்டைகள் ரிஎம்கேஆர் பிள்ளையவர் களால் அடியார்கட்கு வழங்கப்பட்டன.

சீசெல்சு நாட்டின் இயற்கை வனப்புடன் அருள்மிகு நவசக்தி விநாயகரின் அருளாட்சியையும் இணைத்து விநாயகப் பெருமான் மீது விசேஷமாகத் தன்னால் தொகுக்கப்பெற்ற ஊஞ்சல் பாடலை 1992 ஐப்பசி 3ஆம் நாள் இளைப்பாறிய இந்திய ஆட்சிப் பணி உயர் அதிகாரியும் சென்னையைச் சேர்ந்தவருமான கலாநிதி. பாண்டியன் அன்பளிப்பாக அனுப்பியதை எமது ஆட்சிக் குழு மிகுந்த நன்றியுடன் ஏற்றுக் கொண்டது. சென்னையில் வாழ் மறவன் புலவு க. சச்சிதானந்தன், பாண்டியனின் கவியாற்றலை உணர்ந்து, சீசெல்சுக் கோயிலுக்கு ஊஞ்சற் பாட்டுத் தேவை என்பதை உணர்த்தினார். 1993 சித்திரை 26ஆம் நாள் இடம் பெற்ற முதலாவது திருக்குடமுழுக்கு நினைவு நாளிலிருந்து விநாயகர் ஊர்வலம் புறப்படும் போதெல்லாம் எமது ஆலய ஊஞ்சல் பாடலாகப் பாடுவது வழக்கமாகியுள்ளது. தொடக்கத்திலிருந்தே இப்பாடலைத் தனித்துப் பாடிச் சிறப்பித்த பெருமை சு. இரவீந்தி ரனையே சாரும். தொடர்ந்து சி. சிற்சபேசனும் ரவி. நமசிவாயம் அவர்களும் இணைந்து பாடி வந்தனர்.

மூல மூர்த்திக்கான வெள்ளிக் கவசத்தைப் ப. சுப்பிரமணிய பிள்ளை 1993 மார்கழி 2ஆம் நாள் அன்பளிப்புச் செய்தார். இதைத் தொடர்ந்து முருகப் பெருமானுக்கான வெள்ளிக் கவசத்தைக் கோ. இளங்கோவனும் ஸ்ரீனிவாசப் பெருமாளுக்கான வெள்ளிக்கவசத்தைத் தீனு பிள்ளையும் அன்பளிப்புச் செய்தனர். முன்பு நிறை வேற்றப்பெற்ற ஆட்சிக்குழுவின் தீர்மானத்திற்கு அமைவாக அனைத்துச் சிலை வடிவங்களுக்கும் வெள்ளிக்கவசம் கோயிலில் வைத்துச் செய்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுத் தமிழ் நாட்டிலிருந்து இரு சிற்பக் கலைஞர்களை இங்கு அழைப்பதற்கு ஏற்பாடாகியுள்ளது. இதற்கான நிதியைச் சேர்ப்புப் பட்டியலைத் தொடங்கி ஐம்பதினாயிரம் ரூபாவுக்குக் கூடுதலாக நிதி சேரும் என எதிர்பார்க்கிறோம்.

கோயில் திருக்குடமுழுக்கைத் தொடர்ந்து, விழாக்கள், சிறப்பு நாள்கள் ஆகியன ஒழுங்காகவும் தொடராகவும் நடப்பதற்கான வழிகள் வகுக்கப்பட்டன. திங்கள்தோறும் வரும் நிகழ்வுகளான சதுர்த்தி, நிறை நிலவு நாள் போன்ற விழாக்களை உபயமாகச் செய்ய விரும்பும் அடியார்கள் இதற்கென அமைக்கப் பெற்றுள்ள விளம்பரப் பலகையில் தமது பெயரைக் குறிப்பிட லாம். மற்றும் வாரம்தோறும் இடம் பெறும் குடமுழுக்கு உபயங்களைக் குறிப்பதற்கு வேறு ஒரு விளம்பரப் பலகை உண்டு. இச்செயற்பாடு தொடர் நிகழ்வுகட்கும் கணக்குக் கட்டுப் பாட்டுக்கும் வழி வகுக்கின்றது. மற்றுமோர் திட்டப்படி தமது திருமணநாள் அல்லது பிறந்த நாள் வழிபாட்டை ஒழுங்காக ஆண்டுதோறும் செய்ய விரும்புவோர் சங்கத்தில் வைப்புப் பணமாக ரூபா 500/- சேர்ப்பித்தால் குறிப்பிட்ட நாளன்று சிறப்புப் பூசை செய்யப்பட்டுப் பிரசாதம் அனுப்பும் வழக்கம் செயற்பட்டு வருகின்றது.

1992 முதல் 101/- ரூபாவாக இருந்த குடமுழுக்குக் கட்டணம் மாசி 1997 முதல் 111/- ரூபாவாக உயர்ந்தது. 10/- ரூபாக்கு புதிய அருச்சனைத் தட்டுமுறை தொடங்கப்பட்டது. மூன்று பகுதி களைக் கொண்ட குடமுழுக்குப் பற்றுச் சீட்டும் அருச்சனைக்கான 5/- ரூபா சீட்டும் தொடங்கப்பட்டது. கோவில் அர்ச்சகர் பதவி ஏற்றதைத் தொடர்ந்து, அர்ச்சகரை வீட்டுக்கு அழைத்துப் புதுமனைப் புகுதல், நீத்தார் வழிபாடு, கணபதி ஹோமம் ஆகிய பாரம்பரிய சமய நிகழ்வுகளைப் பலர் மேற்கொள்கின்றனர். ஒருவரின் வீட்டுக்கு அர்ச்சகர் போவதானால் சங்கத்திற்கு முற்பணமாக ரூபா 51/உம், நாதஸ்வரக் குழுவினரை, ஒருவர் அழைப்பதானால் ரூபா 101/உம் செலுத்த வேண்டும். இந்நிலை யில் மேலதிக அர்ச்சகருக்குப் பதவி வழங்கும் அவசியம் ஏற்படவே 1994 வைகாசி 2ஆம் நாள் முதல் கந்தன் குருக்கள் முதல் உதவி அர்ச்சகராகப் பதவி ஏற்றார்.

கார்த்திகைத் திங்கட்கிழமைச் சங்காபிஷேகம் 1995 முதல் தொடங்கியது. இதற்கான கட்டணம் ரூபா 1500/- இந்த உபயத் தை தனி ஒருவராகவோ பத்துப் பேர் வரை கூட்டாகவோ செய்யலாம்.

ஆண்டுதோறும் விநாயகர் சதுர்த்தி விழா தொடக்க காலம் முதல் நடைபெற்றாலும் திருவீதி உலா உள்வீதியிலேயே நடை பெற்றது. 1984 முதலாகக் கோயில் கட்டி முடியும் வரை, களி மண்ணினால் செய்யப்பெற்ற விநாயகர் சிலை, பூசை வழிபாடு முடிய, ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு வட கீழ்முனைக் கடலில் கரைப்பது வழக்கமாயிருந்தது. எனினும் 1997 வரை இந் நடைமுறை தொடர்ந்தது. அதன்பின் இந்நிகழ்வு நிறுத்தப் பட்டது. 1999 முதல் விநாயக சதுர்த்தி ஊர்வலம் மின் விளக்கு

களினால் அலங்கரிக்கப் பெற்ற தேர் உலாவர வெளி வீதி வழியே எடுத்துச் செல்வது வழமையாகி, எமது கோயில் நிகழ்வுகளில் மிக முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது.

திருக்குடமுழுக்கு நாள் ஒவ்வோர் ஆண்டும் வழமையான குடமுழுக்கு வழிபாடு உள்வீதி உலா ஆகியனவற்றுடன் சிறப் பாகக் கொண்டாடப் படுகின்றது. பத்தாவது நிறைவு ஆண்டு விழா 2002 சித்திரை 17-ஆம் நாள் முறையாகக் கொண்டாடப் பட்டது. இது கோயிலின் வளர்ச்சிப் பாதையில் என்றும் நினைவு கூரவேண்டிய நாளாகும்.

தேசியக் கண்ணோட்டத்தில் அக்கறை, ஆதரவு, ஆச்சரியம், ஈடுபாடு நிறைந்த ஆண்டுப் பெருவிழாவாக மலர்ந்தது. தைப் பூசக் காவடி விழாவாகும். சமய விழாவான போதிலும் கூடுதலாக இந்நாட்டிற்கு வரும் உல்லாசப் பயணிகளுக்கு இது ஒரு சிறந்த கலாச்சாரப் மறுபதிப்பாகக் காலப்போக்கில் உருமாறியுள்ளது. முதன் முதலாக 1993 மாசி ஆறாம் நாள் இவ்விழா தொடங்கிய போது உள் வீதியில் நடந்த விழாவில் பத்துப்பாற்குடத்துடன் கூடிய பெண்களும் ஆறு காவடி எடுக்கும் ஆண்களுமே கலந்து கொண்டனர். இவ்விழாவில் சிறந்த பகுதியாக எல்லோருடைய பாராட்டையும் பெற்றது மண்டபத்தில் சமபந்தி போசனமாக நடந்த அன்னதானமாகும். காலப்போக்கில் இவ்விழா பல கோணங்களிலும் விரிவாக வளர்ந்துள்ளது பாராட்டுக்குரிய தாகும்.

1994 தை 27-ஆம் நாள் இடம் பெற்ற இரண்டாவது காவடி விழாவில் கண்ணன் படையாட்சியின் ''செதில் காவடி'' புதிய வழிபாட்டு முறையானது.

1996 மாசி 4ஆம் நாள் இடம் பெற்ற நான்காவது காவடி விழாவில் முதன் முதலாகக் காவடி ஊர்வலம் வெளி வீதியான சுற்றுப்புறத் தெரு வழியாக நடந்தேறியது. இதற்காகச் சிலமணி நேரம் வாகனப் போக்குவரத்து தடைசெய்யப்பட்டது. இஃது இந்நாட்டின் வரலாற்று நிகழ்வாகும். தமிழ் நாட்டிலிருந்து சிறப்பாக வரவழைக்கப்பட்ட நாதஸ்வரக்குழு, இளைஞர்களின் சிலம்படி, யாவும் ஊர்வலத்துக்குப் புது மெருகு சேர்த்தன. இவ் விழாவில் பத்துப் பாற்குடம் ஏந்திய பெண்கள், இருபத்திரண்டு காவடி ஏந்திய ஆண்கள், மற்றும் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அலகு துளைத்த காவடியுடனான ஐந்து ஆண்கள் எனப் பரவலாக அடியார்கள் கலந்து கொண்டமை இந்நாட்டில் பலதரப்பட்ட ஆச்சரிய உணர்வலைகளை ஏற்படுத்தத் தவறவில்லை.

1998 மாசி 10ஆம் நாள் இடம் பெற்ற ஆறாவது காவடி விழா வளர்ச்சிப் பாதையில் மேலும் மைல் கற்களைப் பதித்தது. முதலாவதாக ஜெயராமன் படையாட்சியின் அலகு துளைத்து வீதி வழியே இழுத்து வரும் ''தேர்க்காவடி'' அறிமுகமாகி தொடர்ந்து நடைபெறுவது குறிப்பிடப்படவேண்டும்.

அடுத்ததாக, காவடி விழா நடைபெறும் நாளைப் பொது விடுமுறையாக்குமாறு சங்கம் அரசுக்குக் கோரிக்கை விடுத்திருந்தது. ஆனால், இம்முறை சங்கத் தலைவர் தீனு பிள்ளை நாட்டுத் தலைவருடன் நேரடித் தொடர்பு கொண்டு வலியுறுத்தியதன் விளைவாக, காவடி விழாநாள் இந்துக்களுக்கு விடுமுறையாக வழங்கப்படும் என அறிவித்தலை அரசு வெளியிட்ட தோடு, 1998 தை 21-ஆம் நாளிட்ட சுற்றறிக்கையையும் சகல அரசு நிறுவனங் கட்கும் அனுப்பி உதவியது (விவரம் பிற்சேர்க்கையில் காண்க). இஃது இந்துக்கள் அனைவரும் நன்றியுடன் நினைவு கூர

வேண்டிய நிகழ்வாகும். இச்சலுகை தொடர்ந்து நடைமுறையி லிருப்பதும் குறிப்பிடப்பட வேண்டியதாகும். இதன் விளைவாக அரச, கூட்டுத்தாபன இந்துப் பணியாளர்கள் யாவரும் காவடி விழாவில் கலந்து கொள்ளும் வாய்ப்பை முதன் முதலாகப் பெற்றனர். இவ்விழாநாளில் வர்த்தக நிலையங்கட்கும் விடுமுறை வழங்குமாறு சங்கத்தின் வேண்டுகோள் ஏற்கப்பட்டு இன்னமும் நடைமுறையிலுள்ளது.

1999 தை 31ஆம் நாள் இடம் பெற்ற ஏழாவது காவடி விழாவில் பங்குபற்றியோர் தொகை வெகுவாகக் கூடியது வளர்ச்சியின் வெளிப்பாடே. இவ்விழாவில் இருபத்தியொரு பாற்குடங்கள், பத்தொன்பது பாற் காவடிகள் பத்து அலகு காவடிகள் மற்றும் ஒரு தேர்க்காவடியுமாக விழாவைச் சிறப்பித் தன. அன்னதான நிகழ்ச்சி பலராலும் விரும்பப்பெற்றதால் 2002 காவடி நாள் அன்னதானத்தில் ஏறக்குறைய அறுநூறு பேர் பங்கு பற்றியது பாராட்டுக்குரிய நிகழ்வாகும். இந் நிகழ்ச்சி சிறப்பும் பொலிவும் பெற, வேண்டிய உணவு வகைகள், மற்றும் பொருள் களை வழங்கி, உதவிகள் பல புரிந்த அடியார்கள் பலரும் பாராட்டுக்குரியவர்களாவர். இந்த நாளை நினைவு கூரும் முகமாகச் சாய் நிறுவனத்தினர் பொருள்கள் எடுத்துச்செல்லும் பைகளை வழங்கினார்கள்.

தொடக்க காலத்திலிருந்தே வெளிப்புற அலங்காரம், குட முழுக்கு, பூசை மற்றும் ஹோமம் போன்றவற்றிற்கான வாழை, மூங்கில், பழம், மலர்கள், இலை வகை போன்ற அத்தனை பொருள்களையும் மனங் கோணாது விருப்புடன் பொறுப்பேற்று இற்றை வரை தொடர்ந்து உதவி வரும் த. சண்முகம்பிள்ளை, எஸ்.ஆர். செட்டி, என். காசிவிசுவநாதன், பிரான்சிஸ் ஆரோக்கிய நாதன் ஆகியோரது சேவை என்றும் மறப்பதற்கில்லை.

1992 ஆடி 19ஆம் நாள் அதிவணக்கத்துக்குரிய பாப்பரசர் உரோமபுரியில் நோய்வாய்ப்பட்டிருந்த போது பல பிரமுகர்களை யும் அழைத்துக் கோவில் மண்டபத்தில் இறையருள் வேண்டிச் சங்கம் பிரார்த்தனைக் கூட்டம் நடத்தியதை இங்கு சிறப்பாக நினைவு கூர வேண்டும்.

Preparations gear up for the *Kavadi Procession*

The oriental music group that you see in the picture is specially brought from India to perform for the *Kavadi Procession* from the Hindu Temple on February 4. It consists of two THAVILS (drums) by Mayiladuthurai - S.R.V. Venkatesan and Tiruvilandur - T.R. Kannadhasan, two NATHASWARAMS (clarinets) by Sembanarkoil Brothers — S.R.G.S. Vasanthakumar and S.R.G.S. Mohandass, and another THALAM (timer) by S.Vijayakumar.

As the dance and music is well integrated into the cosmic theory which forms the basis of Hindu philosophy, Hindu religious functions and weddings specially in southern India, Sri lanka, Malaysia, Singapore and Mauritius are never complete without this music group in attendance.

In addition to participating in the *Kavadi Procession* daily recitals are programmed for a week starting at seven in the evenings in the temple hall on Quincy Street. This should be an interesting treat for music lovers in Seychelles to enjoy a variety.

Courtesy Nation 1.2.1996

7

கலை, கலாச்சாரம்

ஒரு இனத்தின், ஒரு மக்களின் அடையாளங்கள் கலை, கலாச்சாரம், பண்பாடு ஆகியனவாம். ஒரு தனி மனிதனையோ, ஒரு சமூகத்தையோ அல்லது ஒரு நாட்டையோ இவைதான் உருவாக்கி ஒளிவீசச் செய்வன. கலாச்சார மறுமலர்ச்சி, சமாதானம், சகிப்புத்தன்மை இனப் புரிந்துணர்வு ஆகியனவற்றை வளர்த்து சீசெல்சு போன்றே அழகாபுரியாக ஐக்கியமும், சமாதானமும் நிறைந்த பல நாடுகளை உலகெங்கும் உருவாக்க முடியும்.

1984இல் உருவான இந்துக் கோயில் சங்கமும், 1992இல் நிலை கொண்ட நவசக்தி விநாயகர் ஆலயமும் தமிழ்க் கலாச்சார மறுமலர்ச்சிக்கும், இந்து சமய விழிப்புணர்ச்சிக்கும் இந்நாட்டில் அதி முக்கியத்துவம் வாய்ந்த மைல் கற்களாகும். சமய எல்லைகளைக் கடந்து தமிழ்க் கலாச்சார வளர்ச்சிக்கு இப்புதிய சங்கம் ஒரு அடித்தளமாக அமைந்து, தமிழ் வகுப்புக்கள், நடன, நாட்டிய, நாடக நிகழ்ச்சிகள், பட்டிமன்றங்கள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் தொடங்கினோம்; இன்றுவரை தொடர்கின்றன.

இச்சங்கம், நாட்டின் சமாதான, புரிந்துணர்வு நல்லெண்ண வளர்ச்சிக்குக் கலை, கலாச்சார ஊக்குவிப்பும் வளர்ச்சியும் இன்றியமையாததென்பதைத் தனது முக்கியமான குறிக்கோள்களில் ஒன்றாகக் கொண்டுள்ளது. இந்நோக்கோடு அமைக்கப் பெற்ற விசாலமான கோயில் மண்டபத்தில் பலதரப்பட்ட இயல், இசை, நாடகங்கள் அரங்கேறின; பல காலமாக இளையவர்

களிடையேயும் முதியோரிடையேயும் மறைந்து மழுங்கி இருந்த ஆற்றல்கள் முகிழ்த்துப் போயிருந்ததைப் பார்த்த, கேட்ட, உணர்ந்த, உயிர்த்த சமூகம் வியப்பில் ஆழ்ந்தது.

தொடக்க காலத்திலிருந்து இடம் பெற்ற கலை நிகழ்ச்சிகள் யாவும் மக்களது ஆதரவையும் நன் மதிப்பையும் பெற்றதோடு பல தடவைகளில் இவை யாவும் அரச தொலைக்காட்சி நிலையத்தாரால் ஒளிபரப்பப்படுவது நாட்டில் இக்கலைச் சேவைக்கு ஆதரவு பெருகியது.

சில இளம் பெண்களால் 1985 ஆனி 10ஆம் நாள் முதன் முதலாக நடாத்தப்பட்ட கோலாட்ட நிகழ்ச்சி நாட்டின் அரசு தொலைக்காட்சி நிலையத்தால் ஒளிபரப்பப்பட்டமை சங்கத்தின் வெற்றிகரமான சாதனை என்பது நினைவு கூர வேண்டியதாகும். தொடர்ந்து, கயிலாயநாதனின் கதாகலாட்சேபம், வில்லுப் பாட்டு, பவனின் இன்னிசை என்பனவும் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாயின. நவராத்திரி, பொங்கல், தீபாவளி, குடமுழுக்கு நினைவு நாள் கலை நிகழ்ச்சிகள் தொடர்ந்து இடம் பெற்றன. சிறுவர்கட்கான வினோத உடைப் போட்டிகள் உற்சாகத்தை வளர்த்தன; இந்நிகழ்ச்சிகளில் பலரை கலந்து கொள்ளச் செய்தன. பங்குபற்றும் சிறார்கட்குப் பரிசு வழங்கும் முறையால் சிறுவர் களின் ஈடுபாடு அதிகரித்தது.

சங்கத்தின் முதல் தமிழ் வகுப்பு 1985 மாசி 3ஆம் நாள் ஜெயா பாலகந்தரத்தால் தொடங்கப்பட்டுத் தொடர்ந்து க. சிவபாதமும் சேர்ந்து நடந்தேறியது. மாணவர்களிடையே தாய் மொழி ஆற்றல் குறைவான போதிலும் படிப்பதில் அக்கறையும் ஆர்வமும் மிகுந்து காணப்பட்டது. தமிழ்ப் பாடசாலையின் முதல் பெற் றோர் தினம் கலை விழாவாக 1986 ஐப்பசி 12ஆம் நாள் புதிதாக

வாங்கப்பட்ட சங்க நிலத்தின் முன்றலில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டமை அதிமுக்கியத்துவம் வாய்ந்த வரலாற்றுப் பதிவாகும். மாணவர் யாவரும் புத்தம் புதிய தமிழ்த் தேசிய உடை அணிந்து பங்கு பற்றியது கண் கொள்ளாக்காட்சியாக அமைந்தது. இக்கலை விழாவே சங்கத்தின் பலதரப்பட்ட கலை நிகழ்ச்சிகட்கு முன்னோடியாக அமைந்தது.

சில காலம் தமிழ் வகுப்புக்கள் தொடர்ந்த போதிலும் பின்னர் தொய்வு ஏற்பட்டது. மீண்டும் 1994 ஐப்பசி 14ஆம் நாள் விஜயதசமியின் போது தமிழ் சமய வகுப்புக்கள் கோயில் மண்டபத்தின் மூன்று வயதுப் பிரிவினருக்கு வாரந்தோறும் சி. சிற்சபேசன், அம்பிகா சிற்சபேகன், இருவராலும் உற்சாகமாக 1996 வரை நடாத்தப்பட்ட போதிலும் பின்பு தொடரவுமில்லை; மீளத் தொடங்கப்படவுமில்லை. ஆடி 1986இல் சுகந்தி தர்மராஜ், ஆடி 1988இல் வசந்தி சிவப்பிரகாசம், 1995இல் அம்பிகா சிற்சபேசன் ஆகியோரால் பரதநாட்டியப் பயிற்சி வழங்கப் பட்டது; பின் மேடையேற்றப்பட்டுத் தொலைக்காட்சி நிலையத் தால் ஒளிபரப்பும் செய்யப்பட்டது. 1988 ஐப்பசி 9ஆம் நாள் நடந்தேறிய இரண்டாவது நவராத்திரிக் கலை விழாவில் 26 சிறுவர் சிறுமியர் பங்கு பற்றினர். இந்நிகழ்வை வழங்கிய சுகந்தியும் வசந்தியும் கலைச் சேவைகட்குப் பாராட்டிச் சிறப் பிக்கப் பெற்றனர். 1989 ஐப்பசி நவராத்திரிக் கலை விழாவுக்குச் சிறப்பு விருந்தினராகப் பேராசிரியர் கணபதி ஸ்தபதியாரும் 1994 தை யில் நடந்த கலை விழாவுக்கு மாண்புமிகு தலைமை நீதியரசர் விவேகானந்தா அலியாரும் வந்திருந்தனர்.

அடிக்கல் இட்ட நாளான 1990 வைகாசி 6ஆம் நாளன்று சிறப்புக் கலை நிகழ்ச்சியைப் பழநி ஒழுங்கு செய்தார். பழநி, முருகதாஸ், ரவீந்திரன், வசந்தி, மங்களா, சுந்தரி ஆகியோரின்

பெருமுயற்சி காரணமாக பல சமய, வரலாற்று நாடகங்கள் கோயில் மண்டபத்தில் மேடையேற்றப்பட்டன. 1994இல் திங்கள்தோறும் கலை நிகழ்ச்சிகள் தொடங்கிய போதிலும் ஆதரவின்மையால் தொடரப்படவில்லை. கோயிலில் தொடங்கப் பட்ட இயல், இசை, நாடகக் கலை நிகழ்வுப் பாரம்பரியம் நிலை கொண்டு தொடர்வதைப் பாராட்ட வேண்டும்.

1990 நவராத்திரி நிகழ்ச்சியின் போது ஒன்பது நாள்களும் அன்றைய பூசையைத் தொடர்ந்து, ஐந்து நிமிட நேரம் சிறப்புரை அல்லது இன்னிசை வெவ்வேறு அடியார்களால் வழங்கிய புதிய முறை அடியவர் பலருக்குச் சந்தர்ப்பம் வழங்கியதோடு பலரது வரவேற்பையும் பாராட்டையும் பெற்றது. விநாயக சதுர்த்தியன்று அந்த நாளின் சிறப்புப் பற்றிய சொற்பொழிவு நவரத்தினம் (கரிகாலன்) வழங்கினார். 1990 மார்கழி 7ஆம் நாளில் இருந்து இருமாத காலத்திற்கு வாரம் தோறும் பகவத் கீதை பற்றிய சொற்பொழிவைத் ஏ.டி.மேயர் நடாத்தினார். இச்சொற்பொழிவு பலரின் பாராட்டைப் பெற்றது. இச் சொற்பொழிவின் போது கிடைத்த நன்கொடைப் பணம் கோயில் மடப்பள்ளிக்குச் சமையல் சட்டி, பானைகளாக அன்பளிக்கப்பட்டன.

சங்கக் கலை நிகழ்ச்சிகளின் உச்சக்கட்டம் திருக்குடமுழுக்கு கலை விழாவின் போது எட்டப்பட்டது. மண்டலாபிஷேக காலத்தில் (45 நாள்கள்) ஒவ்வொரு வார இறுதியிலுமாக மொத்தம் பதின்மூன்று நாள்கள் சிறப்புக் கலை நிகழ்ச்சிகளைக் கலைக் குழுவினர் ஒழுங்கு செய்தனர். நாடகங்கள், நடனங்கள், பட்டிமன்றங்கள் சிறுவர் நிகழ்ச்சிகள் மூலம் பலர் தம்மிடையே பொதிந்திருந்த திறமைகளை வெளிக் கொணர்ந்தனர். சீசெல்சு நாட்டில் தமிழ்க் கலை, கலாச்சார மறுமலர்ச்சிக்கு வழி

சமைத்தார்கள். அப்போது மேடை யேற்றப்பட்ட 'கர்ணன்' நாடகமும், வில்லுப்பாட்டும் மிக உயர்ந்த தரமானதாகக் கணிக்கப்பட்டதைக் குறிப்பிட வேண்டும். ஒவ்வொரு கலை நிகழ்ச்சிக்கும் தலைமை தாங்கவோ அல்லது நன்றியுரை வழங்கவோ ஆட்சிக் குழு உறுப்பினர் அனைவருக்கும் வாய்ப்புக் கொடுக்கப்பட்டமையும் ஒரு புரட்சிகரமான நிகழ்வாகக் கருதப்பட்டது.

வைகாசி 7ஆம் நாள் இடம் பெற்ற முதல் கலை நிகழ்ச்சிக்குச் சிறப்பு விருந்தினராக இந்நாட்டு உள்ளூராட்சி கலாச்சார, தகவல் துறை அமைச்சர் மாண்புமிகு சில்வெற் பிறெசோ மொரிசியசுக் கல்வி விஞ்ஞானத் துறை அமைச்சர் மாண்புமிகு ஆ. பரசுராமன் முன்னாள் தமிழ்நாட்டுச் சட்டப் பேரவைத் தலைவரும் அமைச்சருமான க. இராஜாராம் சிசெல்சு கோயில் சங்கம் அமைப்பதில் முன்னோடியான மறவன்புலவு க. சச்சிதானந்தன் மற்றும் கோயில் கட்டட அமைப்பாளரான விஜேய் பட்டேல் ஆகியோர் வருகை தந்து சிறப்பித்தனர். அவர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாகச் சங்கம் சிறப்புச் செய்தது. மொரிஷியசு அமைச்சரும் தனது நல்லெண்ணத்தின் வெளிப்பாடாகக் கோயிலுக்கு ஓர் உருத்திர வீணையை அன்பளிப்பாக வழங்கினார்.

1996 ஆனி 19-ஆம் நாள் இடம் பெற்ற தேசிய தின விழாவில் பங்கு பற்றிய முப்பது அலங்கார ஊர்திகளில் ஒன்றான சங்கத்தின், மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட பாரம்பரிய தேர் ஊர்தி சகல மக்களின் கவனத்தையும் ஈர்த்தது; கணிசமான தொகையுடன் கூடிய முதற் பரிசையும் தட்டிக் கொண்டது. இந்நாட்டின் சுதந்திரத்தின் வெள்ளி விழாவான ஆனி 2001-இல் நடைபெற்ற ஊர்திப் பவனியில் சங்கத்தின் சார்பில் அலங்கரிக்கப்

பட்ட மயில் இடம் பெற்றது. 1999 மார்கழி 31ஆம் நாள் நடை பெற்ற மில்லெனியம் தேசிய விழாவில் சங்க முன்னாள் தலைவர் த. மகாலிங்கம் பிள்ளை, இந்நாட்டு இந்துக்கள் சார்பில் உரையாற்றியதையும், சங்கம் சார்பாக கலை நிகழ்ச்சி ஒன்று மேடையேறியதையும் குறிப்பிட வேண்டும்.

அனைத்துலக மாநாடுகளிலும் இச்சங்கம் பங்கு பற்றியதை நாம் குறிப்பிட வேண்டும். 1989 மார்கழியில் மொரிசியசில் நடை பெற்ற ஏழாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி தமிழ் மாநாட்டில் சங்கத் தலைவர் தீனு பிள்ளை கலந்து கொண்டார். 1995 தை யில் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் இடம் பெற்ற எட்டாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் பி.எம். ஸ்ரீதரன் கலந்து கொண்டார். முன்னதாக, 1985இல் மொரிசியசில் தமிழர் குடி யேறிய இரண்டரை நூற்றாண்டு நிறைவு விழாவில் ஜோதி மாணிக்க வாசகம் கலந்து சிறப்பித்தார்கள்.

பாரம்பரிய கலைச் சின்னங்களைப் பேணிப் பாதுகாத்து ஊக்குவிக்கும் நோக்கில், கோலம், மாலைகட்டுதல் போன்ற வற்றில் புரட்டாதி 1990இல் முதன் முதலாக போட்டிகள் நடாத்தப் பட்டு பரிசுகளும் வழங்கப்பட்டன. இச்சங்கம் தொடங்கியதி லிருந்து சங்கத்தின் முக்கியமான நோக்கங்களில் ஒன்றாக இந் நாட்டில் சுடுகாடு அமைக்கப் பலமுறை முயன்றோம். இம் முயற்சிகள் நிறைவேறாத நிலையில் தற்போது புதிதாகத் தொடங்கிய சீசெல்சு இந்து நிறுவனத்தின் துரித முயற்சியின் விளைவாகத் திட்டம் நிறைவேறும் நிலையை நெருங்கியுள்ளது.

1992 கார்த்திகை 22ஆம் நாள் இலங்கையின் தலை சிறந்த கல்விமான்களில் ஒருவரான ந. சபாரத்தினத்தின் மறைவுக்கு அனுதாபக் கூட்டம் இ. சந்திரபாபு நாயுடு தலைமையில் கோயில்

மண்டபத்தில் நடாத்தப்பட்டது. சங்க உறுப்பினர்களோ மற்றும் கோயிலுடன் நெருங்கி ஈடுபட்டோரோ நாட்டை விட்டு வெளி யேறும் போது பிரியாவிடை நடாத்தும் வழக்கம் நடைமுறை யிலுள்ளது. 1987 கார்த்திகையில் குஜராத்திலிருந்து சுவாமி நாராயணன் சாதுக்கள் பதினைந்து பேர் வந்தபோது வரவேற்பு அளித்த நிகழ்வில் தீனு பிள்ளையும் விஜேய் பட்டேலும் சிறப்புரை யாற்றினார்.

1999 தை 11ஆம் நாள் சங்கத் தூதுக்குழு ஒளி - ஒலி பரப்பு நிறுவன மேலாளர் இப்ராகிம் அவிவ்வைச் சந்தித்தோம். வானொலியில் இந்து சமய நிகழ்ச்சி ஒலிபரப்புதற்கு ஒப்புதல் பெற்றோம். இதுவும் வரலாற்று நிகழ்வாகும். 1999 ஆனி 11-ஆம் நாளன்று சங்கத் தலைவர் த. மகாலிங்கம் பிள்ளையால் இந்த ஒலிபரப்புத் தொடங்கப்பெற்றது. இரு வாரத்திற்கு ஒரு முறையாக வெள்ளிமாலையில் பதினைந்து நிமிட நிகழ்வாக அன்றிலிருந்து தொடர்கின்றது. இந்த நடைமுறையை என்றும் பேணிப் பாதுகாத்து வளர்க்க வேண்டும். இந்நிகழ்ச்சியில் சமயத் தத்துவங்கள், சிறப்பு நாள்களின் முக்கியத்துவம் சம்பந்தமான பல அறிஞர்கள் பேச்சும் மற்றும் திருமுறைப்பாடல்களும் இடம் பெற்று வருகின்றன. 2000 தை 7-ஆம் நாள் ''இளைஞரும் சமயமும்'' என்ற தலைப்பில் ஐந்து பெண் பிள்ளைகள் பங்கு பற்றிய வினா - விடை நிகழ்ச்சி சிறப்பு அம்சமாகக் குறிப்பிட வேண்டியதாகும்.

வாசிப்புப் பழக்கத்தை வளர்க்கும் நோக்கில் சிசெல்சுத் தமிழ் மன்றம் மற்றும் பல அன்பர்களின் அன்பளிப்புகளுடன் கோயில் மண்டபத்தில் நூல் நிலையம் தொடங்கப்பட்டது. இந்தியத் தூதரகம் வாரந்தோறும் ஒழுங்காக அன்பளிக்கும் பத்திரிகைகள்,

வார இதழ்களுடன் ''செய்தி நிலையம்'' பலராலும் நன்றாக பயன் படுத்தப்படுகின்றது.

2000 ஆடி 7ஆம் நாள் இலங்கை மணமக்களுக்குக் கோயில் மண்டபத்தில் திருமணம் நடந்தேறியது. கோயிலில் நடை பெற்ற முதல் திருமணம் இஃதென்பது குறிப்பிட வேண்டிய தாகும்.

1997 முதலாகத் தவில் - நாதஸ்வரக்குழு கோயிலில் என்றும் இருக்கக்கூடியதாக அமைந்துள்ளது. 2001 முதல் ஒதுவார் - உதவிக் கணக்காளர் என்கிற பணிக்கும் ஒருவரே பதவி ஏற்றிருப்பதும் குறிப்பிட வேண்டியதாகும்.

தொடக்க காலத்தில் எமது கலை நிகழ்ச்சிகளுக்குப் பக்க வாத்திய வசதிகள் இருக்கவில்லை. அந் நேரத்தில் எமக்கு என்றும் முன்வந்துதவிய இருவரது சேவைகளை நாம் என்றும் நன்றியுடன் நினைவு கூர வேண்டும். வயலின் வாசிப்பதற்கு கஸ்காட்டைச் சேர்ந்த வர்த்தகர் டேவிட்சன் சூபே உதவினார். தபலா வாசிப்பதற்கு லக்ஸ்மன் பாய் கட்டுமான நிறுவனத்தி லிருந்து குஜராத்தைச் சேர்ந்த இசைப் பிரியர் கார்சன் உதவினார். மொரிசியசைச் சேர்ந்த முத்துசாமியும் சுனசி சுப்பையாவும் என்றும் கைகொடுக்கத் தவறியதில்லை.

உள்ளூர்க் கலை நிகழ்ச்சிகட்கும் சிறப்பு நாள்களுக்கும் நிதி சேகரிப்புக்குமாகக் காலத்திற்குக் காலம் பல இன்னிசை, நடனக் குழுக்களையும் பேச்சாளர்களையும் சங்கம் வெளிநாடுகளிலிருந்து அழைத்துப் பல பொது நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக நடாத்தி வருவதைப் பலரும் பாராட்டி ஆதரிப்பதால் கலையுணர்வும் வளர்கின்றது.

1985 மாசியில் இலங்கையிலிருந்து வந்த பவன், சில காலம் சீசெல்சில் தங்கி இன்னிசைப் பஜனை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். 1985 ஐப்பசி 22 அன்று ரி யூனியன் நகரபிதா கிருட்டினன் தனது நாட்டில் இந்து சமயத்தின் நிலை பற்றிப் பிரெஞ்சு மொழியில் பேசிய போது ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. கார்த்திகை 1985இல் இந்நாட்டிற்கு ராஜஸ்ரீ கௌதம் பரதநாட்டிய நிகழ்ச்சிக்காக தமிழ் நாட்டில் இருந்து அழைக்கப்பட்டார். தீபம் திரை அரங்கில் இவரின் இரு நிகழ்ச்சிகளும், கோறல் ஸ்றாண்ட் ஹோட்டலில் இந்திய உணவுடன் கூடிய ''இந்திய இரவு'' என்ற உன்னத நிகழ்ச்சியும் இறுதியாகக் கல்வி அமைச்சில் பரத நாட்டியம் பற்றிய இவரின் சிறப்புச் சொற்பொழிவும் இடம் பெற்றன; பாராட்டைப் பெற்றன.

1987 ஐப்பசியில் முதன் முறையாக நாதஸ்வர - தவில் வாத்தியங்களுடன் அமைந்த சர்மாக்கலைக் குழு சிங்கப்பூரி லிருந்து வந்தது. தீபம் திரை அரங்கில் இக்குழு இரு நடன நிகழ்ச்சிகளையும், கோறல் ஸ்றாண்ட் ஹோட்டலில் ஒரு நிகழ்ச்சியையும் வெற்றிகரமாக நடாத்தி இந்நாட்டில் ஒரு கலை ஆர்வத்தையே உருவாக்கிச் சென்றது. நிகழ்ச்சிகள் யாவும் அரசு தொலைக்காட்சி நிலையத்தில் ஒளிபரப்பாகியது. மக்களின் நன்மதிப்பைப் பெற வாய்ப்பளித்தது. பின்னர் சீசெல்சு பற்றிய கட்டுரை நூலை ஒன்றை வெளியிட்டுப் பயணத்தைச் சர்மா நினைவு கூர்ந்தார்.

1988 பங்குனியில் மருத்துவர் கனகசபை தம்பதியினர் ஒழுங்கு செய்ய, லட்சுமி கணேசன் இலண்டனிலிருந்து வந்தார் கள். கோறெல் ஸ்றாண்ட், பொவலோன் விடுதிகளில்

ஒவ்வொரு நடன நிகழ்ச்சி நடாத்தினார். உயர்நிலை மாணவர்க்கான நிகழ்ச்சி யைக் கல்வி அமைச்சின் தேசிய அரங்கில் நடாத்தினார். பிரித்தானிய தூதுவர் தேநீர் விருந்தளித்து இவரைச் சிறப்பித்தார்.

1990 பங்குனியில் மொரிசியஸ் அமைச்சர் ஆ. பரசுராமனின் நல்லெண்ணத்தின் வெளிப்பாடாகப் பொன்னையன் தலைமை யில் வந்திருந்த கலைக் குழுவினர் தீபம் திரை அரங்கிலும், கோறல் ஸ்றாண்ட் விடுதியிலும் கோவில் மண்டபத்திலும் நிகழ்ச்சிகளை நடாத்தினர்.

1991 வைகாசியில் பரோடா வங்கியைச் சேர்ந்த ஆர். ஜானகி ராமன் ஒழுங்கு செய்த பாலம் சதாசிவனின் நடன நிகழ்ச்சி கோறல் ஸ்றாண்ட் விடுதியில் நடந்தது. 1992 வைகாசியில் திருக்குடமுழுக்குச் சிறப்புக்கலை நிகழ்ச்சிகட்கு மொரிசியசு அமைச்சர் மாண்புமிகு ஆ. பரசுராமனும் முன்னாள் தமிழ்நாட்டு அமைச்சரும் பேரவைத் தலைவருமான க. இராஜாராம் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டனர். ஐப்பசி மாதம் மொரிசியசுக் கலை, கலாச்சார அமைச்சர் கோயிலுக்கு வந்து வழிபட்டார். தமிழ்நாட்டின் பிரபல எழுத்தாளரும் பேச்சாளருமான சிவசங்கரி, 1994 புரட்டாதியில் சங்கத்தின் அழைப்பின் பேரில் வந்து தொடர் நிகழ்ச்சிகளில் பங்கு பற்றினார்.

1995 வைகாசியில் இடம் பெற்ற திருக்குடமுழுக்கு நாள் மூன்றாவது விழாவின் போது பித்துக்குளி முருகதாஸ் இன்னிசைக் குழுவினர் கலந்து கொண்டு, கோயில் மண்டபத்தில் பக்திப் பாடல் கச்சேரிகள் இரண்டை நடாத்தினார்கள். 1996 தையில் லே. தமிழ்வாணன், பேராசிரியர் மெய்யப்பன் ஆகியோர் கோவிலில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினர். தமிழ் வகுப்பு

மாணவருக்கும் பெற்றோருக்கும் அறிவுரை வழங்கினர். 1996 ஆவணியில் மருத்துவர் சீர்காழி சிவசிதம்பரத்தின் இன்னிசைக் குழுவினரால் இசைக் கச்சேரிகள் முதலில் அனைத்துலக மாநாட்டு மண்டபத்திலும் பின்பு கோவில் மண்டபத்திலுமாய் நடைபெற்றன. 1997 வைகாசியில் எம்.ஆர். விஜயாவின் இன்னிசை விருந்து தேசிய அரங்கத்தில் நடைபெற்றது.

1998 வைகாசியில் டி.கே.எஸ். கலைவாணன் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி அனைத்துலக மாநாட்டு மண்டபத்தில் நடந்தபோது கல்வி அமைச்சர் மாண்புமிகு டனி வோர் விருந்தினராக வந்திருந்தார். இன்னொரு நிகழ்ச்சி கோயிலில் இடம் பெற்றது. இந்த நிகழ்ச்சிகள் சம்பந்தமாக மருத்துவர் வை. இராமதாஸ் ரூபா 20,000 நன்கொடை வழங்கியது குறிப்பிடத்தக்கது.

1999 ஐப்பசியில் புகழ்பெற்ற இசைக் கலைஞர்கள் எஸ்.பி. பாலசுப்பிரமணியம் எஸ். ஜானகி குழுவினரின் மகத்தான இன்னிசைக் கச்சேரி முதலில் அனைத்துலக மாநாட்டு மண்டபத்திலும் பின்னர் கோயிலும் நடைபெற்ற போது அனைத்துலகத் தமிழ் அறிவிப்பாளர் அப்துல் ஹமீது பங்கு பற்றியது முக்கிய நிகழ்ச்சியாகும். தமிழ்நாட்டைச் சேர்ந்த மங்கையற்கரசி, வயதில் சிறுமியாயிருந்தும் குறட்பாக்கள் அனைத்தையும் மனனமாக இரு நிகழ்ச்சிகளில் ஓதியது யாவரையும் வியப்பில் ஆழ்த்தியது. புகழ்பெற்ற பேச்சாளர் குமரி அனந்தன் சங்க விருந்தினராக வந்து சிறப்புச் சொற் பொழிவாற்றினார்.

2001 புரட்டாதி 12ஆம் நாள் கோயில் மண்டபத்தில் இடம் பெற்ற சிறப்பு விழாவில் புகழ்பெற்ற பதிப்பாளர் ரவி தமிழ்வாணன், மருத்துவர் க. காந்தராசா மற்றும் கனடாவைச் சேர்ந்த சேவியர் சதாசிவம் மூவரையும் பாராட்டிச் சிறப்புச் செய்தோம்.

2002 தையில் கோயில் மண்டபத்தில் புகழ்பெற்ற கடம் வித்தகர் விக்கு விநாயகாரம் தலைமையில் வந்த சப்தஸ்வரக் குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி முக்கிய இடம் பெற்றது.

இதுகாறும் நடந்து வந்த பலதரப்பட்ட கலை பண்பாட்டு நிகழ்ச்சிகள், மூலம் கோயிற் சங்கம் ஒரு சிறந்த கலைப் பாரம் பரியத்தை இந்நாட்டில் உருவாக்கியுள்ளது பாராட்டுக்குரிய தாகும். இது சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு, வளரும் சந்ததி யினருக்காகப் பேணிப் பாதுகாப்பது தலையாய கடமையாகும்.

8

வெளியீடுகள்

ஒரு நாட்டிலோ அல்லது ஒரு சமூகத்திலோ ஒற்றுமையையும் வளர்ச்சியையும் முன்னெடுப்பதற்குச் செய்திப் பரிமாற்றமும் செய்தித் தொடர்பும் இக்காலத்தில் மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. இந்நாட்டின் இந்து சமூகத்தினரிடையே இத்தொடர்பு மிகக் குறைவாகவே இருந்தது. இங்கு நிலவிய வாய்மூலச் செய்திகள் திரிபு பெற்றுப் போய்ச் சேர்வதும் முற்றாகச் சேராமலிருப்பதும் வழமையே. கோயில் சங்கம் அமைந்த நாளிலிருந்து இக்குறை நிறைவு பெற்றது. காலப் போக்கில் உள்ளூரிலும் அனைத்துலக மட்டத்திலும் சீசெல்சு இந்துக்கள் பற்றிய செய்திப் பரிமாற்றம் கரைகடந்து பெருகியது பாராட்டிற்குரியது.

சங்கத்தின் தொடக்ககாலத்தில் கோயில் சிறப்பு நாள்கள், திருவிழாக்கள் பற்றிய செய்திகள் உரியவர்கட்குச் சுற்றறிக்கையாகத் தமிழில் அனுப்ப வசதியில்லாதபடியால், ஆங்கிலத்தில் அனுப்பப்பட்டன. அப்போது தட்டச்சு வசதிகள் இல்லாமையால் சில தமிழ்ப் பெண்கள் முன்வந்து தமிழில் எழுதியவற்றைப் படி செய்து தமிழ்ப் பேசும் அடியார்கட்கு அனுப்பமுடிந்தது.

அப்போது வழிபாட்டுக்கு வேண்டிய தமிழ் நூல்கள் இங்கு இல்லாததால் கையெழுத்துப் படியாகவே சிலவற்றை எழுதிப் பயன்படுத்த வேண்டியதாயிற்று. இப்பணியில் அச்சிட்டாற் போல் தெளிவாகவும் அழகாகவும் தமிழிலும் ஆங்கிலத்திலும் பலவகை நூல்களையும் சுற்றறிக்கைகளையும் எழுதி உதவிவந்த

தி. சிவயோகச் செல்வனின் சேவையை எமது சமூகம் நன்றியுடன் என்றும் மறக்கமுடியாது. இவற்றை நாம் உறுப்பினர்கட்கும் மற்றையோருக்கும் தொடர்ச்சியாக அனுப்பி வந்ததால் மேலும் பலர் ஆலயப் பணியில் ஈடுபட்டனர்.

பின்னர் திருவாவடுதுறை ஆதீனம், யாழ்ப்பாணம் காந்தளகம் போன்றோர் பல சமய நூல்களை அன்பளிப்புச் செய்தனர். இவை யாவும் அடியார்கட்குப் பேருதவியாக அமைந்தன. பஞ்சாங்கம், நாட்காட்டி போன்வற்றைச் சங்கம் இறக்குமதி செய்து தேற்ற மின்றி விற்பனை செய்தது. தேசிய இதழ்களில் சமய விளம்பரம் செய்யும் போது தமிழில் செய்தி சென்றடையும் நோக்கோடு தமிழ் வசனங்களை வெட்டி ஒட்டி பிரசுரம் செய்ய வேண்டிய தாயிற்று. இந்தமுறை காலம் நீடிக்கும் கடின பணி. இந்து சமயச் செய்திகளைத் தமிழ் மொழியில் காண்போர். இந்நாட்டில் தமிழை வாசிக்கின்றோம் என்ற திருப்தியும் அடைந்தனர்.

சீசெல்சில் இருந்து சிட்னி சென்று வாழும் இக்கோயில் அடியார், சிவப்பிரகாசம் 1996 சித்திரையில் சங்கத்திற்குக் கணனிக் கான தமிழ் எழுத்து வரிசையை அன்பளிப்பு செய்தார். சங்க விளம்பரங்கள், சுற்றறிக்கைகள், பத்திரிகை விளம்பரங்கள் யாவும் கணனி மூலமாகச் செய்வதற்குப் பெரு வாய்ப்பாக இவ்வன்பளிப்பு அமைந்தது.

1988 மாசி 21ஆம் நாள் சி. சரோஜினிதேவி யாத்த தோத்திரப் பாடல்கள் அடங்கிய நூல் தொகுக்கப்பட்டு வெளியீட்டு விழா மண்டபத்தில் நடந்தது. புரட்டாதி 1988-இல் எமது ஆட்சிக்குழு உறுப்பினர் வாசுதேவன் செட்டியின் மறைவின் போது ஜோதி மாணிக்கவாசகம், மு. நடேசன் இருவரும் யாத்த இரங்கற்பாக்கள்

இறுதிக்கிரியைகளன்று சங்கத்தால் விநியோகிக்கப்பட்டன. வெளிநாட்டிலிருந்து அழைக்கப்படும் கலைஞர்கட்கும் பிரியா விடை அளிப்பவர்கட்கும் பாராட்டுப் பாக்கள் அடங்கிய பாராட்டுப் பத்திரம் வழங்கும் முறை சங்கத்தில் தொடர் நிகழ்ச்சியாக அமைந்து வருகின்றது.

திருக்குடமுழுக்கு வெளியீடாக, கால்கோளிட்ட நாளி லிருந்து ஒவ்வொரு திங்களும் சதுர்த்திக்கென சி. சரோஜினி தேவி யாத்த பாடல்கள் ''விநாயகர் பாமாலை'' எனத் தொகுக்கப்பெற்று 1992 ஆவணி 2-ஆம் நாள் கல்வி அமைச்சர் மாண்புமிகு பற்றிக் பிள்ளையால் வெளியிடப்பெற்று சி.எஸ். சின்னச்சாமி செட்டி முதற்படியைப் பெற்றார். முதலில் தோத்திரப் பாடல் நூல் வெளியீட்டின் போது 986/- ரூபாவும் இரண்டாவதாக விநாயகப் பாமாலை நூல் வெளியீட்டின் போது 772/- ரூபாவும் நன்கொடை யாகக் கிடைக்கப்பெற்றது. இதைக் கட்டட நிதிக்குச் சரோஜினி தேவி வழங்கினார். இப்போ இவை சிறு தொகைகள் தாம். எனினும் அக்கால கட்டத்தில் மதிப்பான தொகையாகக் கணிக்கப் பட்டது. 2001-ல் உல்லாசப் பிரயாணிகளின் வசதிக்காக கோவில் விக்கிரங்களின் விளக்கங்கள் அடங்கிய கையேடு அச்சிட்டு வெளியிடப்பட்டது.

காலத்துக்காலம் வெளியிடப்படும் சங்க மலர்கள் நாட்காட்டி கள் மற்றும் தேசிய பத்திரிகையுடன் இணைக்கப்படும் விசேட இணைப்புக்கள் சங்கச் செய்திகளையும் ஆலய நிகழ்வுகளையும் உள்ளூரிலும் வெளிநாடுகளிலும் பரப்புவதோடு சங்கத்திற்கு வேண்டிய நிதியைச் சேர்ப்பதற்கும் உதவுகின்றன. கோயில் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து வருடா வருடம் கும்பாபிஷேக தினத்தைக் குறிக்கும் வகையில் பல பக்கங்களடங்கிய விசேட

இணைப்பு தேசியப் பத்திரிகையுடன் வெளியிடுவது வழக்க மாயிற்று. 1996-ல் வர்ணப் படங்களுடன் கூடிய பதினான்கு பக்க விசேட இணைப்பும், 1997-ல் இருபது பக்கங்களுடனான விசேட இணைப்பும் வர்த்தக விளம்பரங்களின் ஆதரவுடன் வெளியிடப் பட்டது குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

அடுத்து, கோவில் சமய நிகழ்ச்சி நிரல் தமிழிலும் ஆங்கிலத் திலும் தாங்கி அனைவருக்கும் இலவசமாக சங்கத்தினால் வழங்கப்படும் வருட நாட்காட்டி முக்கியமான வெளியீடாகும். இப்படியான ஆரம்ப வெளியீடு 1996-ல் திரு.ப. சுப்பிரமணியம் பிள்ளையவர்கள் அன்பளிப்பாக வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து ஐந்து வெளியீடுகள் வந்துள்ளன. 1997-ல் குவின்சி சுப்பர மற்றும் சன் அன் சீ றவல்ஸ் அன்பளிப்பாகவும், 1998-ல் மலருடன் நடு இணைப்பாக ரிப் ரெரப் ஸ்தாபன அன்பளிப்பாகவும், 1999-ல் துரை மினி மார்க்கற் அன்பளிப்பாகவும், 2000, 2001 வெளியீடுகள் சில வர்த்தக நிலையங்களின் கூட்டு அன்பளிப்பாகவும் வெளி வந்தன. இவ்வெளியீடுகள் மிகப் பயனுள்ளமையினால் பெரிதும் விரும்பப்பட்டன.

காலத்துக்காலம் வெளிவரும் சங்கச் சிறப்பு மலர்கள் முக்கியத்துவம் வாய்ந்தனவாகும். இதுவரை ஆறு சிறப்பு மலர்கள் வெளிவந்துள்ளன. 1985 நொவெம்பரில் இடம் பெற்ற திருமதி இராஜ ஸ்ரீ கௌதம் அவர்களின் முதல் நடன நிகழ்ச்சிக்காக முதல் சிறப்பு மலர் சிவ சண்முகம் பிள்ளை, சச்சிதானந்தன், பழநி ஆகியோரால் சங்கத்திற்காகப் பதிப்பித்து வெளியிடப்பட்டது. இரண்டாவதாக ஐப்பசி 1987-இல் சிங்கப்பூர் சர்மா கலைக்குழு நிகழ்ச்சிக்கான சிறப்பு மலர் எம்மாலும், மூன்றாவதாக 1990

வைகாசியில் அடிக்கல் நாட்டு விழாமலர் பழநி, மாணிக்கவாசகம், பாலசுந்தரம் ஆகியோரால் கூட்டாகவும் பதிப்பிக்கப்பெற்றன. இம் மலர் கால்கோல் விழாக் கலை நிகழ்ச்சியின் போது அந்நாள் இந்தியத் தூதுவர் மாண்புமிகு கோகிலா ஐயரால் வெளியிடப் பட்டது.

அடுத்த நான்காவது மலர் 182 பக்கங்களையும் சிறப்பு மிகு கவிதைகள் கட்டுரைகள் திருக்குடமுழுக்கு மற்றும் கலை விழாக்கள் சம்பந்தமான வண்ணப் படங்கள் அடங்கிய, சிங்கப் பூரில் அச்சிடப்பட்ட சிறப்பு மலராகும். இதன் சிறப்புக் கருதி ஆயிரம் பிரதிகள் அச்சிடப்பட்டன. இப்பிரதிகள் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம், பிரித்தானிய அருங்கலை நூலகம் உட்பட பல நாட்டு நூலகங்களில் வைக்கப்பட்டுள்ளன. இம்மலர், விளம்பரப் பகுதிக்குப் பொறுப்பாயிருந்த இரத்தினசபாபதிப் பிள்ளையின் உதவியோடு எம்மால் பதிப்பிக்கப்பெற்று 1992 புரட்டாதி 6-ஆம் நாள் அந்நாள் இந்தியத் தூதுவர் மாண்புமிகு சி.ஆர். பாலச்சந்திராவால் வெளியிடப்பட்டு, எமது மூத்த உறுப்பினர் திரு.கே.சீ. வர்மா அவர்களால் முதல் படி பெறப் பெற்றது.

ஆறாவது திருக்குடமுழுக்கு நினைவு நாளான தினமான 1998 சித்திரை 30-ஆம் நாள் ஐந்தாவது மலர் வெளியானது. எம்மை அமைப்பாளராகக் கொண்ட மலர்க் குழுவே இம்மலருக்குப் பொறுப்பாயிருந்தது. தமிழ் நாட்டில் அச்சிடப்பட்ட இம் மலருக்கு, விளம்பரங்கள் மூலம் கிடைத்த இலட்சத்து எண்பத் தாறாயிரம் ரூபாவில் செலவு போக இலட்சத்துப் பத்தாயிரம் ரூபாவும் சங்க நிதிக்குக் கிடைத்தது குறிப்பிடப்பட வேண்டிய தாகும்.

இப்பத்தாண்டு காலத்திற்கான ஆறாவது மலர் இங்கு அச்சிடப்பெற்று 1999 மார்கழி 19ஆம் நாள் அமைச்சர் மாண்புமிகு பற்றிக் பிள்ளையால் வெளியிடப்பட்டு முதற்படியை இந்தியத் தூதர் மாண்புமிகு ஆர். ஓ. வலோங் பெற்றுக் கொண்டார். இம்மலருக்குக் கிடைத்த விளம்பரப் பணமான இலட்சத்து எழுபத்தாறாயிரத்தில் செலவு தள்ளி அறுபத்தி ஏழாயிரத்து இருநூறு ரூபா சங்க நிதிக்குப் பெறப்பெற்றது. எம்மை அமைப் பாளராகக் கொண்ட மலர்க்குழு இம்மலருக்குப் பொறுப்பா யிருந்தது.

எமது வெளியீடுகள் யாவும் காலத்துக்குக் காலம் சிறப் பாகவும் பொலிவாகவும் வெளிவர மொழி, சமய, இன வேறு பாடுகளைக் கடந்து என்றும் ஆதரவு அளிக்கும் வர்த்தகர்களையும் வர்த்தக நிறுவனங்களையும் எமது இந்துச் சமூகம் என்றும் நன்றியுடன் நினைவு கொள்ள வேண்டும்.

இந்நாட்டின் தேசிய நாளிதழ்கள் தவிர ஞானபூமி, குமுதம், கல்கண்டு, தினத்தந்தி, வீரகேசரி, தினகரன், தமிழோசை, தமிழன் உட்பட பல அனைத்துலக ஊடகங்கள் சங்க நிகழ்ச்சிகள், படங்கள், வேண்டுகோள்கள், அறிக்கைகள், பேட்டிகள் போன்றவற்றை அடிக்கடி வெளியிட்டு ஆதரவளித்து வருவது பாராட்டுக்குரிய தாகும்.

கோயில் நிகழ்ச்சிகள் பலவற்றை நிழற்படமாகவோ, ஒளிப்பதிவாகவோ அடியார்களுக்கு விற்பனை செய்வது வழக்க மாகும். குடமுழுக்கு நிகழ்ச்சிகள் யாவும் பலரால் நிழற் படமாக்கப்பட்ட போதிலும் பெருந் தொகையான சிறந்த படங்கள் யாவையும் பாலாநாயக்கன் எடுத்துக் கோவிலுக்கு அன்பளிப்பாக வழங்கினார். இப்படங்களின் படிகள் பெறப்பட்டு உரியவர்கட்கு

விநியோகித்ததினால் கோயில் நிதிக்குக் கணிசமான தொகை கிடைத்தது. அப்படப் பிரதிகளே எமது சிறப்பு மலரில் பிரசுரிக்கப்பட்டன என்பதையும் குறிப்பிட வேண்டும்.

சங்க வெளியீடுகள் யாவும் இந்நாட்டு இந்துக்களிடையே ஒரு நெருங்கிய இணைப்பை ஏற்படுத்தியதோடு பொது மக்களிடையே எமது சமயம் பற்றிய பலதரப்பட்ட தகவல்களை அறிமுகம் செய்ய ஒரு சிறந்த வாய்ப்பாகவும் அமைந்து வருகின்றது.

இந்த ஆலயத்தில் [illegible] யிருக்கும் நவசக்தி விநாயகர் புகழ்பாடி சிவஸ்ரீ கணேச சர்மா அவர்களால் இயற்றப்பட்ட பாமாலைகளை சேர்த்து திருமதி சரோஜினிதேவி வைகப்பிரமணியம் சமர்ப்பித்துள்ளதே இந்நூல். சிவஸ்ரீ நவசக்தி விநாயகருக்கு மட்டுமல்ல உலகு எங்கும் குடியிருக்கும் விநாயகருக்கும் பொருத்தும். பக்கங்களை அழகாகவும், ஒளிமையாகவும், எல்லோரும் படிக்கும் வண்ணம் [illegible] யிருக்கிறார் திருமதி சரோஜினி அவர்கள். இந்த பாமாலைகள் அவரது ஆழ்ந்த மதப்பற்றுதலையும், விநாயகரில் அவருக்கு உள்ள ஈடுபாட்டையும் காட்டுகிறது.

விநாயகருக்கு மட்டுமல்லாமல், சிவபெருமான், உமாதேவியார், நடராஜர், வைகாபி, துர்க்கை, சுப்ரமணியர், வைரவர் சண்டேஸ்வரர் ஆகிய கடவுளர்களும் பாமாலையில் இடம் இருக்கிறது. இறைத் தொண்டாக இவ்வெளியீட்டை வெளிக் கொணர்ந்து இருக்கும், சரோஜினிதேவி இந்த வெளியீட்டை விற்று வரும் நிதி சிவஸ்ரீ கோவிலுக்கே சேரும் என்று கூறியிருக்கிறார். புத்தகம் வாங்குபவர்களுக்கு இலவணக்கத்திற்கு உதவும் பாமாலையோடு, கோயில் நிதிக்கு உதவும் புண்ணியமும் இரட்டிப்பாகக் கிடைக்கப் போகிறது.

திருமதி சரோஜினி யாழ்ப்பாணம் மறவன்புலவை சேர்ந்தவர். மறவன்புலவு சுவாமிகள் வல்லி வித்தியாசாலையிலும் [illegible] யாழ்ப்பாணம் [illegible] மகளிர் கல்லூரியிலும் கல்வி பயின்றவர். நவசக்தி விநாயகர் (சிவஸ்ரீ, விக்டோரியா) ஆலய கட்டிடப் பணிக்கு பெரும் காரணமாக இருந்தவர். இந்நூலை சென்னை காந்தளகம் அச்சகத்தார் அழகுற அச்சேற்றியுள்ளனர்.

நூல் ஆசிரியர் சரோஜினி தேவி நவசக்தி ஆலயத்தில் அவரது கணவர் வி.சிவகப்பிரமணியம் சங்கல்பம் செய்து குடமுழுக்கு (1992 சித்திரை) நிகழ்ந்தபோது எடுக்கப்பட்ட படத்தை இங்கு காண்கிறீர்கள்.

(NAVA SAKTHI VINAYAGAR TEMPLE. P.O.BOX 88, VICTORIA. SEYCHELLES.

விநாயகர் பாமாலை

தென் ஆபிரிக்கா, விக்டோரியா சிசெல்ஸ் நாட்டில் ஒரு விநாயகர் கோவில் இறை யுணர்வும், தமிழ் மணமும் பரப்பிக் கொண்டு இருக்கிறது.

9

அமைப்பும் ஆள்கையும்

ஒழுங்கான ஆட்சிக்குழு அமைப்பு, கண்டிப்பான நிதி நடைமுறை, நம்பகத்தன்மை மற்றும் அமைப்பின் உறுப் பினரிடையேயுள்ள ஈடுபாட்டுடன் கூடிய இலட்சிய கொள்கைப் பிடிப்பும் உன்னத நோக்கும் ஆகியனவே ஒரு தன்னார்வ நிறுவனத்தின் தொடர்ச்சிக்கும் நீண்டகால வெற்றிக்கும் காரணி களாக அமையும். சீசெல்சு இந்துக் கோயில் சங்கம் ஆரம்ப காலத்திலிருந்து இத்தகைய எல்லைகளுள் அமையச் செயற் பட்டது. முதற்குறிக்கோளாகிய கோயில் திருப்பணியை தீர்மானித்த எட்டு ஆண்டுகளுள் காலத்தில், இதனாலன்றோ நிறுவமுடிந்தது. இதையிட்டுப் பெருமைப்படாது இருக்க முடியாது. தங்களால் உருவமைக்கப் பெற்ற தலைமைத்துவம் எந்தக் குறிக்கோளை அடையச் செயலாற்றியதோ அதற்கான தங்குதடையற்ற ஆதரவை யும் ஒத்துழைப்பையும் சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரும் தனித்தும் கூட்டாகவும் வழங்கியதன் விளைவே இந் நாட்டை அலங்கரித்து விளங்கும் நவசக்தி விநாயகர் ஆலயமாகும்.

கோயில் சங்கம் அதன் பொதுச்சபையால் வகுக்கப்பட்ட, சங்கங்களின் பதிவாளரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சங்க விதி களுக்கு அமைவாகவே செயல்படுகின்றது. விதிகட்குச் செய்யப் படும் திருத்தங்கள் அவ்வப்போது பதிவாளருக்கு அனுப்பப் படும். சங்க நிதியாண்டு தை முதல் மார்கழி ஈறாக என மாற்றப் பட்டது. நிதியாண்டு நிறைவாகி மூன்று திங்களுள் - அதாவது பங்குனி 31ஆம் நாளுக்கு முன்பாக ஆண்டுப் பொதுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டுமென்பது சட்ட பூர்வமான நியதியாகும்.

சங்கத்திற்குத் தொடர் நிலைப்பாட்டை உறுதி செய்வதற்காக வாக்குரிமையும் பதவிகளும் இந்நாட்டுக் குடிமக்களுக்கு மட்டுப் படுத்தப்பட்டுள்ளன.

தொடக்க காலம் முதல் சங்கப் பணிகள் தங்கு தடையின்றி நடப்பதற்கு பதவி வழியல்லாத ஆறுக்கு மேற்படாத பணிப் பாளர்களை ஆட்சிக் குழு நியமிக்கும் மரபு பல ஆண்டுகளாக இடம் பெற்றுத் தற்போது நீக்கப்பட்டுள்ளது. ஒவ்வொருவரும் தமக்கென ஒதுக்கப்பட்ட துறைகளைக் கவனித்த முறை சங்க வளர்ச்சியைத் துரிதப்படுத்தியது. நிதி நடைமுறைக்கு சோ. பால சுந்தரமும் சமயப்பூசை நடைமுறைகளை ச. பழநி, க. இரத்தின சபாபதிப் பிள்ளை, வை. இரகுநாத முதலியார் ஆகியோரும், நிதி சேகரிப்புக்கு க. இரத்தினசபாபதிப் பிள்ளை, ப.வீ. மகாதேவா ஆகியோரும் இணைப்புச் செயற்பணிகட்கு யானும் பொறுப் பாயிருந்தோம்.

காலத்துக்குக் காலம் நடாத்தப்படும் ஆண்டுப் பொதுக் கூட்டங்களில் புதிய ஆட்சிக் குழுவைத் தெரிவு செய்வதும், ஆண்டு அறிக்கை மற்றும் வரவு செலவு ஏற்பு, தீர்மானங்கள் ஆகியன நிறைவேற்றப்படுவது வழமையாகும். இற்றை வரை பதினான்கு பொதுக் கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. தொடக்க காலம் முதல் பொதுக் கூட்ட வரவு குறைவாக இருந்த போதி லும், 1996 முதல் அதிகரித்து 1999இல் உச்சக்கட்டமான 251-ஐ எட்டியது. (விவரம் இணைக்கப்பட்டுள்ளது) 1994இல் முதற் கூட்டம் பிறேமியர் கட்டட மண்டபத்தில் நடைபெற்றது. 1985 முதல் 1997 வரை வழிபாட்டு மண்டபம் மற்றும் கோயில் மண்டபங்களிலும் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. 1998இல், முதல் முறையாக தேசிய அரங்கிலும், 1999, 2001 ஆண்டுக் கூட்டங்கள் அனைத்துலக மாநாட்டு மண்டபத்திலும், 2000 ஆண்டில்

இங்கிலிஷ் நிவர் சமூக மண்டபத்திலும் 2002இல் தேசிய அரங்கிலும் நடாத்தப்பட்டன.

வேண்டிய நேரங்களில் கருத்தமைந்த விதி மாற்றங்கள் செய்வது வழமையாகும். துணைத்தலைவர் பதவி புதிதாகக் கார்த்திகை 1989இலும், துணைச் செயலாளர், துணைப் பொருளாளர் பதவிகள் புதிதாக 1987இலும் வாழ்நாள் உறுப் புரிமைக் கட்டணமாக 2500 ரூபாவும் ஒப்புதல் தரப்பெற்றன.

ஒருவர் ஒரே பதவியைத் தொடர்ந்து மூன்று ஆண்டுகட்கு மேல் வகிக்கக் கூடாது என்ற புதிய விதிமுறையை 2000-ம் ஆண்டு மார்கழி 10ஆம் நாள் கூடிய பொதுக் கூட்டம் ஏற்றது. இரகசிய வாக்களிப்பு முறை 1997இல் தொடங்கி இன்றுவரை தொடர் கின்றது. ஆட்சிக் குழுவினால் அமைக்கப்படும் தேர்தல் குழு பொதுக் கூட்டத்தில் இடம் பெறும் தேர்தல்களை நடாத்து கின்றது. 2001 பொதுக் கூட்டத் தீர்மானப்படி கோவிலுக்கென ஓதுவார் ஒருவர் பதவியில் இருப்பார். அவரே கோவில் நாளாந்தக் கணக்குகட்கும் பொறுப்பாயுள்ளார்.

சிங்கப்பூரிலிருந்து ஜோதி மாணிக்கவாசகம், சோ. பாலசுந்தரம் ஆகியோர் அனுப்பிய இரு விளம்பரப் பலகைகள் வாராந்த, திங்கள் தோறும் நிகழும் குடமுழுக்கு விபரங்களை அறிவிப் பதற்குப் பயன்படுகின்றன. 1997 முதல் கோயிலுக்கென 324701 என்ற எண்ணில் தொலைபேசி வசதியும் 1193 என்ற எண்ணில் அஞ்சல் பெட்டி வசதியும் செய்யப்பட்டுள்ளன. கோயில் மண்ட பத்தில் மக்கள் கருத்துப் பெறுதற்கான பெட்டியும் இணைக்கப் பட்டுள்ளது. கோயில் பெயர் பொறித்த வண்ண விளம்பரப் பலகை 1995 முதல் ரிஎம்கேஆர். இராமுப்பிள்ளையின் உபய மாகக் கோவிலின் முகப்பில் பொருத்தப்பட்டுள்ளது.

தொடக்க காலத்திலிருந்து கோயில் அமையும் வரை இடம் பெற்ற பூசை குடமுழுக்கு நிகழ்ச்சிகள் யாவற்றையும் ஆகம முறைப்படி முறை தவறாது நிர்வகித்த பெருமையும் சிறப்பும் பெண்கள் சிலரையே சாரும்.

ஒரு சிறந்த ஆட்சி அமைப்பின் இலட்சியம், ஆள்கை முறையைச் சிறப்பாக மேலெடுத்துச் செல்லும் நோக்கத்தை கொண்டிருக்க தகுதியான இளைய சமூகத்தினருக்கு வேண்டிய பணிப்பயிற்சி கொடுத்து, வளரும் சந்ததியினருக்கு ஆள்கையைக் கையளிக்கும் நோக்கமுள்ளதாக அமைய வேண்டும். எந்தப் பொதுநிறுவனத்தின் வளர்ச்சியும் இளைய சந்ததியினர் ஈடு பாட்டுடனும் சமூகப் பொறுப்புணர்ச்சியுடனும் சரியான முறையில் தன்னலமற்ற பொது நோக்குடனும் கருமமாற்றுவதிலேயே பெரிதும் தங்கியுள்ளது. உதாரணமாக பாண்டியன் பிள்ளை கடுமையான அழுத்தம் காரணமாக சங்கப்பணியில் சேர்ந்து, 1995இல் சங்கச் செயலாளராகப் பதவி ஏற்றார்.

தீனு பிள்ளை தொடக்க ஆண்டான 1984 முதல் 1998 வரை - அதாவது 14 ஆண்டுகள் சங்கத் தலைவராகப் பணியாற்றினார். வரலாற்று நிகழ்வுகளான கோவிலுக்கான நிலமும், குடிமனைக் கான நிலமும் வாங்கியதும், முதற் கோயிலை அமைத்து இந்நாட்டில் இந்து சமயப் பாரம்பரியத்தை உருவாக்கியமையும் தீனு பிள்ளையின் தலைமையில் நிகழ்ந்தன. தீனுவின் உயரிய புரிந்துணர்வும் சகிப்புத்தன்மையே நமது சமுகத்தினர் அனை வரையும் சங்கத்துடன் இணைத்தது. பலதரப்பட்ட மோதல் களையும் தாண்டிக் கோயிலை ஒற்றுமையாக ஒன்றிணைந்து நிறுவ அவரால் முடிந்தது. மாற்றுக் கருத்துக்களையும் உள் வாங்கிப் பொதுக் கருத்தை உருவாக்கி அதன்படி இந்தப் புனிதப் பணியை நிறைவு செய்த தனுவின் பண்பை நாம் பாராட்டாமல்

இருக்க முடியாது. ''வேற்றுமையில் ஒற்றுமை'' காணும் அடிப் படைக் கொள்கை காரணமாகவே தீனுவின் தலைமையில் சங்கம் மேற்கொண்ட பணிகள் யாவும் வெற்றிகரமாக நிறைவுற்ற தென்பதைச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும்.

ஒரு நிறுவனத்தின் வளர்ச்சிப் பாதையில் பத்து வருடம் மிகவும் குறுகிய காலமாகும். ஆனால் மீளாய்வு செய்து கோவிலை மேலும் சிறப்புறச் செய்வதற்கு இது ஒரு தகுந்த கால கட்டமாகும். ஒப்பீட்டு ரீதியில் நோக்கும் போது இந்துக்கள் இந்நாட்டில் கடந்த இருநூறு ஆண்டுகள் வாழ்ந்த போதிலும் தமக்கென ஒரு ஆலயம் அமைக்க பல வருடங்கள் எடுத்ததைக் கருத்தில் கொள்ள வேண்டும். இந் நாட்டில் முதற்கோவிலாக இடம்பெற்று தனித்து விளங்கும் நவசக்தி விநாயகர் கோவில் இந்துக்களால் அமைக்கப் பெற்றாலும் தற்போது பலரின் பிரார்த்தனைக்குரிய பொது வழிபாட்டு மையமாக விளங்குகின்றது.

இக்கோவில் இந்நாட்டு அரசின், பேணிப் பாதுகாக்கப்பட வேண்டிய தேசிய நிறுவனங்களின் பட்டியலில் இடம் பெற் றுள்ளது. அதற்கான சட்ட வரைவுகளும் அமைக்கப்பட்டுள்ளன. இந்நாட்டு இந்துக்களால் நிருவாகிக்கப்பட்டாலும் சகலமக்களினது மதிப்புக்கும் மரியாதைக்கும் வழிபாட்டுக்கும் உரிய இடமாக மிளிர்கின்றது. இக்கோவில், பாரம்பரிய இந்து கலாச்சார விழுமியங் களான கட்டிடக்கலை சிற்பம் மற்றும் வழிபாட்டு முறைகளை பிரதிபலிக்கின்றது. இங்கு வரும் உலகளாவிய உல்லாசப் பயணிகள் இவற்றை இங்கேயே கண்டுகளிக்க இது ஒரு பெரு வாய்ப்பாகும். இக்கோயிலின் புகைப்படங்கள் பல வெளிநாட்டு வார, மாத வெளியீடுகளிலும் இணைய தளங்களிலும் பிரமாதமான இடத்தைப் பிடித்துள்ளது. ஆகவே எமது கோவிலின் சிறப்புக்களைப் பேணிப் பாதுகாத்து உன்னத நிலையில் ஒரு எடுத்துக்காட்டாக வைத்திருப் பது எமது தலையாய கடனாகும்.

எமது சங்கத்தின் ஆரம்பத்திலிருந்து நிர்வாக, மற்றும் கோவிற் காரியங்களில் இணைந்து செயலாற்றிய காரணத்தினால் சங்க முன்னேற்றத்திற்கும் கோயில் வளர்ச்சிக்கும் சிறந்த அடித் தளம் இங்கு அமைக்கப்பட்டுள்ளதென்பதை எம்மால் துணிந்து கூறமுடியும். இக்கோவில் சைவ ஆகம விதிகளின்படி அமைக்கப் பட்டு அதன்படியே நிகழ்வுகள் யாவும் அமைந்துள்ளதென்பது மண்டபத்தில் பொறிக்கப்பட்டுள்ள நினைவுச் சின்னத்தில் பதியப்பட்டுள்ளது நினைவு கூரப்பட வேண்டியதாகும். ஆகம விதிமுறைகள் தவறாது கடைப்பிடிப்பதனாலேயே கோவிலின் புனிதத் தன்மை என்றும் பேணப்படும். புனிதத்தன்மை குறைந் தால் கோயிலின் நோக்கத்தையே இழந்தவர்களாவோம்.

எமது சங்க நிர்வாகம் எம்மால் வகுக்கப்பட்டு சங்கங்களின் பதிவாளரால் அங்கீகரிக்கப்பட்ட விதிமுறைகளின்படியே நடை பெற வேண்டும். விதிமுறைகள் என்றும் வழுவாமல் கடைப் பிடித்தால்தான் சங்கத்தின் ஒழுங்கான தொடர்ச்சி, நடு நிலமை, நம்பகத்தன்மை ஆகியன நிலைநாட்ட முடியும். அடியார்களின் கருத்துக்களும் விருப்பு வெறுப்புக்களும் உள் வாங்கப் பட வேண்டும். கோவில் சமூகத்தின் பங்களிப்புடன் திட்டங்கள், நிகழ்ச்சிகள் யாவும் முறையாக வகுக்கப்பட்டு செயற்படுத்தினால் மாத்திரமே வளர்ச்சியும், ஒற்றுமையும் பெருகும்.

பொதுச்சேவையில் நம்பகத்தன்மை அவசியமான கோட் பாடு; சமய நிறுவனங்களில் தன்னலமற்ற சேவையும் நம்பகத் தன்மையும் என்றும் மேலோங்க வேண்டும். சமய நிறுவனங் களோ அல்லது கோவிலோ ஒரு சிலருக்கோ, தனி நபருக்கோ, ஒரு குழுவினருக்கோ அல்லது குடும்பச்சொத்தோ அல்லாத பொது நிறுவனமாக என்றும் விளங்க வேண்டும். ஆகவே

நிகழ்ச்சிகள், திட்டங்கள், நிதி நிருவாகம் யாவும் நம்பகத்தன்மை யோடு கூடிய மக்கள் ஈடுபாடும் மிக அவசியம்; வளர்ச்சிக்கு வழி கோலும் மக்கள் ஈடுபாடும், விழிப்புணர்ச்சியும் மாத்திரமே சனநாயக வளர்ச்சிக்கு மூல வேர்களாகும். இச்சுவர்க்க தீவில் அமைந்துள்ள ஒரேயொரு இந்துக் கோவிலை ஒரு எடுத்துக் காட்டாக பேணிப் பாதுகாத்து வளர்க்கும் பெரிய பொறுப்பும், பணியும் இந்நாட்டு இந்துக்கள் ஒவ்வொருவருக்கும் உண்டு.

இந்நாட்டு இளஞ்சந்ததியினர், கூடிய அக்கறையுடன் ஈடு பட்டு நிறைந்த சமயப் பொறுப்புகளை ஏற்று நடாத்துவதோடு, மேலான பொறுப்புணர்ச்சியுடன் செயலாற்றி எமக்கு கிடைத்த அரிய சமயப் பாரம்பரியங்களை அடுத்தடுத்து வரும் சந்தத யினருக்கு ஒழுங்காகவும் முறையாகவும் வழங்க முன் வர வேண்டும். சமூகப் பணிகளின் போது ஏற்படும் துன்ப துயரங் களை சமூகத்தினருடன் சேர்ந்து பகிர்ந்து கொள்ளும் மனப்பாங்கு முறையாக வளர வேண்டும்.

அறிவியல் உலகளாவிய ரீதியில் வளரும் வேளையில், விஞ்ஞான நோக்கில் அறிவியல் சார்ந்த கலாச்சார விழுமியங் களின் வளர்ச்சி மனிதப் பண்பின் உயர்வுக்கும் நாகரீக மேம் பாட்டுக்கும் வழிவகுக்கும்.

இந்நாட்டில் இடம் பெற்றுள்ள அருள்மிகு நவசக்தி விநாயகர் ஆலயம் தன்னலமற்ற, சேவைச் சிந்தனையுடன் கூடிய சிந்தனை யாளர்களின் அர்ப்பணிப்புடன் நிறைந்த சேவையினால் எழுப்பப் பட்ட ஒரு சிறந்த அடித்தளமாகும். அதைப் பேணிக்காத்து மற்றவர்கட்கு ஒரு எடுத்துக்காட்டாக செய்வது இங்குள்ள இந்துக் கள் அனைவரினதும் தலையாய பணியாகும்.

இக்கோவில் அமைப்பு இந்நாட்டு இந்துக்களின் முதல் கூட்டு முயற்சியாகும். இம் முயற்சியின் பூரணத்துவத்திற்கு இந் நாட்டு அரசின், ஆரம்பம் முதல் இற்றை வரையிலான ஆதரவை நாம் என்றும் நன்றியுடன் நினைவு கூரவேண்டும். எமது நிகழ்ச்சி கள் பலவற்றிலும் வெவ்வேறு அமைச்சர்கள் கலந்து கொண்டு சிறப்பிப்பது எமக்கு என்றும் பெருமை சேர்ப்பதாகும். இந்நாட்டு இந்துக்கள் அனைவரும், எமக்கு என்றும் தங்கு தடையற்ற ஆதரவு அளித்து வரும் இந்நாட்டுத் தலைவர் பிரான்ஸ் ஆல்பர்ட் ரெனே அவர்கட்கு என்றும் மறவாத கடப்பாடுடையவர்களா வோம்.

★

ANNUAL GENERAL MEETINGS

YEAR	1984	1985	1986	1987	1988	1989	1990	1991	1992	1993	1994
DATE OF AGM	18 JUNE	29 SEPT		6 JUNE		2 DEC			23 FEB	5 DEC	
ATTENDANCE	–	–		–		–			12	–	
CHAIRMAN	K.D. PILLAY	K.D. PILLAY		K.D. PILLAY		K.D. PILLAY			K.D. PILLAY	K.D. PILLAY	
VICE- CHAIRMAN	–	–		–		T.M. PILLAY			T.M. PILLAY	T.M. PILLAY	
SECRETARY	N.SUBAS	N.SUBAS		N.SUBAS		CHAN-DRABABU NAIDU			CHAN-DRABABU NAIDU	J. MANIKKA VASAGAM	
FUNCTIONARY	V. SIVA	V. SIVA		V. SIVA		V. SIVA			V. SIVA	–	
ASST SECRETARY	–	–		–		–			–	–	
TREASURER	V.R. NAIKEN	V.R. NAIKEN		V.R. NAIKEN		P S. PILLAY			R. KANNU-SAMY NAIDU	M.D DURAISAMY PILLAY	
FUNCTIONARY	S. BALA SUNDARAM	S. BALA SUNDARAM		S. BALA SUNDARAM		V.SIVA			V.SIVA	V.SIVA	
ASST TREASURER	–	–		–		–			–	–	

AND OFFICE BEARERS

1995	1996	1997	1998	1999	2000	2001	2002
22 JUNE	21 JULY	9 MARCH	20 SEPT	28 MARCH	10 DEC	18 MARCH	31 MARCH
–	80	83	69	251	78	44	55
K.D. PILLAY	K.D. PILLAY	K.D. PILLAY	T.M. PILLAY	T.M. PILLAY	T.M.K.R. RAMU PILLAY	T.M.K.R. RAMU PILLAY	T.M.K.R. RAMU PILLAY
T.M. PILLAY	T.M.K.R. RAMU PILLAY	N.RAMANI	T.M.K.R. RAMU PILLAY	T.M.K.R. RAMU PILLAY	T. SHANMU-GAM PILLAY	T. SHANMU-GAM PILLAY	T. SHANMU-GAM PILLAY
V. T. PANDIAN	ARUL-SELVAN	T.M.K.R. RAMU PILLAY	V .T. PANDIAN	V. T. PANDIAN	V. T. PANDIAN	T.V NAGANA-THAN	T.V NAGANA-THAN
–	–	–	–	–	–	–	–
–	–	V.M. PILLAY	T. SHANMU-GAM PILLAY	T. SHANMU-GAM PILLAY	K. DURAI PILLAY	K. DURAI PILLAY	K. DURAI PILLAY
T.V NAGANA-THAN	V.A. PADMA NABAN	V.A. PADMA NABAN	T.V NAGANA-THAN	T.V NAGANA-THAN	T.V NAGANA-THAN	M. NATESAN	S. NATARAJAN
V.SIVA							
–	–	G. DHARMA LINGAM	M. NATESAN	M. NATESAN	M. NATESAN	M. VELMU-RUGAN	M. VELMU-RUGAN



திருவோடு காய்க்கின்ற திருநாடு
திருவோட்டுப் பனை (சீசெல்ஸ்)